**ஐக்கிய அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்துடன் கைச்சாத்திடுவதற்குத் தயாரிக்கப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை வரைவு, உத்தேச கருத்திட்டங்கள் மற்றும் அவற்றைச் செயற்படுத்துவதற்குத் தயாரிக்கப்பட்டுள்ள முறைமையை மீளாய்வு செய்வதற்கான குழு**

# இறுதி அறிக்கை

2020 ஜூன் 23

**மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபன முன்மொழிவுகளை மீளாய்வு செய்வதற்கான குழு**

பிரதம அமைச்சர் அலுவலகம்,

இல.58, சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை,

கொழும்பு 07.

# மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபன முன்மொழிவுகளை மீளாய்வு செய்வதற்கான குழு

**<u>தலைவர்:</u>**

கொழும்பு பல்கலைக்கழகத்தின்

பொருளியல் பிரிவின் பேராசிரியர்,

ரீ லலிதசிறி குணருவன்

**<u>அங்கத்தவர்கள்</u>**

போக்குவரத்துப் பொருளாதார நிபுணர்,

டீ எஸ் ஜயவீர

ஜனாதிபதி சட்டத்தரணி,

நிஹால் ஜயவர்தன

பட்டயக் கட்டிடக்கலைஞர்

நாலக ஜயவீர

# முன்வைப்புரை மற்றும் பொழிப்பு

ஐக்கிய அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்துடன் (MCC) கைச்சாத்திடுவதற்குத் தயாரிக்கப்பட்டுள்ள உடன்படிக்கைகள் மற்றும் ஏற்புடைய கருத்திட்டங்கள் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின்படி 2020 ஜனவரி 1 ஆந் திகதி விசேட நுண்ணாய்வுக் குழுவொன்று பிரதம அமைச்சரின் செயலாளரினால் நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவுக்கு ஏற்புடைய கடமைப்பொறுப்புக்கள் பட்டியலின் (Terms of Reference) விதிமுறைகளுக்கு ஏற்ப வழங்க வேண்டிய ஆரம்ப அறிக்கையை 2020 பெப்ரவரி 14 ஆந் திகதி சமர்ப்பிப்பதற்கு குழு நடவடிக்கை மேற்கொண்டது. குழுவின் இடைக்கால அறிக்கையொன்று 2020 மார்ச் மாத இறுதியில் கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கொரோனா வைரஸ் காரணமாக ஏற்பட்ட நிலைமையினால் குழுவின் பணிகளை நிறைவு செய்வதற்கு 2020 ஜூன் மாதம் 30 ஆந் திகதி வரை பிரதம அமைச்சரின் செயலாளரினால் கால அவகாசம் வழங்கப்பட்டது. குழுவின் இடைக்கால விதந்துரைகள் உள்ளடங்கிய குறிப்பொன்றை 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி வழங்குவதற்கும், அதன் பின்பு இறுதி அறிக்கையைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கும் குழு தீர்மானித்தது.

குழுவின் நுண்ணாய்வுகளின்போது, மிலேனியம் சவால்கள் (MCC) கொடை, அதனுடன் தொடர்புடைய கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை (Compact), நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கை (PIA) மற்றும் அதற்காக நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கம்பனியின் (MCA – Sri Lanka) கம்பனி அமைப்பு விதிகள் ஆகியன குழுவின் ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அதற்கு மேலதிகமாக, ஆவணங்கள் உசாத்துணையாக கொள்ளப்பட்டதுடன், கருத்தரங்குகளில் பங்குபற்றுவதன் மூலம் மற்றும் அரச அதிகாரிகள் உட்பட ஏற்புடைய தரப்பினருடன் கலந்துரையாடி இந்த முன்மொழிவுகளை உருவாக்குவதற்குப் பயன்டுத்தப்பட்டுள்ள செயன்முறை மற்றும் உத்தேச கருத்திட்டங்கள் தொடர்பாக நுண்ணாய்வு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், பகிரங்க ஊடக அறிவித்தல் மூலம் இது தொடர்பான அறிவுடைய தொழில்சார் சமூகம் மற்றும் சமூக அமைப்புக்கள் உட்பட பொதுமக்களின் கருத்துக்களும் முன்மொழிவுகளும் பெறப்பட்டன.

ஏறக்குறைய ஆறு மாத காலம் முழுவதும் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், நுண்ணாய்வுகளின் தகவல்கள், அதனடிப்படையிலான அவதானங்கள் மற்றும் மேற்கொள்ள முடியுமான தர்க்கரீதியான முடிவுகள், குறித்த உடன்படிக்கை தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்வது உகந்தது எனக் குழு கருதுகின்ற விதந்துரைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய குழுவின் இறுதி அறிக்கை இவ்வாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

மூலதன வளங்களுக்கான பற்றாக்குறையுடைய, கடன் சுமையினால் துவண்டு போயுள்ள இலங்கை போன்ற நாடொன்றின் பொருளாதார வளர்ச்சிக்கான தடைகளை அகற்றுவதற்கான முதலீடுகளுக்குத் தேவையான நிதி வளங்களை நாட்டின் வெளிநாட்டுக் கடன் சுமையினை அதிகரித்துக் கொள்ளாது பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் MCC கூட்டு ஒப்பந்தக் கொடைகள் முன்மொழிவு ஊடாக கிடைக்கும் என வெளிப்படையாகப் புலப்படினும், ஆழமாக ஆராயும்போது, MCC கூட்டு ஒப்பந்த முன்மொழிவின் நிபந்தனைகள் மற்றும் அதனைச் செயற்படுத்துவதற்கான உத்தேச முறைமை காரணமாக இலங்கைக்குப் பாதகமான தாக்கங்கள் ஏற்படுவதற்குப் பலமான வாய்ப்பு உருவாகியுள்ளது என்பது தெளிவாகிறது. அடிப்படையில் பொருளாதார வளர்ச்சிக்கான தடைகளை இனங்காண்பதற்காகவும், உத்தேச MCC உடன்படிக்கைகள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குவதற்காகவும் இலங்கை அரசின் நிறுவப்பட்ட நிறுவனக் கட்டமைப்பினுள் போதிய வெளிப்படைத்தன்மை மற்றும் பல்துறை பங்கேற்பு பகுப்பாய்வுச் செயன்முறையொன்று பின்பற்றப்படவில்லை என்பது குழுவின் அவதானமாகும். இதன் காரணமாக, இலங்கையின் நோக்கங்கள் மற்றும் நலனை உறுதிப்படுத்தி, அதில் காணப்பட முடியுமான அபாயங்களை அகற்றும் வகையில், கூட்டு ஒப்பந்தம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கைகளை வரைவு செயதல், கருத்திட்டங்களை உருவாக்குதல் ஆகியன இடம்பெறவில்லை என்பது குழுவின் முக்கியமான அனுமானம் ஆகும்.

அதன் பெறுபேறாக, (அ) இந்த MCC கொடையைப் பயன்படுத்தி செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களில், இலங்கையின் தேசிய, சமூக, பொருளாதார நலன்கள் மீது பாதகமான தாக்கங்கள் ஏற்பட முடியுமான சில அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன எனவும், (ஆ) கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை, நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கை, அதற்காக நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்ட கம்பனியின் கம்பனி அமைப்பு விதிகள் வரைவு ஆகியவற்றில் இலங்கையின் அரசியலமைப்புக்கு மற்றும் நாட்டின் சட்ட அமைப்புக்கு இணங்கிச் செல்லாமலிருப்பதற்கு வாய்ப்புடைய பிரிவுகள், ஏற்பாடுகள் மற்றும் தேசிய நோக்கங்கள், இறையாண்மை, தேசிய பாதுகாப்பு ஆகியவற்றில் பாதகமான முறையில் தாக்கம் செலுத்தக் கூடிய ஏனைய நிபந்தனைகளும் உள்ளடங்கியுள்ளன எனவும் குழு முடிவு செய்கிறது.

மேலும், MCC முன்மொழிவுகள் அபிவிருத்திக் கொடையாக வெளிப்படையில் தென்படினும், அது அமெரிக்க இந்து - பசுபிக் மூலோபாயத்திற்கு இணக்கமாக உருவாகியுள்ள கருத்திட்ட முன்மொழிவாக இருக்கலாம் எனவும், அதனால் தற்போது உருவாக்கப்பட்டுள்ள MCC முன்மொழிவுகள் செயற்படுத்தப்படின், அது ACSA, SOFA ஒப்பந்தங்களுக்கான குறைநிரப்பியாக அமைந்து, இலங்கையானது அமெரிக்காவின் போர் வியூகங்களுக்கான பங்குதாரராக மாறுவதற்கான வாய்ப்பினைப் புறந்தள்ள முடியாது எனவும், குழு விசேடமாக குறிப்பிடுகிறது.

எனவே, தற்போதைய முன்மொழிவுகளில் உள்ளடங்கியுள்ள நிபந்தனைகள் மற்றும் கருத்திட்டச் சட்டகத்துடன் இந்த கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையை நிராகரிக்க வேண்டும் எனவும், அது தொடர்பாக குறைந்தபட்சமேனும் கருத்திற்கொள்வதற்கு கருதுவதாயின், அதற்கு முன்னர் மேலே (அ) இல் குறிப்பிட்டுள்ள அபாயங்களையுடைய கருத்திட்ட அம்சங்கள் மற்றும் (ஆ) இன் கீழ்வரும் செயற்படுத்தல் முறைமைகள், நிறுவனக் கட்டமைப்புக்கள் மற்றும் அதற்காக வரைவு செய்யப்பட்டுள்ள உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் மற்றும் உள்ளடங்கியுள்ள சட்டரீதியான சட்டகங்கள் சம்பந்தமாக பொருத்தமான சரிசெய்தல்கள், நீக்குதல்கள், திருத்தங்களைச் செய்ய வேண்டும் எனவும், குழு முக்கியமாக விதந்துரை செய்கிறது.

அத்துடன், அவ்வாறான தேவையான திருத்தங்களின் பின்பும், உடன்படிக்கை நிபந்தனைகள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பாக பரந்தளவிலான, வெளிப்படைத்தன்மையுள்ள முறைமையொன்று ஊடாக தொழில் வல்லுநர்கள் உட்பட பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்று, அதன் பின்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளப்படும் பொருத்தமான பெரும்பான்மை அனுமதியின்றி, இந்த MCC கூட்டு ஒப்பந்த முன்மொழிவு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படக் கூடாது எனவும் குழு மேலும் விதந்துரைக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| லலிதசிறி குணருவன் | டீ.எஸ். ஜயவீர | நிஹால் ஜயவர்தன | நாலக ஜயவீர |
| (தலைவர்) | (அங்கத்தவர்) | (அங்கத்தவர்) | (அங்கத்தவர்) |

2020 ஜுன் 23 ஆந் திகதி
கொழும்பில்.

**நன்றிகள்.....**

*ஏறக்குறைய ஆறு மாத காலம் முழுவதும்*
*இந்த பொறுப்பான பணியை நிறைவேற்றுவதற்காக உழைக்கும்போது*
*எமது அழைப்பின் பேரில் தேவையான தகவல்களை வழங்கி,*
*ஆவணங்களை வழங்கி, கலந்துரையாடல்களில் பங்குபற்றி*
*பெறுமதியான ஒத்துழைப்பினை நல்கிய*
*நாட்டின் எதிர்காலம் தொடர்பாக சிந்திக்கின்ற – நலனை விரும்புகின்ற அறிவார்ந்த பொதுமக்களுக்கு...........*
*மற்றும் சமகாலத்தில் பதவிகளை வகிக்கின்ற மற்றும் இதற்கு முன்பு பதவிகளை வகித்த அரச அதிகாரிகளுக்கு..........*

*இந்தப் பொறுப்பை நிறைவேற்றும்போது*
*அதற்கான சகல உட்கட்டமைப்பு வசதிகள், உதவி மற்றும் ஒத்துழைப்பு நல்கிய*
*பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் ஒட்டுமொத்த பணியாட்தொகுதிக்கு, மற்றும் விசேடமாக*
*அபிவிருத்தி உத்தியோகத்தர் (பயிலுநர்) டப்.ஜீ. ஸ்ரீநாத் ருவன் சமீர அவர்களுக்கு,*
*முகாமைத்துவ சேவை உத்தியோத்தர் கே.ஜே.ரீ. உபயரத்ன அவர்களுக்கு,*
*பிரதம அமைச்சரின் உதவிச் செயலாளர் முதிதா அந்திராஹென்னதி அவர்களுக்கு,*
*பிரதம அமைச்சரின் செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் அசித செனவிரத்ன அவர்களுக்கு,*
*பிரதம அமைச்சரின மேலதிக செயலாளர் ஹர்ஷ விஜேவர்தன அவர்களுக்கு......*

*இந்தப் பணியின் செயற்பாட்டு மையாக தனிச்சிறப்பான பணியை ஆற்றிய*
*பிரதம அமைச்சரின் செயலாளர் காமினீ செனரத் அவர்களுக்கு.....*

*இந்தச் செயற்பாட்டின்போது தேவையான அனைத்து ஊக்குவிப்புக்கள் மற்றும் உதவிகளையும் வழங்கிய*
*அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் செயலாளர் கலாநிதி பி பீ ஜயசுந்தர அவர்களுக்கு.....*

*தேசியரீதியாகவும் ஆய்வுரீதியாகவும் மிகவும் கூர்உணர்வுடைய,*
*கொள்கை – திட்டமிடல் மற்றும் கருத்திட்டங்களை மதிப்பிடுவதுடன்,*
*வெளிநாட்டலுவல்கள் சம்பந்தமாக மிகவும் ஆழமான பகுதிகளை*
*தொட்டுணர்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும் வகையில்*
*இந்த சவாலை வழங்கி*
*எம்மீது நம்பிக்கை வைத்த*
*அமைச்சரவைக்கு......*
*கௌரவ பிரதம அமைச்சருக்கு.....*
*மற்றும்*
*அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு......*

*......... குழு இத்தால் தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.*

அரும்பதங்கள் மற்றும் சொற்பொருள் விளக்கம் / Glossary & Definitions

| **தமிழ் பாவனை** | **English Translation / Meaning** |
|---|---|
| அனுமானம் | Inference |
| கையகப்படுத்தல் மற்றும் குறுக்குச் சேவை ஒப்பந்தம் | Acquisition and Cross Servicing Agreement (ACSA) |
| பொருளாதார மீள்வரவு வீதம் | Economic Rate of Return (ERR) |
| உத்தரவாதம் மூலம் வரையறுக்கப்பட்ட கம்பனி | Company Limited by Guarantee |
| நிலக் குவிப்பு | Land Accumulation |
| கடமைப்பொறுப்புக்கள் பட்டியல் | Terms of Reference |
| காங்கிரஸ் சபை அறிவித்தல்கள் | Congressional Notifications<br>MCC Board Notifications |
| நாற்தரப்பு பாதுகாப்புக் கலந்துரையாடல் | Quadrilateral Security Dialog (QSD) |
| தரவுத்தளங்கள் | Databases |
| இருதரப்பு வெளிநாட்டுதவி உடன்படிக்கைகள் | Bilateral Foreign Aid Agreements |
| பங்குதாரர்கள் | Stakeholders |
| கணனி மென்பொருள்கள் / செயலிகள் | Computer Softwares / Apps |
| முதநிலை நிகழ்ச்சித்திட்டம் / முதநிலை வசதி | Threshold Program / Threshold Facility |
| பெறுகை முறைமைகள் | Procurement Guidelines |
| குறித்த விடயம் | Subject |
| பல்துறை ஆய்வு | Multi-directional Examination |
| புலமைச் சொத்து | Intellectual Property |
| திறவுச் சொற்கள் / முக்கிய சொற்கள் | Keywords |
| கடும் உழைப்புடன்கூடிய ஆய்வு | Due Diligence |
| நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கை | Program Implementation Agreement (PIA) |
| நிகழ்ச்சித்திட்ட சொத்துக்கள் | Program Assets |
| மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் | Millennium Challenge Corporation (MCC) |

| | |
|---|---|
| மிலேனியம் சவால்கள் சட்டம் | Millennium Challenge Act of 2003 of USA |
| கூட்டு ஒப்பந்தம் /கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை | Compact / Compact Agreement |
| கூட்டு ஒப்பந்த அபிவிருத்திக் குழு | Compact Development Team (CDT) |
| தடைகள் / தடைகள் மதிப்பீடு | Constraints / Constraints Analysis |
| கம்பனி அமைப்பு விதிகள் | Articles of Association |
| இராணுவம் நிலைகொள்ளச் செய்யும் ஒப்பந்தம் | Status of Forces Agreement (SOFA) |

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அணுகல் | 10 |
| 2. | பின்னணி | 11 |
| 3. | குழுவின் ஆய்வு முறைமை | 17 |
| 4. | குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தகவல் திரட்டல் | 21 |
| 4.1 | கூட்டு ஒப்பந்தத்தை உருவாக்குவதற்குப் பின்பற்றப்பட்டுள்ள முறைமைகளை நுண்ணாய்வு செய்தல் | 21 |
| 4.2 | MCC தொடர்பாக அதனைப் பெற்றுக்கொண்ட ஏனைய நாடுகளின் அனுபவங்கள் | 26 |
| 4.3 | MCC முன்மொழிவுகள் தொடர்பாக பொதுமக்கள் கருத்துக்களின் பொழிப்பு | 32 |
| 5. | MCC முன்மொழிவுகளுக்கு ஏற்புடைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகள்ரீதியான நுண்ணாய்வு | 37 |
| 5.1 | குழுவின் சுயாதீன ஆய்வாராய்வு அவதானங்கள் | 38 |
| 5.2 | ஆவணங்கள் மூலம் வெளிப்படும் சட்டரீதியான முரண்பாடுகள் | 49 |
| 5.3 | சட்டரீதியான பரிசீலணைகளின் பொழிப்பு | 53 |
| 6. | MCC முன்மொழிவுகளில் உள்ளடங்கியுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான அவதானங்கள் | 55 |
| 6.1 | காணி நிர்வாகச் சீர்திருத்த முன்மொழிவுகள் | 56 |
| 6.2 | போக்குவரத்து அபிவிருத்தி முன்மொழிவுகள் | 60 |
| 7. | புவியரசியல் தாக்கங்களை மதிப்பீடு செய்தல் | 62 |
| 8. | கருத்துரைகள் மீளாய்வு | 66 |
| 9. | முடிவுகள் மற்றும் விதந்துரைகள் | 74 |
| | இணைப்புகள் | 80 |
| | அட்டவணைகள் | 84 |

1. <u>அனுகல்</u>

ஐக்கிய அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் (Millennium Challenge Corporation or MCC) ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதற்காக கைச்சாத்திடுவதற்குத் தயாரிக்கப்பட்டுள்ள உடன்படிக்கைகளை மீளாய்வு செய்து, விதந்துரைகளை முன்வைப்பதற்காக விசேட குழுவொன்றை நியமிக்க கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட PMO/CM/64/2019 ஆம் இலக்க பத்திரத்திற்கு, 2019 டிசம்பர் 18 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி கிடைக்கப்பெற்றது. (இணைப்பு – 1A). அந்த தீர்மானத்திற்கு ஏற்ப பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கிய குழு PMO/2/2/2/Rev.MCC ஆம் இலக்க, 2020 ஜனவரி 01 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் நியமிக்கப்பட்டது:

பேராசிரியர் லலிதசிறி குணருவன் (குழுவின் தலைவர்)

போக்குவரத்துப் பொருளாதார நிபுணர் டீ எஸ் ஜயவீர

ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜயவர்தன

பட்டயக் கட்டிடக் கலைஞர் நாலக ஜயவீர

அந்த நியமனத்திற்கு ஏற்புடைய கடமைப்பொறுப்புக்கள் விபரத்தில் (இணைப்பு – 1B) குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு குழுவின் உசாவல்கள், தகவல் சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. குழுவின் சமர்ப்பிப்புக்களாக முதலில் ஆரம்பக் குறிப்பொன்று (அட்டவணை – 1A) 2020 ஜனவரி 13 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டதுடன், இரண்டாவதாக குழுவின் ஆரம்ப அறிக்கையை (அட்டவணை – 1B) 2020 பெப்ரவரி 14 ஆந் திகதி கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்பின்பு, குழுவின் நுண்ணாய்வுரீதியான கவனத்திற்கு உட்படுத்தப்பட்ட புதிய தகவல்கள், விடயங்கள் மற்றும் ஆய்வுகளையும் கருத்திற்கொண்டு ஆரம்ப அறிக்கையில் உள்ளடங்கியுள்ள தகவல்கள், அவதானங்கள் மற்றும் விதந்துரைகள் மீண்டும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. குழுவின் கடமைப்பொறுப்புக்கள் பட்டியலின்படி, 2020 மார்ச் மாதம் நிறைவடைவதற்கு முன்பு குழுவின் இடைக்கால அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. எனினும் கொரோனா வைரஸ் காரணமாக நாட்டில் ஏற்பட்ட நிலைமையினால் அவ்வாறு சமர்ப்பிப்பது நடைமுறைச் சாத்தியமாக அமையவில்லை. எனவே 2020 மார்ச் 29 ஆந் திகதிய கடிதம் மூலம் (இணைப்பு – 1C) மற்றும் தொலைபேசி ஊடாக அது தொடர்பில் பிரதம அமைச்சரின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டதுடன், அதற்கேற்ப குழுவின் இறுதி அறிக்கையைக் கையளிப்பதற்கு பிரதம

அமைச்சரின் செயலாளரினால் PMO/2/2/2/Rev.MCC ஆம் இலக்க, 2020 ஏப்ரல் 17 ஆந் திகதிய கடிதம் மூலம் (இணைப்பு – 1D) 2020 ஜூன் 30 ஆந் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், குழுவின் கடமைப்பொறுப்புக்கள் விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அது வரை மேற்கொள்ளப்பட்ட நுண்ணாய்வுகளின் தகவல்கள் மற்றும் அனுமானங்களை சாராம்சப்படுத்தி குழுவின் இடைக்கால விதந்துரைகள் குறிப்பொன்றை அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கான பிரதியொன்றுடன் 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்க குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (அட்டவணை 1C). அதன்பின்பு அந்த இடைக்காலக் குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் இந்த கூட்டு ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கு ஏற்புடைய அரச அதிகாரிகளை அழைத்து ஜனாதிபதி செயலகத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலிலும் குழு அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். 2020 ஜனவரி 01 ஆந் திகதி முதல் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஆய்வுகளின் தகவல்கள் மற்றும் விசாரிப்புக் குறிப்புக்களின் மீளாய்வுகளும், குழுவின் அவதானங்கள் மற்றும் விதந்துரைகளும் உள்ளடங்கிய இறுதி அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப்படுகிறது.

## 2. பின்னணி

மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் (MCC) என்பது குறை அபிவிருத்தியுடைய நாடுகளில் வறுமையை ஒழித்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் முன்பே காணப்படும் தடைகளை (Constraints) அகற்றுவதற்காக ஐக்கிய அமெரிக்காவினால் நிதியுதவி வழங்குவதற்கென அமெரிக்க காங்கிரஸின் 2003 ஆம் இலக்க மிலேனியம் சவால்கள் சட்டம் மூலம் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். அதன் நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ள ஏற்புடைய பெற விரும்பும் நாடுகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்படும் ஒரு தனிநபர் வருமான எல்லைக்கு குறைவான வருமானமுடையனவாகவும், MCC இன் கொடைகளைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதிகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி MCC சட்டத்தில் கையொப்பமிட்ட ஆரம்ப காலப்பகுதியிலேயே, அதாவது 2004 பெப்ரவரி 11 ஆந் திகதி இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகத்தினால் இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் செயலாளருக்கு கடிதமொன்று மூலம், MCC கொடைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கோரிக்கை விடுக்க இலங்கைக்குத் தகுதியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது (இணைப்பு – 2A). அதற்கேற்ப இலங்கை அரசாங்கத்தினால் தமது முன்மொழிவுகள் MCC க்கு சமர்ப்பிக்கப்பட்டதாக 2004 டிசம்பர் 29 ஆந் திகதிய, 373 ஆம்

இலக்க தூதுவர் குறிப்பில் (இணைப்பு – 2B) குறிப்பிடப்பட்டிருப்பினும்[1], அவ்வாறான முன்மொழிவுகள் உள்ளடங்கிய ஆவணங்கள் எதுவும் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அதன்பின்பு, 2005 டிசம்பர் 8 ஆந் திகதிய (இணைப்பு – 2C) மற்றும் 2006 டிசம்பர் 7 ஆந் திகதிய (இணைப்பு – 2D) கடிதங்கள் ஊடாகவும் இது தொடர்பாக MCC நிறுவனத்தினால் இலங்கைக் குடியரசின் அப்போதைய அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு மீண்டும் அறிவிக்கப்பட்டிருப்பினும், 2015 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தினால் இது தொடர்பாக ஏதாவது அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குழுவினால் அவதானிக்க முடியவில்லை.

2015 இல் புதிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த பின்பு தான் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனக் (MCC) கொடைகள் பற்றிய கலந்துரையாடல்கள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. அதற்கேற்ப இலங்கை அரசாங்கத்தினால் முதலில் MCC முதநிலை வசதிக்காக (Threshold Facility) கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், MCC கட்டுப்பாட்டுச் சபையினால் 2015 டிசம்பர் 16 ஆந் திகதி MCC முதநிலை நிகழ்ச்சித்திட்டத்திற்கு (Threshold Program) இலங்கை தெரிவுசெய்யப்பட்டுள்ளது (இணைப்பு – 2E). இதற்காக இலங்கை அரசாங்கம் சார்பில் MCC நிறுவனத்துடன் கலந்துரையாடுவதற்கான நடவடிக்கைகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் தலைவர் சரித ரத்வத்த அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்கு கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, மங்கள யாபா, அனுஷ்க விஜேசிங்க, கலாநிதி என் மொலகொட ஆகியோரின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளதாகவும், பிரதம அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள PMO/06/03/CM/56/2016 ஆம் இலக்க, 2016 ஜூலை 5 ஆந் திகதிய அமைச்சரவை நிருபம் ஊடாக வெளிப்படுகிறது (இணைப்பு – 2F). இந்த முதநிலை நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடையவாறு ஆரம்பமாக 13 தடைகள் MCC நிறுவனத்தினால் இனங்காணப்பட்டுள்ளதாகவும், அவற்றில் "காணிகளுக்கான அணுகல்" எனும் தடை வலுவானது எனவும், MCC இன் முதநிலை நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளரினால் 2016 ஒக்டோபர் 19 ஆந் திகதிய “Sri Lanka: Working Summary of Constraints” எனும் தலைப்பிலான கடிதம் மூலம் ஐக்கிய அமெரிக்காவின் வொஷிங்டனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அறியத் தரப்பட்டுள்ளது (இணைப்பு – 2G).

[1] Diplomatic Note – 373 dated December 29, 2004

எவ்வாறாயினும், அவ்வாறான முதநிலை வசதிக்கான உடன்படிக்கை வரைவொன்று தயாரிக்கப்பட முன்னர், 2016 டிசம்பர் 13 ஆந் திகதி இந்த செயல்முறை MCC கூட்டு ஒப்பந்தமாக (MCC Compact) மேல்நிலைப்படுத்தப்படுள்ளமை புலனாகிறது (இணைப்பு – 3A). அதற்கேற்ப 2017 மார்ச் 14 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, MCC அலுவல்களின் ஒருங்கிணைப்புக்காக கருத்திட்ட அலுவலகமொன்றைப் பிரதம அமைச்சர் அலுவலகத்தினுள் நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுகிறது (இணைப்பு – 3B).

அதன்பின்பு, 2017 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஹாவாட் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அபிவிருத்தி தொடர்பான மத்திய நிலையத்தினால் (Harvard University's Centre for International Development or HUCID) வெளியிடப்பட்ட இலங்கை தடைகள் தொடர்பான மதிப்பீட்டறிக்கையில் (Sri Lanka Constraints Analysis Report) குறிப்பிடப்பட்டுள்ளவாறு (இணைப்பு – 4) இலங்கையின் பிரதம அமைச்சர் அலுவலகத்தில் நிறுவப்பட்ட கொள்கை அலகு மற்றும் MCC நிறுவனத்தினால் HUCID இன் உதவியுடன் MCC கூட்டு ஒப்பந்த வசதிக்காக இலங்கையின் வளர்ச்சிக்கான தடைகள் பற்றிய மதிப்பீடொன்று மீண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெளிவாகிறது. இந்த மதிப்பீட்டின்போது பின்வருமாறு ஒன்பது துறைகள் பரிசீலணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.[2]

i. காணிகளுக்கான அணுகல்
ii. வரிக் கொள்கையின் நிலையற்ற தன்மை
iii. போக்குவரத்துத் துறை
iv. நீர்
v. கல்வி மற்றும் ஆற்றல்கள்
vi. மின்சக்தி
vii. தொழில் ஒழுங்குவிதிகள்
viii. மூலதன நிதி அணுகல்
ix. சுகாதாரம்

---

எவ்வாறாயினும், 2018 ஜுன் 21 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்புக்கு ஏற்ப பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் தடைகளாக பின்வரும் ஆறு துறைகள் MCC க்கு அடிப்படையாக முன்மொழியப்பட்டுள்ளமை மேற்குறிப்பிட்ட அறிக்கையுடன் ஒப்பீட்டளவில் முரண்படுகிறது:

i. காணி நிர்வாகச் செயன்முறை
ii. போக்குவரத்துத் துறையின் வளர்ச்சிக் காரணிகள்
iii. கமத்தொழில் வழங்கல் துறையின் வளர்ச்சி
iv. பேலியகொடை – மாலபே ஆகாயப் பெருந்தெரு
v. மின்சக்தி மற்றும் எரிசக்தித் துறை அபிவிருத்தி
vi. உயர் தொழிநுட்பப் பல்கலைக்கழகமொன்றை நிறுவுதல்

2017 பெப்ரவரி 28 ஆந் திகதிய, PMO/06/03/CM/19/2017 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் மூலம் (இணைப்பு – 3C) முன்னுரிமைத் தடைகளை அகற்றும் வகையில் MCC நிறுவனத்தினால் தமது ஆலோசனைக் குழுவொன்று ஊடாக 2016 பெப்ரவரி மற்றும் டிசம்பர் மாதங்களுக்கிடையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் பின்வரும் மூன்று துறைகள் இனங்காணப்பட்டுள்ளதாக பிரதம அமைச்சரினால் அமைச்சரவைக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது:[3]

(i) கொள்கைகளின் நிலையற்ற தன்மை (ii) காணிகளைப் பெற்றுக்கொள்ளுதல்

(iii) போக்குவரத்து

இந்த மதிப்பீடு 2016 நவம்பர் மாதம் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக 2019 ஏப்ரல் மாதம் 25 ஆந் திகதியில் MCC நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள காங்கிரஸ் சபை அறிவித்தலின் (இணைப்பு – 3D) தகவல் பிற்சேர்க்கை மூலம் தெளிவாகிறது.[4]

மேலும் தடைகளை மதிப்பீடு செய்வது தொடர்பான மேற்குறிப்பிட்ட HUCID அறிக்கையின் முடிவுகளே, 2017 மே மாதம் 9 ஆந் திகதி பிரதம அமைச்சர் அலுவலக கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் தலைவர் சரித ரத்வத்த அவர்களினால் MCC க்கு அனுப்பப்பட்ட எண்ணக்கருரீதியான குறிப்பு மூலம் (இணைப்பு – 3E) (i) போக்குவரத்துத் துறையின் அபிவிருத்தி மற்றும் (ii) காணி நிர்வாகச் செயன்முறை ஆகிய இரு கருத்திட்டங்களையும் கடும் உழைப்புடன்கூடிய ஆய்வுகளுக்கு (due diligence) உட்படுத்துமாறு அறிவிப்பதற்கும், அதற்கேற்ப 2017 நவம்பர் 10 ஆந் திகதி பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கூட்டு ஒப்பந்த அபிவிருத்திக்

---

[3] இது MCC நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய காங்கிரஸ் சபை அறிவித்தலில் (இணைப்பு – 3D) ஏற்புடைய தடைகள் தொடர்பான மதிப்பீடு தமது ஒத்துழைப்புடன் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுவதாக கூறும் குறிப்புடன் முரண்படுகிறது. மேலும் இந்த முன்னுரிமைத் தெரிவு பொருளாதார மீள்வரவு வீதங்களை (Economic Rate of Return, எனப்படும் ERR) அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படினும், அவ்வாறான கணக்கிடுதலொன்று இலங்கையில் எந்தவொரு மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் நிறுவனத்தினாலும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் இணைப்பு iii இலும், 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய காங்கிரஸ் சபை அறிவித்தலில் குறிப்பிடப்படும் ERR பெறுமானங்கள் எந்த அடிப்படையில் எவ்வாறான பயன் - செலவின மதிப்பீட்டின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது என்பதும் பற்றிய தகவல்களைக் குழுவுக்கு வழங்க இந்த முன்மொழிவுகளை இலங்கை சார்பில் முகாமைத்துவம் செய்துள்ள பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கொள்கை உருவாக்கல் அலகு அல்லது தேசிய திட்டமிடல் திணைக்களம் அல்லது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் வழங்க முடியவில்லை. அத்துடன் அதற்கு ஏற்புடைய எந்தவிதமான தகவலும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் இது தொடர்பான கடிதக் கொடுக்கல் வாங்கல்களில் உள்ளடங்கவில்லை எனவும், அந்த கணக்கிடுலை மேற்கொண்ட முறைமைகள் பற்றிய தகவல்களைக் குழுவுக்கு வழங்குவதற்கு MCC நிறுவனம் அல்லது இலங்கையிலுள்ள அதன் வதிவிடப் பிரதிநிதிப் பிரிவு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதையும் விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

[4] 2017 மார்ச் மாதம் இலங்கை அரசாங்கத்தினால் கூட்டு ஒப்பந்தத்தை உருவாக்கும் குழு (எனப்படும் CDT) உத்தியோகபூர்வமாக நிறுவப்படுவதற்கு முன்பே இது செய்யப்பட்டுள்ளமை முக்கிய அம்சமாகும்.

குழுவினால் (Compact Development Team) MCC நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள "MCC கூட்டு ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான கருத்திட்ட முன்மொழிவில்" (அட்டவணை – 2) இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு போக்குவரத்து மற்றும் காணிகளின் அதியுயர் கட்டமைப்புக்களை மேம்படுத்தும் கருத்திட்டங்களை (Stimulate Economic Growth Through Improvements in Transport and land Infrastructure in Sri Lanka) முன்வைப்பதற்கும் அடிப்படையாக அமைந்துள்ளமை தெளிவாகிறது.[5]

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குவதற்கான 7.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொடையொன்றுக்காக 2017 ஜூலை 26 ஆந் திகதியும், அதன் பின்பு அதனை 10 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதற்கு 2018 ஜூன் 18 ஆந் திகதியும் ஆரம்ப உடன்படிக்கைகள் இரண்டில் தற்போது வரை திறைசேறியின் செயலாளர் இலங்கை அரசாங்கம் சார்பில் MCC நிறுவனத்துடன் கையொப்பமிட்டுள்ளார்.

அதன்பின்பு, MCC நிறுவனம் போக்குவரத்துத் துறையினதும், காணி நிர்வாகத் துறையினதும் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக நிதி வழங்க இணங்கியுள்ளதாக பிரதம அமைச்சர் அவர்களினால் PMO/NC/09/2018 ஆம் இலக்க, 2018 ஜூன் 21 ஆந் திகதிய குறிப்பு மூலம் அமைச்சரவைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது (இணைப்பு – 5C).

அதற்கேற்ப, இறுதியில் காணி நிர்வாக அமைப்புச் சீர்திருத்தம் (67.3 மில்லியன் அமெ.டொலர்) மற்றும் போக்குவரத்துத் துறையின் அபிவிருத்திக்கான (350.0 அமெ.டொலர்) முன்மொழிவுகள் ஏற்புடைய கருத்திட்ட மதிப்பீடுகள் மற்றும் கண்காணிப்பு (12.7 மில்லியன் அமெ.டொலர்), நிகழ்ச்சித்திட்டங்கள் நிர்வாகம் (50.0 மில்லியன் அமெ.டொலர்) என்பவற்றுடன் மொத்தமாக 480 மில்லியன் அமெ.டொலர் MCC கொடைகளைப் பயன்படுத்துவதன் மூலம் செயற்படுத்துவதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய, 2018 ஆம் ஆண்டின் இறுதியில் MCC கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நோக்கம் காணப்பட்டதாகவும், அதற்கான உடன்படிக்கைகளை வரைவு செய்த

[5] தடைகளை மதிப்பீடு செய்வது தொடர்பான HUCID அறிக்கை (2017) தவிர இத்தெரிவுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது எனக் கருதப்பட முடியுமான ஏனைய ஏதாவது மதீப்பீட்டு அறிக்கையொன்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 2017 மே 9 ஆந் திகதிய எண்ணக்கருரீதியான குறிப்புக்கு முன்பு இலங்கையின் உள்ளக மத்திய நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்டுள்ளதாக குழுவினால் அவதானிக்க முடியவில்லை. எவ்வாறாயினும், அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட மூன்று தடைகளில் செயற்படுத்துவதற்கு முதலீட்டு நிதியிடல் அவசியப்படுகின்ற இரண்டு துறைகளுக்கு ஏற்புடைய கருத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளமை புலனாகிறது. "கொள்கைகளின் நிலையற்ற தன்மை" சம்பந்தமான தடையினை அகற்றுவதற்கு நிதிரீதியான முதலீட்டுடன்கூடிய கருத்திட்டமொன்று அவசியமில்லை எனவும், அதற்கு கொள்கைரீதியான தீர்மானமொன்று மாத்திரமே தேவை எனவும் குழுவின் அவதானம் செலுத்தப்படுகிறது.

பின்பு 2018 ஒக்டோபர் 1 முதல் 5 வரை அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் இது தொடர்பான இறுதிக் கலந்துரையாடல் இணக்கப்பாட்டுக் கூட்டமொன்று இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் 2018 ஒக்டோபர் மாத இறுதிப் பகுதியில் இலங்கையில் அரசாங்கம் மாற்றமடைந்தமையினால் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியாமல் போயுள்ளது என்பது புலனாகிறது. 2019 ஏப்ரல் மாதம் 25 ஆந் திகதியில் MCC நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள காங்கிரஸ் சபை அறிவித்தலில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதம அமைச்சர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு, அப்பதவிக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களை நியமித்தமை மூலம் அரசியலமைப்பு நெருக்கடியொன்று உருவானதாகவும், உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரதம அமைச்சர் பதவியிலிருந்து விலகிய பின்பு மீண்டும் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டமை மூலம் அந்த நெருக்கடி முடிவுக்கு வந்ததாகவும், "ஜனநாயக முறையில்" உருவான அந்த அரசாங்கம் கலந்துரையாடல்கள் இணக்கப்பாடுகளில் உடன்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் MCC நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி அறிவித்துள்ளதாகவும் விசேடமாக குறிப்பிட்டுள்ளமை மூலம் இது வெளிப்படுகிறது (தகவல் பிற்சேர்க்கை. இணைப்பு – 3D). அதற்கேற்ப மீண்டும் ஆரம்பமானதாக வெளிப்படும் இந்த செயற்பாட்டின் விளைவாக கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சத்திடுவதற்கான அமைச்சரவைத் தீர்மானமொன்று 2019 ஒக்டோபர் 29 ஆந் திகதி (இணைப்பு – 5D) மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், MCC கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை தொடர்பாகவும் ஏற்புடைய கருத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பாகவும் நாட்டினுள் உருவான எதிர்ப்பு மற்றும் விசேடமாக சங்கைக்குரிய உடுதும்பர காசியப்ப தேரர் அவர்கள் சுதந்திர சதுக்கத்தில் MCC உடன்படிக்கைக்கு எதிராக ஆரம்பித்த உண்ணாவிரதம் காரணமாகவும் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியாமல் போயுள்ளது.

2019 ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்பு இது சம்பந்தமாக கலந்துரையாடிய புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை, MCC உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு 2019 ஒக்டோபர் 29 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பெறப்பட்டிருந்து அனுமதியை இடைநிறுத்தி, ஏற்புடைய உடன்படிக்கை, கருத்திட்டங்கள் மற்றும் அதற்கு ஏற்புடைய ஏனைய விடயங்களை மீண்டும் மீளாய்வு செய்து அரசாங்கத்திற்கு விதந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கதக இந்த விசேட குழுவை நியமிக்க 2019 டிசம்பர் 18 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப, இலங்கையின் அரசியல்-பொருளாதார இறையாண்மையை வேறு எந்தவொரு தேவைப்பாட்டிற்காகவும் அர்ப்பணிக்க முடியாது என்ற மறுக்க முடியாத அளவுகோலினைத் தனது பரிசீலணைச் சட்டகமாக பயன்படுத்தி குழு தனது ஆய்வுகளை மேற்கொண்டது.

அந்த ஆய்வுகள் மற்றும் அவற்றின் மூலம் பெறப்பட்ட அவதானங்கள் மற்றும் இறுதி முடிவுகளைச் சுருக்கமாக உள்ளடக்கி குழுவினால் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கை இவ்வாறு சமர்ப்பிக்கப்படுகிறது. இது முதலில் வரைவாக சமர்ப்பிக்கப்படுவதுடன், அதற்கு மேலதிக தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் அல்லது மேலும் பரந்தளவிலான ஆய்வுகள் தேவைப்படின் குழு அப்பணியை நிறைவேற்றித் தருவதற்குத் தயாராக உள்ளது எனவும், அவ்வாறு அவசியப்படாவிடின் இந்த அறிக்கையைக் குழுவின் இறுதி அறிக்கையாக கருதுவது பொருத்தமானது எனவும் குழு முன்மொழிகிறது.

## <u>3. குழுவின் ஆய்வு முறைமை</u>

2020 ஜனவரி 1 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவின் ஆய்வுகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டன:

(அ) குழுவுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட MCC கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை (Compact Agreement): இணைப்பு – 6,[6] அதற்கு ஏற்புடைய நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கை (Program Implementation Agreement or PIA): இணைப்பு – 7, செயற்பாட்டை வழிநடாத்துவதற்காக நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள MCA-Sri Lanka எனும் உத்தரவாதம் மூலம் வரையறுக்கப்பட்ட கம்பனியின் (a Company Limited by Guarantee) கம்பனி அமைப்பு விதிகளின் வரைவு (Articles of Association): இணைப்பு – 8, ஏற்புடைய அமைச்சரவைப் பத்திரங்கள் - குறிப்புக்கள் - தீர்மானங்கள் மற்றும் இந்த முன்மொழிவுகளுக்கு ஏற்புடையவாறு பெற்றுக்கொள்ள முடியுமான ஏனைய ஆவணங்கள் / அறிக்கைகளை ஆய்வு செய்தல்;

(ஆ) இலங்கை சார்பாக கூட்டு ஒப்பந்தத்தை உருவாக்குவதறகு மற்றும் அதற்கு ஏற்புடைய தடைகளை மதிப்பீடு செய்வதில் பங்களிப்புச் செய்த அதிகாரிகள், கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பணிகளை ஒருங்கிணைப்புச் செய்யும் குழுவின் (Compact Development Team or CDT)

---

[6] ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை வரைவுகள் உள்ளதாக அவதானிக்கப்பட்டது. பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் குழுவுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்ட கூட்டு ஒப்பந்த உடன்படிக்கைப் - Execution Version – பிரதியே இதன்போது ஆய்வுக்கு அடிப்படையாக அமைகிறது (இணைப்பு – 6). நிதியமைச்சின் உத்தியோபூர்வ இணையத்தளத்திலும் அவ்வாறான மேலும் பிரதியொன்று உள்ளது. அந்த வரைவுகளிடையே சில வித்தியாசங்கள் உள்ளமை அவதானிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், MCC உடன் உடன்படிக்கைகளைச் கைச்சாத்திடுவதற்காக 2019 மார்ச் 25 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பு (இணைப்பு – 3G) ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள Execution Version பிரதிக்கே 2019 ஒக்டோபர் 29 ஆந் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை புலனாகிறது.

அங்கத்தவர்கள் மற்றும் 2018 ஒக்டோபர் 1 முதல் 5 ஆந் திகதி வரை இந்த கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை தொடர்பாக MCC நிறுவனத்துடன் இடம்பெற்ற இறுதிக் கலந்துரையாடல் இணக்கப்பாட்டுக் கூட்டங்களில் இலங்கை அரசாங்கம் சார்பாக கலந்துகொண்ட பிரதிநிதிகள் குழுவின் அங்கத்தவர்கள் உட்பட அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடுதல்;

(இ) MCC நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுதல்;

(ஈ) நாட்டினுள் செயற்படும் பல்வேறுபட்ட தொழில்சார் குழுக்கள் மற்றும் அறிவாற்றல் மிகுந்த பிரஜைகளிடமிருந்து எழுத்து மூலமான கருத்துக்கள் - மாற்றுக் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் குழுவின் முன்பே கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்வந்த நிறுவனங்கள் மற்றும் நபர்களுடன் கலந்துரையாடுதல்;

(உ) அரசின் ஏற்புடைய நிறுவனங்களிடம் இது தொடர்பான உத்தியோகபூர்வ தகவல்களை உசாவி ஆய்வு செய்தல்;

(ஊ) MCC உடன்படிக்கை சம்பந்தமாக இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் பேணிச் செல்லப்பட்ட கோப்புக்களை ஆய்வு செய்தல்;

(எ) MCC சம்பந்தமான சர்வதேச அனுபவ அறிக்கைகளை ஆய்வு செய்தல்;

(ஏ) MCC உடன்படிக்கை சம்பந்தமாக இணையத்தளம், கருத்தரங்குகள் போன்ற பல்வேறுபட்ட மூலாதாரங்கள் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அவற்றைப் பரிசீலணைக்கு உட்படுத்தல்.

மேலே (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள் மற்றும் தகவல் திரட்டல்களின் சுருக்கமான குறிப்புக்கள் இணைப்பு -9A எனவும், மேலே (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொதுமக்கள் கருத்தாய்வின் பெறுபேறாக பல்வேறுபட்ட நபர்கள், வர்த்தக நிறுவனங்கள், தொழில்சார் நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள், வணிக சபைகள் மற்றும் சமூக அமைப்புக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகளின் சுருக்கம் இணைப்பு – 9B எனவும், இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குழுவினால் அரச நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள், அறிக்கைகள் மற்றும் மேலே (உ) இல் குறிப்பிடப்படுகின்றவாறு அரச நிறுவனங்களிடம் உசாவியவற்றுக்கு ஏற்புடையவாறு அந்த நிறுவனங்களினால் உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்பட்ட எழுத்துமூலமான தெளிவுபடுத்தல்கள் இணைப்பு – 10 என இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

அந்த அறிக்கைகளில் விசேடமாக வெளிநாட்டுத் தொடர்புகள் அமைச்சு (இணைப்பு – 10A மற்றும் அட்டவணை - 3:F1-70), தேசிய திட்டமிடல் திணைக்களம் (இணைப்பு – 10B), வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் (இணைப்பு – 10C), காணி அமைச்சு (இணைப்பு – 10D), காணி ஆணையாளர் நாயகம் (இணைப்பு – 10E), நில அளவையாளர் நாயகம் (இணைப்பு – 10F), போக்குவரத்து அமைச்சு (இணைப்பு – 10G) மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு (இணைப்பு – 10H) உள்ளிட்ட அரச நிறுவனங்களினால் இந்த நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதற்கு ஏற்புடைய கருத்திட்டங்களை உருவாக்குவதற்காக வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு மற்றும் பகுப்பாய்வுகள், நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்தும்போது நாட்டின் சட்ட அமைப்பு தொடர்பாக காணப்பட முடியுமான ஒவ்வாத்தன்மைகள், தேசிய பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் வழங்கியுள்ள தெளிவுபடுத்தல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் அளவில் பெரியது என்பதால், மேலே (ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் நான்கு கோப்புக்கள் மற்றும் (எ) இல் குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேச அனுபவத் தகவல்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படாவிடினும், அவை ஒழுங்குமுறைப்படி அட்டவணை – 3 (F1: பக்க இலக்கம் 1-1324 வரை, F2: பக்க இலக்கம் 1325-1580 வரை, F3: பக்க இலக்கம் 1581-2018 வரை, F4: பக்க இலக்கம் 2019-2671 வரை) எனவும், அட்டவணை – 4 எனவும் குறிப்பீடு செய்து முறையான தொடரிலக்கத்துடன் இந்த அறிக்கையின் ஒரு பகுதியாக கருதப்படும் வகையில் பிரதம அமைச்சர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, இந்த ஆய்வு தொடர்பாக அரசின் உயரதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுடன் சில கலந்துரையாடல்களில் கலந்துகொண்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கேற்ப 2019 டிசம்பர் 30 ஆந் திகதி கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள், பிரதம அமைச்சரின் செயலாளர் உள்ளிட்ட குழுவினருடன் ஆரம்பக் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. அத்துடன், 2020 ஜனவரி 24 ஆந் திகதி பிரதம அமைச்சரின் செயலாளருடனும், அவரின் தலைமையில் கௌரவ சட்டமா அதிபரின் பிரிநிதியொருவருடனும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2020 ஜனவரி 29 ஆந் திகதி ஜனாதிபதியின் செயலாளர் அவர்களுடனும் குழு அங்கத்தவர்களின் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. அதேபோன்று 2020 பெப்ரவரி 10 ஆந் திகதி அமைச்சரவையின் செயலாளர் அவர்களுடனும் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டு கருத்துக்கள் பரிமாறப்பட்டன. மேலும் குழு தனது ஆரம்ப அறிக்கையை வழங்கும்போது அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் அவர்களுடன் மீண்டும் ஒருமுறை கருத்துக்களைத் தெளிவுபடுத்துகின்ற கலந்துரையாடலொன்று 2020 பெப்ரவரி 17 ஆந் திகதி இடம்பெற்றதுடன், அதே போன்றதொரு கலந்துரையாடல் 2020 பெப்ரவரி 24 ஆந் திகதி கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுடனும் நடாத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் அழைக்கப்பட்டு இந்த முன்மொழிவுகளுடன் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகளின் பங்கேற்புடன் 2020 மே மாதம் 05 ஆந் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் இது சம்பந்தமாக மேலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அதன் பின்பு, பிரதம அமைச்சரின் செயலாளரினால் ஏற்பாடு செய்யப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இது சம்பந்தமாக ஆய்வு செய்கின்ற அதிகாரிகள், காணி ஆணையாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் திறைசேறியின் பிரதிச் செயலாளருடன் பகுப்பாய்வுரீதியான கலந்துரையாடலொன்றும், வெளிநாட்டுத் தொடர்புகள் அமைச்சின் செயலாளர் உட்பட அந்த அமைச்சின் அதிகாரிகளுடன் கருத்துப் பரிமாறலொன்றும், 2020 மே மாதம் 15 ஆந் திகதி நடாத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட கலந்துரையாடல்கள் மற்றும் குழுவின் அவதானங்களின் பெறுபேறாக கௌரவ சட்டமா அதிபரின் கருத்து மற்றும் அறிவுறுத்தல்களை உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொள்வதற்காக சில கோரிக்கைக் கடிதங்களை (இணைப்பு – 11) கௌரவ சட்டமா அதிபருக்கு பிரதம அமைச்சரின் செயலாளர் ஊடாக அனுப்புவதற்கும் குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாக (அ) தேசிய பொருளாதாரப் பேரவையினால் 2019 மே மாதம் 18 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானங்கள் மற்றும் விதந்துரைகள் இணைப்பு – 12 எனவும், (ஆ) அப்போதைய அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2017 மார்ச் 10, 2019 ஏப்ரல் 01, 2019 ஜூலை 17, 2019 ஜூலை 29, 2019 ஆகஸ்ட் 23 ஆகிய திகதிகளையுடைய அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் அவதானங்கள் இணைப்பு – 13 எனவும், இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையில் "இணைப்புக்கள்" எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் இந்த அறிக்கையுடனேயே இணைக்கப்பட்டுள்ளன. இங்கே "அட்டவணைகள்" எனக் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புக்கள், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் இந்த அறிக்கையின் ஒரு பகுதியாக கருதப்படும் வகையிலும் இலகுவாக உசாத்துணையாகக் கொள்வதற்கு முடியுமான வகையிலும் தொடரிலக்கமிடப்பட்டு பிரதம அமைச்சர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

## 4. குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தகவல் திரட்டல்

4.1 கூட்டு ஒப்பந்தத்தை உருவாக்குவதற்குப் பின்பற்றப்பட்டுள்ள முறைமைகளை நுண்ணாய்வு செய்தல்

வெளிநாடுகளுடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ளும்போது இறையாண்மையுடைய அரசொன்று தனது நாட்டிற்கு, மக்களின் நலனுக்கு மற்றும் நாட்டின் இறையாண்மையின் நிலைபேறான தன்மை மீது அந்த உடன்படிக்கையை மேற்கொள்வதன் மூலம் எவ்வாறான தாக்கம் ஏற்படலாம் என்பதே விசேடமாக கருத்திற்கொள்ள வேண்டிய விடயமாகும். அரச பொறிமுறை மற்றும் நிறுவனக் கட்டமைப்பு இதற்காகவே செயற்பட வேண்டும். எனவே தான் குறித்த மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபன உடன்படிக்கை சம்பந்தமாக ஆரம்பம் முதல் தடைகளை இனங்காணுதல் மற்றும் கூட்டு ஒப்பந்தத்தை உருவாக்குதல் ஊடாக உடன்படிக்கைக்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெறும் வரை பின்பற்றப்பட்டுள்ள செயன்முறை மற்றும் ஏற்புடைய அரச நிறுவனங்களிடமிருந்து அதற்கு கிடைத்துள்ள பங்களிப்பை ஆய்வு செய்வதற்கு குழு நடவடிக்கை மேற்கொண்டது.

இதற்காக, வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் மற்றும் நிதியுதவிகளை முகாமைத்துவம் செய்வதுடன் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் அதிகாரிகளுடனும், விசேடமாக MCC உடன்படிக்கையுடன் தொடர்புற்றுச் செயற்பட்டுள்ளதாக குழுவுக்கு அறியக் கிடைத்த நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுடனும் ஏற்புடைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு குழு நடவடிக்கை மேற்கொண்டது. மேலும் மேற்குறிப்பிட்டவாறு, அந்த நிறுவனங்களிடம் பிரதம அமைச்சரின் செயலாளர் ஊடாக விடயங்களை உசாவுவதற்கும் குழு நடவடிக்கை மேற்கொண்டது.

அந்தக் கலந்துரையாடல்கள் மற்றும் உத்தியோகபூர்வ உசாவுதல்கள் ஊடாக திரட்டப்பட்ட (விசேடமாக இணைப்பு – 9A மற்றும் இணைப்பு – 10 இல் உள்ளடங்கியுள்ள) தகவல்களை ஆய்வு செய்யும்போது குழுவினால் அவதானிக்கப்பட்ட மிகவும் முக்கியத்துவமுடைய விடயங்கள் மற்றும் நிகழ்வுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

i. கூட்டு ஒப்பந்த வசதிக்காக (Compact Facility) செய்யப்பட்டுள்ள தடைகள் தொடர்பான மதிப்பீடு (Constraints Analysis) அமெரிக்காவின் ஹாவட் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அபிவிருத்தி தொடர்பான மத்திய நிலையத்தினால் (Harvard University Centre for International Development or HUCID) மேற்கொள்ளப்பட்டுள்ளமை புலனாகிறது. அவ்வாறு செய்யும்போது இலங்கையிலுள்ள நிறுவனங்களைச் சேர்ந்த சில அதிகாரிகளின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம். எனினும் அது இலங்கையின் ஏற்புடைய அரச நிறுவனங்களினால் உத்தியோகபூர்வமாக உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு என ஏற்றுக்கொள்வதற்கு ஏற்புடைய எந்தவொரு காரணியும் அல்லது அறிக்கையும் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

ii. அத்துடன் MCC நிதியின் அடிப்படையில் செயற்படுத்துவதற்காக இறுதியில் தெரிவுசெய்யப்பட்டுள்ள காணி மற்றும் போக்குவரத்துத் துறைகள் இரண்டும் பொருளாதார வளர்ச்சிக்காக அகற்றப்பட வேண்டிய முன்னுரிமைத் தடைகள் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள முறைமையும் தெளிவற்றது. அத்தெரிவு பொருளாதார மீள்வரவு வீத (Economic Rate of Return or ERR) ஒழுங்குமுறைப்படி மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படினும், அவை போக்குவரத்துத் துறை மற்றும் காணி நிர்வாகத்திற்கு ஏற்புடையவாறு முறையே 19% மற்றும் 26% என (இணைப்பு – 6 இல் உள்ள கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் இணைப்பு – III, பக்க இலக்கம் 48-49) குறிப்பிடப்படினும், அது தொடர்பாக ஒப்பீட்டுரீதியான தரவுகள் மற்றும் அறிக்கைகளைக் கொண்ட தகவல்களை இலங்கை சார்பில் இந்தப் பணிகளை வழிநடாத்தியுள்ள கூட்டு ஒப்பந்த அபிவிருத்திக் குழுவினாலோ (CDT) அல்லது அரசின் ஏனைய நிறுவனமொன்றினாலோ குழுவுக்கு வழங்க முடியவில்லை.

iii. உத்தேச போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் காணி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சம்பந்தமாக அந்தந்த துறைகளில் இலங்கை நிறுவனங்கள் ஏற்புடைய துறைச் சட்டகத்தினுள் பகுப்பாய்வு செய்திருக்கலாமாயினும், அந்த முன்மொழிவுகள் நாட்டின் இறையாண்மை – தேசிய பாதுகாப்பு – பொருளாதாரத் தன்னுரிமை – சமூக நலன் உட்பட ஒட்டுமொத்த தேசிய நோக்கங்களின் மீதும் தாக்கம் செலுத்தக்கூடிய முறைகள் தொடர்பாக (இதன் இணைப்பு – 14 இல் உள்ளடங்கியுள்ள 2019 ஜுலை 4 ஆந் திகதியுடைய வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் ஓரளவுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள விளக்கவுரை தவிர) பேரளவுச் சட்டகமொன்றினுள் போதியளவில் இடம்பெற்றுள்ள எந்தவொரு விளக்கவுரையினதும் பெறுபேற்று அறிக்கையொன்று குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.[7]

iv. உதாரணமாக, அனைத்துக் காணிகளினதும் தகவல்களை வரையறையற்ற முறையில் எந்தவொரு நபருக்கும் பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் கணனித் தரவுகளைக் களஞ்சியப்படுத்துவது அரச பாதுகாப்பு தொடர்பில் பொருத்தமற்றது என முன்னாள் நில அளவையாளர் நாயகம், தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் மற்றும் இது பற்றிய அறிவுடைய தற்போதைய அதிகாரிகளும்

[7] பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள தேசிய பாதுகாப்பு தொடர்பான ஆய்வு நிறுவனத்தினால் (Institute of National Security Studies) இவ்வாறான பகுப்பாய்வொன்று செய்யப்பட்டுள்ளதாக குழுவுக்குத் தகவல் கிடைத்த போதிலும் அந்த ஆய்வின் தகவல்கள் அல்லது பெறுபேறுகள் சம்பந்தமான உத்தியோகபூர்வ அறிக்கையொன்று குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

குழுவின் முன்னிலையில் தெரிவித்த போதிலும், அந்த அபாயம் பொறுப்புக்கூற வேண்டிய மத்திய நிறுவனங்களுக்குத் தொடர்பாடல் செய்யப்பட்டுள்ளதாக குழுவுக்கு அறியக் கிடைக்கவில்லை.

v. விசேடமாக, காணி சம்பந்தமாக இந்த கருத்திட்டம் ஊடாக உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மென்பொருள்கள் மற்றும் கணனிச் செயலிகள் தொடர்பான தேவையான திறவுச் சொற்கள் அல்லது முழுமையான பாவனை உரிமை / சுதந்திரம் அல்லது பேணுகைப் பணிகள் தொடர்பான ஆற்றல் நில அளவைத் திணைக்களத்திற்கு வழங்கப்படுமா என்பது சம்பந்தமாக தெளிவான புரிதலொன்று திணைக்களத்தினுள் இல்லை என்பது இது பற்றி தற்போதைய நில அளவையாளர் நாயகம் குழுவின் முன்னிலையில் வழங்கிய தெளிவுபடுத்தல்கள் மூலம் வெளிப்பட்டது. கூட்டு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப அனைத்து நிகழ்ச்சித்திட்ட சொத்துக்களினதும் புலமைச் சொத்துரிமை MCC நிறுவனத்திற்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும் என்பதால், இந்த ஆற்றல் அல்லது சுதந்திரம் இலங்கைக்கு இல்லாமல் போவதற்கும் கருத்திட்டம் மூலம் தயாரிக்கப்படும் அவ்வாறான மென்பொருள்கள் அல்லது தரவு அமைப்புக்கள் அல்லது கணனிச் செயலிகளைப் பயன்படுத்த முனையும்போது இலங்கை நிறுவனங்கள் MCC நிறுவனத்திற்கு அல்லது ஏற்புடைய கம்பனிக்குப் பாவனைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியேற்படும் சந்தர்ப்பங்கள் உடன்படிக்கை நிபந்தனைகளிலிருந்து அகற்றப்படவில்லை என்பதும் குழுவின் அவதானமாகும். அதனை இது சம்பந்தமான பங்குதாரரான ஏற்புடைய அரச நிறுவனங்கள் அவதானிக்காமை மற்றும் அந்த நிலைமையினை சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை குழுவுக்கு வியப்பினை ஏற்படுத்துகிறது.

vi. அரச முதலீட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பான பேரளவு மதிப்பீடொன்றுக்காக மத்தியரீதியாக நிறுவப்பட்டுள்ள தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அல்லது வெளிநாட்டு ஒதுக்கீடுகள் மற்றும் கடன் முறைமைகளை முகாமைத்துவம் செய்வதற்கான பொறுப்புடைய வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு இந்த உடன்படிக்கை வரைவின்போது அல்லது கருத்திட்ட மதிப்பீட்டின்போது முன்னுரிமை வழங்கப்படாமை அல்லது நிறுவனரீதியாக அவற்றின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்படாமையே இந்த நிலைமைக்கு அடிப்படையாகும் என்பது குழுவின் அவதானமாகும். 2017 பெப்ரவரி 28 ஆந் திகதிய, 17/0440/702/016 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்திற்கான அவதானங்களாக இவ்வாறான பேரளவு மதிப்பீடொன்று அத்தியாவசியமானது என அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2017 மார்ச் 10 ஆந் திகதி சமர்ப்பித்துள்ள விதந்துரைகள் (இணைப்பு – 13) மற்றும் அந்த விதந்துரைகளுக்கு ஏற்ப

அமைச்சரவையினால் 2014 மார்ச் 14 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பின்பற்றப்படாமை பாரதூரமானதொரு விடயமாகும்.

vii. மேலும், இந்த MCC கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை (Compact), அதற்கு ஏற்புடைய நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கை (Program Implementation Agreement or PIA), செயன்முறையை வழிநடாத்துவதற்காக நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள MCA-Sri Lanka எனும் உத்தரவாதம் மூலம் வரையறுக்கப்பட்ட கம்பனியின் கம்பனி அமைப்பு விதிகள் வரைவைத் (Articles of Association) தயாரிப்பது தொடர்பான "உடைமையுரிமையை" பொறுப்பேற்பதற்கு அல்லது அவற்றின் உள்ளடக்கங்கள் தொடர்பான பொறுப்பை ஏற்பதற்குத் தயாரான எந்தவொரு அரச நிறுவனத்தையும் இது வரை குழுவினால் காண முடியவில்லை.

viii. இந்த அவதானங்களின் மத்தியிலேயே இச்செயன்முறையின் பணிகளை வழிநடாத்தியுள்ள நிறுவனக் கட்டமைப்பு தொடர்பாக கண்டறிவது பற்றி குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டது. அந்த உசாவல்களின்போது குழுவினால் பின்வரும் தகவல்களைத் திரட்டிக்கொள்ள முடிந்தது:

(அ) 2015 ஆம் ஆண்டின் பின்பு MCC முன்மொழிவு தொடர்பாக இலங்கை சார்பான ஒருங்கிணைப்பு இலங்கையின் பிரதம அமைச்சர் அலுவலகத்தில் நிறுவப்பட்ட கொள்கை உருவாக்கல் குழு மற்றும் கூட்டு ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கான குழு (CDT) ஆகியவற்றினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) அந்தக் குழுவின் தலைவர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின்போது, கூட்டு ஒப்பந்தத்திற்கு ஏற்புடைய கருத்திட்டங்களை உருவாக்குதல் அல்லது அதற்கு ஏற்புடைய நிபந்தனைகளை விளக்குவது அந்தக் குழுவினால் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு ஏற்புடைய அரச நிறுவனங்கள் உள்ளதாகவும், அவற்றை ஆய்வு செய்து நாட்டிற்குப் பிரதிகூலங்கள் ஏற்பட மாட்டாது என்பதை உறுதிப்படுத்துவது அந்தந்த நிறுவனங்களின் பொறுப்பு எனவும், அந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஏற்புடைய கலந்துரையாடல்களில் பங்குபற்றியுள்ளமையினால், அந்த அனைத்தும் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஒருங்கிணைப்புக் குழுவும் அதன் கீழ் நிறுவப்பட்ட MCC இலங்கை முகாமைத்துவ அலுவலகமும் அனுமானிப்பதாகவும் அந்த நிறுவனத் தலைவர்களின் நிலைப்பாடாக காணப்பட்டது (இணைப்பு – 9A).

(இ) மேலும், 2018 ஒக்டோபர் மாதம் 1 ஆந் திகதி முதல் 5 ஆந் திகதி வரை அமெரிக்காவில் இடம்பெற்ற கலந்துரையாடல் இணக்கப்பாட்டுக் கூட்டத்தில் இலங்கைக் குழுவின் தலைவராக மாத்திரமே தான் இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்படுவதாக அப்போதைய நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க அவர்கள் தெரிவித்தார். அப்போது கருத்திட்டங்கள் தொடர்பான அனைத்து தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருந்ததாகவும், பேரளவுக் கருத்திட்டங்களை மதிப்பிடுவது தொடர்பான அரச நிறுவனப் பொறிமுறை நீண்ட காலமாக கருத்திற்கொள்ளப்படாது காணப்பட்டமையினால், இச்சந்தர்ப்பத்தில் அந்த நிறுவனங்களிடமிருந்து அவ்வாறான பணியொன்று நிறைவேறுவதை எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார் (இணைப்பு – 9A).

(ஈ) அரசாங்கத்திற்கு கிடைக்கும் வெளிநாட்டு வளங்களை முகாமைத்துவம் செய்யும் பொதுவான முறைமை மற்றும் அதனுடன் சம்பந்தப்பட வேண்டிய கேந்திர அரச நிறுவனக் கட்டமைப்பு இந்த முன்மொழிவுகளை உருவாக்கும்போது மற்றும் மதிப்பீடு செய்யும்போது போதுமானளவில் தொடர்புபடுத்திக் கொள்ளப்படவில்லை என இலங்கை திட்டமிடல் சேவை சங்கத்தின் பிரதிநிதிகள் உட்பட ஏற்புடைய பிரிவுகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களில் வெளிப்படுத்தப்பட்டன (இணைப்பு – 9B).

(உ) அதற்கேற்ப, பொது நிதி சம்பந்தமாக அரசாங்கத்தின் பொறுப்பு தவறவிடப்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதாகப் புலனாகும் அவ்வாறான முன்மொழிவுகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் முன்வைக்கப்படுள்ளமையினாலேயே வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் உட்பட ஏற்புடைய அரச நிறுவனங்களிடமிருந்தேனும் எதிர்ப்பு வெளிப்படாமைக்கான காரணமாகும் என குழு ஊகிக்கிறது.

ix. மேலும், கூட்டு ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சில கருத்திட்டங்களின் பகுதிகள் மேலும் ஆய்வு செய்யப்பட்டு முழுமையடைய வேண்டும் என MCC செயன்முறை ஊடாகவும் அது தொடர்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள 2018 ஆகஸ்ட் 25 மற்றும் 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அறிக்கைகள் மூலம் தெளிவாகிறது (அட்டவணை - 5: இலக்கம் 24, 25). ஏற்புடைய ஆய்வுகள் நிறைவடைந்திருப்பின் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்பு செயற்படுத்துவதை ஆரம்பிப்பதற்கு மேலும் இரண்டு வருடங்களை அண்மித்த காலம் ஏன் தேவைப்படுகிறது என்பது தெளிவற்றதாகவே உள்ளது. ஏற்புடைய கருத்திட்டங்கள் அனைத்தும் முழுமையாக உருவாக்கப்படாமல் அல்லது நிதிப் பிரமாணங்கள் 3, 4, 34, 35, 36 க்கு ஏற்ப நிறைவேற வேண்டிய பல்துறை தாக்கங்கள் உட்பட சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல்,

ஏற்புடைய கேந்திர நிறுவனங்களிடமிருந்து முறையான அனுமதிகளின்றி MCC கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதா[8] என்பதே அதற்கேற்ப எழுகின்ற வினாவாகும். அவ்வாறாயின் அது மிகவும் பொருத்தமற்ற நிலைமையாகும். அவ்வாறான முன்மொழிவுகள் சம்பந்தமான நிதி மதிப்பீடுகள், காலச் சட்டகங்கள், செயற்பாட்டு முறைமைகள் கொண்ட உடன்படிக்கையொன்றை எவ்வாறு கைச்சாத்திட முடியும் என்பது தெளிவற்றது.

x. மேலே வினா எழுப்பியவாறு போதுமானளவிலான உள்ளக ஆய்வுகள் இடம்பெறாவிடின், குறித்த விடயம் தொடர்பாக போதிய அறிவு இல்லாத அதிகாரிகள் குழுவினரா அந்தந்த நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இறுதிக் கலந்துரையாடல்கள் இணக்கப்பாடுகளில் பங்குபற்றியுள்ளனர் (அட்டவணை -3: F4-59 பக்க இலக்கம் 2315-2318) என்ற வினா எழுவதற்கு ஏதுவாய் அமைகிறது. நிலைமை இவ்வாறாயின், அவ்வாறான கலந்துரையாடலுக்காக செலவிட்ட அந்நியச் செலாவணி உட்பட பொது நிதி பயனற்றுப் போகின்றமை ஆச்சிரியத்தை ஏற்படுத்தக் கூடியதல்ல.

## 4.2 MCC தொடர்பாக அதனைப் பெற்றுக்கொண்ட ஏனைய நாடுகளின் அனுபவங்கள்

இந்த நுண்ணாய்வின் ஒரு பகுதியாக MCC கொடைகளைப் பெற்றுக்கொண்ட நாடுகளின் அனுபவங்களை ஆய்வு செய்வதற்கு குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இணையத்தளத்திலுள்ள தகவல்கள், MCC நிறுவனத்தினதும் ஏற்புடைய நாடுகளினதும் உத்தியோகபூர்வ அறிக்கைகள், குழுவின் முன்னிலையில் பல்வேறுபட்ட தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் குறித்த விடயம் தொடர்பாக இடம்பெற்ற கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கைகள் மற்றும் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இதற்கு அடிப்படையாக அமைந்தன.

அந்த ஆய்வுகளின் சுருக்கமொன்று கீழே சாராம்சம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது:

i. ஐக்கிய அமெரிக்காவில் கூட்டிணைக்கப்பட்ட 2003 மிலேனியம் சவால்கள் சட்டம் மூலம் வலுப்பெறச் செய்யப்பட்ட MCC நிகழ்ச்சித்திட்டம் குறைந்த வருமானமுடைய மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் எதிரே காணப்படும்

[8]அவ்வாறான பல்துறை பயன்கள் - செலவின ஆய்வுகள் உள்நாட்டில் இடம்பெற்றுள்ளதைக் காண முடியாவிடினும், கருத்திட்டங்களை உருவாக்குவதற்காக MCC நிறுவனத்தினால் 2017 ஜூலை 26 ஆந் திகதிய உடன்படிக்கை மூலம் வழங்குவதற்கு இணங்கிய 7.4 மில்லியன் அமெரிக்க டொலர் கொடையினை, 10 மில்லியன் டொலர் வரை அதிகரிப்பதற்கு மேலுமொரு உடன்படிக்கையொன்று 2018 ஜூன் 18 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. எனினும், அந்த முதல் கொடையின் நிதியில் எந்தளவு தொகை, எவ்வாறான விடயங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது என்பது பற்றிய கணக்குத் தகவல்கள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் இல்லை எனக் குழுவினால் அவதானிக்கப்பட்டது. இது வியப்பூட்டும் விடயமாகும்.

தடைகளை அகற்றும் முக்கிய குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டதாகும். தற்போது வரை 49 நாடுகளுடன் 65 முதநிலை அல்லது கூட்டு ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், அவற்றில் 16 நாடுகளினால் கைச்சாத்திடப்பட்டுள்ள இரண்டாவது உடன்படிக்கைகளும் உள்ளடங்கும் (இணைப்பு – 15A இல் ஏற்புடைய நாடுகள் மற்றும் உடன்படிக்கை செய்த வருடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன).

ii. அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட PS/CP/180/2019 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் மூலம் (இணைப்பு – 13) அமைச்சரவையின் கவனத்தை ஈர்த்துள்ள விபரமான அறிக்கையில், நைகர், யெமன், மொரித்தானியா, காம்பியா, தன்சானியா, நிகரகுவா, ஹொன்டுராஸ், மடகஸ்கார், ஆர்மேனியா, மாலி. மலாவி போன்ற நாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த கூட்டு ஒப்பந்தங்கள் முறிந்துள்ளதாக அல்லது இடைநடுவில் நின்று போயுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

iii. கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளுக்கு முன்னரான மற்றும் அதன் பின்னரான ஐந்து வருட காலப் பகுதியினுள் அந்தந்த நாடுகள் பெற்றுக்கொண்டுள்ள வளர்ச்சி வேகங்களை ஆய்வு செய்த போது, MCC யின் முக்கிய குறிக்கோளில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள MCC உதவியைப் பெற்றுக்கொண்ட பெரும்பாலான நாடுகளினால் முடியாமல் போயுள்ளமை அவதானிக்கப்பட்டது (இணைப்பு – 15A). கைச்சாத்திடப்பட்ட 65 உடன்படிக்கைகளில் 7 உடன்படிக்கைகள் மாத்திரமே கொடைகளைப் பெறுவதற்கு முன்னர் ஐந்து வருடங்கள் நிலவிய பொதுவான வளர்ச்சி வேகத்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சதவீத விருத்தியைப் பெற்றுக்கொண்டுள்ளன: அவை கானா (முதலாவது உடன்படிக்கை), கயானா, இந்தோனேசியா (முதலாவது உடன்படிக்கை), லெசதோ, மலாவி, பரகுவே, செம்பியா ஆகியன மாத்திரமாகும். அரைச் சதவீதத்துக்கு மேற்பட்ட மேலதிக வளர்ச்சி வேகத்தை அடைந்துகொண்ட நாடுகளைக் கருத்திற்கொண்ட போதிலும், இந்தப் பட்டியலில் மேலதிகமாக சேர்வது மடகஸ்கார், மோல்டோவா (இரண்டாவது உடன்படிக்கை), நைகர், பிலிப்பைன்ஸ் ஆகியன மாத்திரமாகும். 38% நாடுகளில் வளர்ச்சி வேகம் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் நிலவிய மட்டத்தை விடவும் நூற்றுக்கு அரைவாசியை விடவும் அதிகமாக குறைவடைந்துள்ளது (32% தொடர்பாக 5 வருடங்களுக்கு முன்னர் மற்றும் பின்னர் ஒப்பிடுவதற்கு ஏற்புடைய தரவுகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதுடன், 8% சம்பந்தமாக வளர்ச்சி வேகத்தில் 0.5% ஐ விடவும் குறைவினையோ அல்லது அதிகரிப்பினையோ காண முடியாது).

iv. MCC தொடர்பாக இலங்கை பல்கலைக்கழக பொருளியல் நிபுணர்களின் மன்றத்தினால் (Sri Lanka Forum of University Economists) 2020 பெப்ரவரி மாதம் 7 ஆந் திகதி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்தப்பட்ட செயலமர்வில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் கற்கைப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பிரியங்க துனுசிங்க அவர்களினால் நிகழ்த்தப்பட்ட முக்கிய உரையில் சமர்ப்பிக்கப்பட்ட பொருளியல் புள்ளிவிபர ஆய்வு மூலமும் இது தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (இணைப்பு – 15B). மேலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் முன்வைப்புக்களிலும் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப, பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கின்ற தடைகளை அகற்றுவது சம்பந்தமாக MCC கொடைகளின் பங்களிப்பு திருப்தியானதாக இல்லை என்பதே தீர்மானிக்கப்படுகிறது. அவுஸ்திரேலியாவின் ஸ்பர் (SPUR) அமைப்பினால் இந்தக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்வைப்பில் (இணைப்பு – 9B மற்றும் அட்டவணை - 6: B2-120) MCC நிறுவனத்திற்குத் தனது கொடைகளைப் பெற்றுக்கொண்ட நாடுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் புள்ளிவிபரங்களுடன் காட்ட முடியாமற் போயுள்ளதாக கலிபோர்னியா சன் பிரன்சிஸ்கோவின் அரச கொள்கை அனுபவங்களின் தலைவர் நயன ரேனு குமார் அவர்கள் தெரிவித்துள்ள கருத்து இதனை மேலும் வலியுறுத்துகிறது.

v. MCC உடன்படிக்கைகள் மூலம் வறுமை ஒழிக்கப்படுவதற்குப் பதிலாக அமெரிக்க கம்பனிகளுக்கு ஏழை நாடுகளைக் கொள்ளையடிப்பதற்கான வழியேற்படுத்தப்படுகிறது என கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கலாநிதி எமா மவுட்ஸ்லி கூறியுள்ளதாக (SPUR) அமைப்பு தனது முன்வைப்பில் குறிப்பிட்டுள்ளது (இணைப்பு – 9B மற்றும் அட்டவனை - 6: B2 – 120). MCC முதலில் அரசாங்கங்களைப் பயன்படுத்தி காணிச் சட்டங்களை மாற்றியமைத்து தேவையான நிலைமைகளை உருவாக்கி, அதன்பின்பு காணிகளைக் கைப்பற்றிக்கொள்வதாக கோர்னெல் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பிலிப் மெக்மிசெல் அவர்கள் கூறியுள்ளதாகவும், கனடாவின் குவின்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சுசான் சோடர்பர்க் அவர்களின் கருத்துப்படி, MCC என்பது புதிய பாணியிலான அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆகும் எனவும், அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

vi. மேற்கத்தேயத்திடம் நீண்ட காலமாக காணப்பட்ட காணிகளைக் கைப்பற்றுவதற்கான நாட்டம் தென்னாபிரிக்காவின் டெஸ்மன்ட் டுடு பாதிரியார் அவர்களின் கருத்து மூலமும் தெளிவாவதாக SPUR அமைப்பினாலும், **நேசர் பியுட்டி கிரியேஷன்ஸ் நிறுவனத்தின் தலைவர்** சமந்த குமாரசிங்க அவர்களினாலும் (இணைப்பு – 9B மற்றும் அட்டவணை - 6:A2-34) குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள முன்வைப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கருத்து பின்வருமாறு: "*அவர்களது கரங்களில் பைபிள் காணப்பட்டது. எம்மிடம் காணிகள் காணப்பட்டன. அவர்கள் கூறியது போன்று நாம் கண்களை மூடிக்கொண்டு ஆராதனை செய்தோம். கண்களைத் திறக்கும்போது எமது கரங்களில் பைபிள் காணப்பட்டது. காணிகள் அவர்களுக்கு உடைமையாகியிருந்தன.*" *[....When missionaries came to Africa, they had the Bible and we had the land. They said "let us close our eyes and pray." When we opened them, we had the Bible, and they had the land].*

vii. MCC யின் காணிச் சீர்திருத்த முன்மொழிவுகள் ஊடாக வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு ஏற்புடைய நாட்டின் காணிகளைப் பிடித்துக்கொள்வதற்கான வாயில் திறந்து விடப்பட்டுள்ளதாக ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவின் MCC கூட்டு ஒப்பந்த அனுபவங்கள் ஊடாகவும் தெளிவாகிறது என அவுஸ்திரேலியாவின் ஸ்பர் (SPUR) அமைப்பினால் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்வைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. லெசதோவில் உள்நாட்டவர்களின் காணிகளையும் கொள்ளை இலாபத்திற்கு வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்பனை செய்வதற்கு MCC யினால் வழியேற்படுத்தப்பட்டுள்ளதாக இலினொய்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சார்ள்ஸ் பொகெய்மான் அவர்கள் தெரிவித்துள்ளமையும், உள்நாட்டு எய்மாரா இந்தியர்களுக்குத் தமது டிடிக்கா ஏரியின் நீரைப் பயன்படுத்துவது தொடர்பாக சிக்கல்கள் ஏற்படுத்தப்படும் வகையில் பெரு நாட்டின் அரச காணிகள் Bear Creek Mining கம்பனியினால் விலைக்கு வாங்கப்பட்டமையினால் பெரு அரசாங்கம் ஒப்பந்தத்தை ரத்துச் செய்தபோது, வரி செலுத்துபவர்களின் செலவில் 24 மில்லியன் டொலர் இழப்பீட்டினை பெரு நாட்டினால் அக்கம்பனிக்கு வழங்க வேணடியேற்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் உகண்டா, சியராலியோன், மாலி ஆகிய நாடுகளிலும் விவசாயிகள் இவ்வாறான கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளதாக தனது முன்வைப்பில் SPUR அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

viii. மடகஸ்கார் நாட்டினால் 2005 இல் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம் ஒரு முன்னோடி MCC செயற்பாடாகும். காணி தொடர்பான அறுதியுரிமை, நிதி வசதிகளுக்கான அணுகல், சேமிப்புக்கள் மற்றும் விவசாயத்துறைப் பயிற்றுவிப்புக்களுக்காக வழங்கப்பட்ட 110 மில்லியன் அமெரிக்க டொலர் கொடைகளுடனான கூட்டு ஒப்பந்தத்தை நான்கு வருடங்கள் கழியும்போது இடைநிறுத்துவதற்கு MCC நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. சூழ்ச்சியொன்று மூலம் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறியே அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. MCC நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கம்பனிகளினால் கிட்டத்தட்ட முப்பது இலட்சம் ஹெக்டயார் அளவிலான நாட்டின் விவசாயக் காணிகள் 99 வருடங்கள் எனும் நீண்ட காலக் குத்தகை மூலம்

கையகப்படுத்தப்பட்டமையினால் உருவான பொதுமக்களின் அதிருப்தியே 2009 ஆம் ஆண்டு ஏற்பட்ட அந்த அதிகார மாற்றத்திற்கு காரணமானது[9]. எனினும், கூட்டு ஒப்பந்தத்தை நிறுத்திய போதிலும், பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அமெரிக்க வரிப் பணம் மூலம் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் சொத்துக்கள் தொடர்பான முறையான கணக்கீடொன்றைச் செய்து நிகழ்ச்சித்திட்டத்தை மூடுவதற்காகவே MCC – Madagaskar எனும் செயற்படுத்தல் நிறுவனத்தைத் தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கு MCC இனால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எவ்வாறாயினும், கூட்டு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்கு முன்னரான ஐந்து வருடங்களினுள் நிலவிய 2.3% அளவிலான சாதாரண வருடாந்த வளர்ச்சி வேகம் அதன் பின்பு ஐந்து வருடங்களினுள் நூற்றுக்கு அரைவாசி எனும் மிகவும் குறைந்த அளவினால் மாத்திரமே அதிகரித்துள்ளது. இதனடிப்படையில் மடகஸ்கார் அனுபவம் திருப்தியானது எனக் கருத முடியாது.

ix. ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் அரசாங்கங்களை வீழ்த்துவது MCC கொள்கைகளுக்கு முரணானது எனக் கூறியே ஹொன்டுராஸ் நாட்டிற்கு வழங்கப்பட்ட MCC கொடை 2010 செப்டம்பர் மாதம் MCC நிறுவனத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஏற்புடைய கொடையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த பெருந்தெருக்கள் மறுசீரமைப்பு இதன் காரணமாக இடைநடுவே நின்று போயுள்ளது. எனினும், சர்வதேச ஊழல் சுட்டியில் மிகவும் ஊழல் மிகுந்த நாடாகக் கருதப்படும் ஹொன்டுராஸ் நாட்டுடன் இரண்டாவது கூட்டு ஒப்பந்தத்திற்கான கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெறுவதாகவும் அறியக் கிடைக்கிறது.

x. வித்தியாசமானதொரு அனுபவமே நேபாளத்தில் உள்ளது. MCC யுடன் கூட்டு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்ட போதிலும், நேபாளத்தினால் இது வரை அதனைப் பாராளுமன்றச் சட்டமாக நிறைவேற்ற முடியவில்லை. அமெரிக்காவின் இந்து – பசுபிக் போர் மூலோபயத்தினுள் ஏற்பட முடியுமான புவியரசியல் அபாயத்திற்கு MCC செயற்பாடு பங்களிப்பதற்கான வாய்ப்புக்கள் தொடர்பாக நேபாள நாட்டுப் பாராளுமன்றத்தில் ஆளுங் கட்சியினுள் ஏற்பட்டுள்ள கருத்து மோதல்களே இதற்கு காரணமாகும் (அட்டவணை - 4: II ஆவது அறிக்கை). அவ்வாறான போர் அல்லது அரசியல்ரீதியான நோக்கம் இல்லை என அமெரிக்கா தரப்பில் கூறப்படினும், உடன்படிக்கையில் பொருத்தமான திருத்தங்களைச்

[9] DAEWOO Korea மற்றும் VARUN India இவ்வாறான இரண்டு வெளிநாட்டுக் கம்பனிகளாகும். (https://farmlandgrab.org, accessed: 30/1/2020)

செய்யாமல் கைச்சாத்திடக் கூடாது என்பது அரசாங்கத்திலேயே உள்ள எதிர்த் தரப்பினர்களின் கருத்தாக உள்ளது. எனினும், ஏலவே கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையை மீளவும் திருத்தியமைப்பதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு என்பதாலும், அவ்வாறு திருத்தம் செய்யப்படாவிடின் உடன்படிக்கைக்குப் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறுவது கடினமாக அமையலாம் என்பதாலும் தெற்காசியாவின் முதலாது கூட்டு ஒப்பந்தம் எனக் கைச்சாத்திடப்பட்ட நேபாளத்தின் MCC உடன்படிக்கை செயற்படுத்தப்படுவது சந்தேகத்துக்குரியதாக மாறியுள்ளது.

xi. 2016 இல் செயற்பாட்டுக்கான அனைத்துப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டமை மற்றும் மேலுமொரு கூட்டு ஒப்பந்தத்திற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பாகியுள்ளமையினால் பிலிப்பைன்ஸுடன் 2010 இல் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை ஒப்பீட்டுரீதியில் வெற்றிகரமானது எனக் கருத முடியும். மேலும் பிலிப்பைன்ஸுக்கு உடன்படிக்கையின் பின்பு 1% அளவிலான அதிகரித்த வளர்ச்சி வேகத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. எனினும் 2016 இல் கைச்சாத்திடப்பட்டுள்ள இரண்டாவது கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக பிலிப்பைன்ஸ் திருப்தியடையவில்லை என்பதே பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அண்மையில் தெரிவித்த கருத்துக்கள் மூலம் புலனாகிறது. பிலிப்பைன்ஸுக்கான இலங்கைத் தூதுவரின் கருத்துப்படி (அட்டவணை - 4: III ஆவது அறிக்கை) பிலிப்பைன்ஸ் அரசாங்கம் 2017 இல் இந்த இரண்டாவது கூட்டு ஒப்பந்தத்திலிருந்து விலகியுள்ளது.

xii. ஐக்கிய அமெரிக்காவின் 2003 மிலேனியம் சவால்கள் சட்டத்தின்படி MCC கொடைகளைப் பெறும் நாடுகள் சர்வதேச சிவில் அமைப்புக்களைத் தமது நாடுகளில் தடையின்றி சுதந்திரமாக செயற்படுவதற்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். அந்த ஏற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் அச்சட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட திருத்தம் ஊடாக மிகவும் பரந்த பரப்பெல்லைக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான ஏற்பாடுகளுடன் MCC கூட்டு ஒப்பந்தமொன்று இலங்கையினால் பாராளுமன்றச் சட்டமாக நிறைவேற்றப்படின், இயல்பாகவே அந்த ஏற்பாடுகள் இலங்கையில் சட்டமாக மாற்றம் பெறுகின்றமையினால், அதனூடாக நாட்டினுள் ஏற்பட முடியுமான சமூக-கலாசார-அரசியல் மற்றும் மனப்பாங்குரீதியான தாக்கங்கள் மற்றும் சட்டரீதியான குளறுபடிகளைப் புறந்தள்ள முடியாது.

xiii. அத்துடன், அவ்வாறு வலுப்பெறச் செய்வதன் மூலம் வசதிகளைப் பெறும் அரச சார்பற்ற அமைப்புக்கள் ஊடாக ஏற்படுத்தப்படும் நெருக்கடிகளை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த

வேண்டியேற்படுவதுடன், அதன் காரணமாக கூட்டு ஒப்பந்தத்தை இடைநிறுத்துவதற்கும், நாட்டினுள்ளேயும் சர்வதேச நீதிமன்றங்களிலும் இலங்கைக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், ஏலவே கைச்சாத்திடப்பட்டுள்ள ACSA அல்லது SOFA உடன்படிக்கைகள் இருப்பின் அவற்றின் ஏற்பாடுகள் மூலம் ஏற்புடைய நெருக்கடிகளின்போது தலையிடுவதற்கும் அமெரிக்க அரசாங்கத்திற்கு மற்றும் நிறுவனங்களுக்கு வாய்ப்பு ஏற்படலாம். இவ்வாறான வாய்ப்பு மூலம் தேசிய பாதுகாப்பு, இறையாண்மை, நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை ஆகியவற்றில் பாதகமான தாக்கங்கள் ஏற்படலாம் என்பதால் இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளின் விசேட கவனம் ஈர்க்கப்பட வேண்டும்.

MCC கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக இது வரை காணப்படும் சர்வதேச அனுபவங்கள் திருப்தியானதாகவோ அல்லது சாதகமானதாகவோ இல்லை என்பதே இதன் மூலம் புலனாகிறது. எனவே, இலங்கை MCC உடன்படிக்கை தொடர்பாக கருத்திற்கொள்வதற்கு முன்பு இந்த அனுபவங்கள் மூலம் பெற முடியுமான பாடங்களை சிறப்பாகப் பிரித்தறிந்து கொள்ள வேண்டும்.

### 4.3 MCC முன்மொழிவுகள் தொடர்பாக பொதுமக்கள் கருத்துக்களின் பொழிப்பு


பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட பகிரங்க அறிவித்தல் ஊடாக பொதுமக்களின் கருத்துக்களைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குவதற்கு குழு நடவடிக்கை மேற்கொண்டது. அதற்கேற்ப, இது தொடர்பாக ஆர்வங் காட்டுகின்ற பெரும்பாலான நபர்கள், தொழில்சார் நிபுணர்கள், தொழிற்சங்கங்கள், வணிக சபைகள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் குழுவுக்குத் தமது கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை எழுத்து மூலமாகவும், சந்திப்புக்கள் மூலமும் வாய்மூலமாகவும் வழங்கின.

ஒட்டுமொத்தமாக 180 கருத்துத் தெரிவிப்புக்கள் குழுவுக்கு கிடைத்திருந்ததுடன், அதில் 82% (147 கருத்துத் தெரிவிப்புக்கள்) தனிப்பட்ட முறையிலும், 8% (அதாவது 14) சமூக அமைப்புக்கள் ஊடாகவும் சமர்ப்பிக்கப்பட்டவையாகும். ஒட்டுமொத்த முன்வைப்புக்களில் கம்பனிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சமர்ப்பிப்புக்களின் எண்ணிக்கை 3% ஐப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அந்த ஒட்டுமொத்த சமர்ப்பிப்புக்களுக்கு வணிக சபைகள், தொழில்சார் நிறுவனங்கள், தொழிற்சங்கள் ஆகியன வெவ்வேறாக 2% வீதம் பங்களிப்புச் செய்துள்ளன. இந்த கருத்துத் தெரிவிப்புக்களில் இலங்கை வணிக சபை உட்பட நான்கு வணிக சபைகள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உட்பட பிரதான நான்கு தொழிற்சங்கள், இலங்கை பொறியியல் நிறுவனம் மற்றும் தொழில்சார்ந்தோர் சங்கங்களின்

அமைப்பு போன்ற நான்கு தொழில்சார் நிறுவனங்கள் உள்ளடங்குகின்றமை முக்கிய அம்சமாகும்.

குழுவுக்குத் தகவல்கள் மற்றும் கருத்துக்களைத் தெரிவித்த தரப்பினர் 1 ஆவது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுடன், அந்த கருத்துக் கணிப்பின் பெறுபேறுகள் 1 ஆவது அட்டவணையில் சுருக்கமாக காட்டப்பட்டுள்ளன. மேலும், அந்தந்த தரப்பினரால் சமர்ப்பிக்கப்ட்ட தகவல்கள் சுருக்கமொன்று இணைப்பு – 9B இல் உள்ளடங்கியுள்ளது.

வரைபடம் 1 : குழுவுக்கு கருத்துக்களைத் தெரிவித்த பல்வேறுபட்ட தரப்பினர்



அட்டவணை – 1 : கருத்துக் கணிப்பின் பெறுபேறுகளின் சுருக்கம்

| **சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயம் / கருத்து** | | **ஒட்டுமொத்த எண்ணிக்கை** | **சதவீதம்** |
|---|---|---|---|
| **உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது பற்றி உடன்படுதல்** | நேரடியாக உடன்படுதல் | 13 | 7% |
| | திருத்தங்களுடன் உடன்படுதல் | 7 | 4% |
| | **மொத்த உடன்பாடு** | **20** | **11%** |
| **உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதனை எதிர்த்தல்** | நேரடியான எதிர்ப்பு | 102 | 57% |
| | திருத்தங்கள் செய்ய முடியாவிடின் கைச்சாத்திடக் கூடாது | 8 | 4% |
| | உடன்படிக்கை அபாயமானது | 26 | 14% |
| | **மொத்த எதிர்ப்பு** | **136** | **75%** |
| **கருத்துக்கு கணிப்புக்கு முன்னர் அனைத்து தகவல்களையும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்** | | **14** | **8%** |
| **கருத்தொன்றைத் தெரிவிக்கவில்லை** | | **10** | **6%** |
| **மொத்தமாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்** | | **180** | **100%** |

இயல்பாய்வு : ஒரே மூலத்திலிருந்து அஞ்சல் மூலம், மின்னஞ்சல் மூலம், சந்திப்புக்கள் ஊடாக முன்வைப்புக்கள் செய்யப்பட்டுள்ளபோது அதில் ஒன்று மாத்திரம் மேலுள்ள குறிப்பில் கணக்கிலிடப்பட்டுள்ளது.

சமர்ப்பிப்புக்களில் மிகவும் பெரும்பாலானவை, அதாவது தகவல்களை வழங்கிய நான்கில் மூன்று பங்கினர், MCC உடன்டிக்கைக்கு எதிரான கருத்தினைக் கொண்டுள்ளனர் என்பது இந்த சுருக்கம் மூலம் தெளிவாகிறது. அதில் 57% ஆனவர்கள் மிகவும் நேரடியாகவே அந்த உடன்படிக்கையை நிராகரிக்க வேண்டும் எனக் கூறியதுடன், 14% ஆனவர்கள் உடன்படிக்கை அபாயமானது எனவும், மேலும் 4% ஆனவர்கள் உடன்படிக்கையைத் திருத்த முடியாவிடின் உடன்படிக்கையை எதிர்ப்பதாகவும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். கருத்தொன்றைத் தெரிவிக்காதவர்கள் 6% என்பதுடன், 8% ஆனவர்கள் கருத்துக்கு கணிப்புக்கு முன்னர் அனைத்து தகவல்களையும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தனர். உடன்படிக்கைகள் மற்றும்

நிபந்தனைகளை வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளும் அவற்றில் உள்ளடங்கும்.[10] ஒட்டுமொத்த சமர்ப்பிப்புக்களில் உடன்படிக்கை தொடர்பாக சாதகமான மனப்பாங்குகள் 11% காணப்பட்டதுடன், ஒட்டுமொத்த சமர்ப்பிப்புக்களில் 7% ஆனவர்கள் மாத்திரம் எந்தவிதமான சந்தேகங்களுமின்றி உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும் எனத் தெரிவித்திருந்தனர். MCC உடன்படிக்கை சம்பந்தமாக புத்திஜீவி அமைப்புக்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பொதுவாக மக்கள் கருத்தின் போக்கு இதனூடாக மிகவும் தெளிவாக வெளிப்படுகின்றது என்பது குழுவின் முக்கிய அவதானமாகும்.

அத்துடன், அந்த சமர்ப்பிப்புக்களின் உள்ளடக்கங்களில் தெளிவாகவே முக்கியமானவை என அவதானித்த பின்வரும் மிகவும் முக்கியமான சில அவதானங்களை குழு இங்கு விசேடமாக குறிப்பிடுகிறது:

i. முன்மொழிவுகளுக்கு சார்பாக கருத்துக்களைத் தெரிவித்துள்ள இலங்கை வணிக சபை மற்றும் Lirne Asia நிறுவனம் இந்த முன்மொழிவுகளை உருவாக்குவதில் பங்களிப்புச் செலுத்தியுள்ள அல்லது MCC நிறுவனத்தின் சர்வதேச ஆய்வுகளில் பல்வேறு முறைகளில் தொடர்புபட்டுள்ள நிறுவனங்களாகும்.[11]

ii. MCC முன்மொழிவுகள் கடன் அல்லாத, மீண்டும் செலுத்த வேண்டியதல்லாத கொடையாகும் என்பதே உடன்படிக்கைக்கு சார்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரதான தர்க்கமாகும். அது அரசாங்கத்தினால் அபிவிருத்திக்கு அத்தியாவசியமானது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு மூலதன வளங்கள் இல்லாத நிலைமையில், வெளிநாட்டுக் கடன்கள் மீது தங்கியிருப்பதை விடவும் இந்தக் கொடையைப் பெற்றுக்கொள்வது மிகவும் அனுகூலமானது என்பதாகும்.

iii. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் வழங்கிய அரசியல் தீர்மானம் மூலம் நாட்டின் பொதுவான அபிப்பிராயம் MCC முன்மொழிவுக்கு எதிரானது என்பதை வெளிப்படுத்துகின்றது என்பதே உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள மிகவும் பொதுவான கருத்தாக அமைந்துள்ளது. அந்த பலமான எதிர்ப்பினை வெளிப்படுத்தும் வகையிலேயே மக்கள் தமது வாக்குகள் மூலம் கடந்த அரசாங்கத்தை தோற்கடித்து MCC முன்மொழிவைத் தேர்தல் மேடையில் விமர்சித்த

[10] அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றும் ஆற்றலோ அல்லது அதிகாரமோ குழுவுக்கு இருக்கவில்லை.

[11] இலங்கை வணிக சபையின் பொருளாதார நிபுணர் அனுஷ்க விஜேசிங்க அவர்கள் இப்பணியின் ஒருங்கிணைப்புக்கான பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கொள்கைக் குழுத் தலைவரின் உதவிக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் ஆவார் (இணைப்பு – 2F). MCC சம்பந்தமாக Lirne Asia நிறுவனத்தின் பங்களிப்பு தொடர்பாக அதன் தலைவர் பேராசிரியர் ரொஹான் சமரஜீவ அவர்கள் குழுவின் முன்னிலையில் தெளிவுபடுத்தினார்.

தற்போதைய ஆட்சியாளர்களுக்கு அதிகாரத்தை வழங்கியதாகவும், அதனால் தற்போதைய ஆட்சியாளர்கள் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது ஒரு புறமிருக்க மீண்டும் ஆய்வு செய்வதற்கேனும் மக்கள் ஆணையொன்று இல்லை என்பதுவுமே அந்த கருத்துக்களில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

iv. MCC கூட்டு ஒப்பந்தத்தினை வரைவு செய்துள்ள முறைமைக்கு ஏற்ப அதன் சில ஏற்பாடுகள் இலங்கையின் நிறுவனக் கட்டமைப்புக்கு, நாட்டின் சட்ட அமைப்புக்கு மற்றும் அரசியலமைப்புக்கு முரணானதாக உள்ளதாக சட்ட வல்லுநர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களில் முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

v. உடன்படிக்கைக்கு ஏற்புடைய தடைகளை மதிப்பீடு செய்தல், அதன் அடிப்படை மற்றும் கொடை முதலீடுகளைப் பயன்படுத்துவதற்குத் தெரிவுசெய்துள்ள இரண்டு கருத்திட்டங்களினது உண்மையான சமூக – பொருளாதார முன்னுரிமையினையும் உடன்படிக்கைக்கு எதிராக கருத்துக்களைத் தெரிவித்த குறிப்பிடத்தக்களவானோர் கேள்விக்குட்படுத்தியுள்ளனர்.

vi. காணி தொடர்பான முன்மொழிவுகளே உடன்படிக்கைக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்தவர்களின் பலத்த விமர்சத்திற்கு உட்பட்டுள்ளன: விசேடமாக, ஏற்புடைய காணிகளை வெளிநாட்டவர்கள் கைப்பற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு தொடர்பிலாகும். போக்குவரத்துக் கருத்திட்டம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள விமர்சனங்கள் கொள்கைரீதியான காரணங்களை விடவும், முக்கியமாக தொழிநுட்பக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகியுள்ளதுடன், ஒப்பீட்டளவில் காணிக் கருத்திட்டத்திற்கான எதிர்ப்பினை விடவும் குறைவான எதிர்ப்பே போக்குவரத்து முன்மொழிவுகளுக்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

vii. MCC கொடைகளைப் பெற்றுக்கொண்ட நாடுகளை அவ்வாறு பெற்றுக்கொள்ளாத நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க உயர்வான வளர்ச்சி வேகத்தை அடைந்துகொள்ளவில்லை என்பற்கான புள்ளிவிபரரீதியான ஆய்வுகள் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், இந்த நிலைமை பொருளாதார புள்ளிவிபரரீதியாகவும் அவதானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பல்கலைக்கழக பொருளியல் நிபுணர்களின் மன்றம் (Sri Lanka Forum of University Economists) ஏற்பாடு செய்திருந்த செயலமர்விலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இணைப்பு – 15B).

viii. அமெரிக்க நோக்கங்கள் மற்றும் இந்து – பசுபிக் மூலோபாயங்களும் MCC முன்மொழிவுகளுக்கு விரோதமாக முன்வைக்கப்படும் எதிர்ப்புக்களுக்கு அடிப்படையான பிரதான காரணமாகும். MCC உடன்படிக்கையானது ACSA மற்றும் SOFA ஒப்பந்தங்களின் நோக்கங்களுக்கு குறைநிரப்பியாக அமைவதற்கான வாய்ப்புக்கள் மற்றும் அதன் மூலம் தேசிய பாதுகாப்பு, நாட்டின் அமைதி, சுயாதீனம் ஆகியவற்றின் மீது ஏற்பட முடியுமான பாதகமான தாக்கங்களும் உடன்படிக்கைக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களில் முக்கியமாக வெளிப்படும் காரணிகளில் உள்ளடங்குகின்றன.

ix. எதிர்கால சந்ததியினரின் உரிமைகள் மற்றும் தேசிய இறையாண்மையில் இந்த உடன்படிக்கை தாக்கம் ஏற்படுத்தலாம் என குழுவின் முன்னிலையில் விடயங்களைத் தெரிவித்த குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோரின் கருத்தாக உள்ளது. அதனால் பொதுமக்கள் மத்தியில் இது சம்பந்தமாக இடம்பெறும் திறந்த கலந்துரையாடல் மற்றும் கருத்துக் கணிப்பொன்று இன்றி இவ்வாறான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவது சரியானதல்ல என்பதை அந்தக் கருத்துச் சமர்ப்பிப்புக்களில் அவதானிக்கலாம்.

x. அத்துடன், MCC முன்மொழிவுகளுடன் தொடர்புடைய [நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கை (PIA), MCA – Sri Lanka வின் கம்பனி அமைப்பு விதிகள் போன்ற] முக்கிய உடன்படிக்கைகள் மற்றும் ஆவணங்களைப் பகிரங்கப்படுத்தாமை தொடர்பாக குறை தெரிவிக்கப்படுவதுடன், அவை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். அவ்வாறு தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படாமையினால் கருத்தொன்றைத் தெரிவிக்க முடியாது எனக் குறிப்பிட்டவர்களும் இதில் உள்ளடங்குவர்.

## 5. **<u>MCC முன்மொழிவுகளுக்கு ஏற்புடைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகள்ரீதியான நுண்ணாய்வு</u>**

குறித்த MCC முன்மொழிவுகளுக்கு ஏற்புடைய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படின், அதற்கேற்ப எதிர்கால செயல் முறையானது, MCC கூட்டு ஒப்பந்தம் (Compact), அதற்கு ஏற்புடைய நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கை (Program Implementation Agreement or PIA), செயற்பாட்டினை வழிநடாத்துவதற்காக நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள MCA – Sri Lanka எனும் உத்தரவாதம் மூலம் வரையறுக்கப்பட்ட கம்பனியின் (Company Limited by

Guarantee) கம்பனி அமைப்பு விதிகள் (Articles of Association) மற்றும் அதற்கு ஏற்புடைய கடிதக் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் ஏற்படுத்திக்கொள்ளும் இணக்கப்பாடுகளுக்கு ஏற்ப இடம்பெறும்.

இந்த கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை இலங்கையின் பாராளுமன்றச் சட்டமொன்று மூலம் சட்டமாக்கப்பட வேண்டும் என்பது MCC கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் 7.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் முன் நிபந்தனையாகும். அதற்கேற்ப, இலங்கையின் முன்னேற்றத்தில் அவை செலுத்த முடியுமான தாக்கங்களை இனங்காண்பதற்காக முன்மொழிவுகளுக்கு ஏற்புடைய அனைத்து உடன்படிக்கை வரைவுகளினதும் உள்ளடக்கத்தினை விரிவான, ஆழமான சட்டரீதியான பகுப்பாய்வொன்றுக்கு உட்படுத்துவது மிகவும் முக்கியமான தேவைப்பாடாகும்.

MCC கூட்டு ஒப்பந்தம் மற்றும் அதற்கு ஏற்புடைய ஏனைய உடன்படிக்கைகள் உள்ளடங்கிய ஆவணங்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதா மற்றும் அத்திணைக்களத்தினால் நுண்ணாய்வு செய்யப்பட்டு எவ்வாறான அறிவுறுத்தல்கள் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை அறிந்துகொள்ள குழு எதிர்பார்த்தது. அதன் காரணமாக MCC உடன்படிக்கை சம்பந்தமாக குழுவுக்கு உள்ள சட்டரீதியான பிரச்சினைகள் 2020 மே மாதம் 5 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளும் சமூகமளித்திருந்த சந்தர்ப்பத்தில் முன்வைக்கப்பட்டன. மேலும் அதற்காக பிரதம அமைச்சரின் செயலாளரின் பங்களிப்புடன் கௌரவ சட்டமா அதிபர் அவர்களின் பிரதிநிதிகளுடன் இரண்டு தடவைகள் (2020 பெப்ரவரி 24 ஆந் திகதி மற்றும் 2020 மே 15 ஆந் திகதி) கலந்துரையாடுவதற்கும், குழுவின் கவனத்தை ஈர்த்த விசேட விடயங்கள் தொடர்பாக கௌரவ சட்டமா அதிபரின் நுண்ணாய்வுரீதியான கருத்தாய்வுகளை பிரதம அமைச்சரின் செயலாளர் ஊடாக எழுத்து மூலம் கோருவதற்கும் குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது (இணைப்பு – 11). மேலும், கௌரவ சட்டமா அதிபர் அவர்கள் இது தொடர்பான தனது பகுப்பாய்வுரீதியான கருத்துக்களையும், கருத்தாய்வுகளையும் எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு நேரடியாகத் தெரிவிப்பார் எனக் குழு எதிர்பார்க்கிறது.

## 5.1 குழுவின் சுயாதீன ஆய்வாராய்வு அவதானங்கள்

மேற்குறிப்பிட்ட பின்னணியில் தமது சுயாதீன ஆய்வுகள் ஊடாக பின்வரும் அவதானங்களை அரசாங்கத்தின் கவனத்திற்காக சமர்ப்பிக்க குழு எதிர்பார்க்கிறது:

5.1.1 நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடாத்துதல், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள்

(i) இந்த உதவி முறைமை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் இது வரை இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பொதுவான இரு தரப்புக் கடன் அல்லது உதவித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டவாறு திறைசேறி உட்பட இலங்கை அரசின் நிறுவப்பட்ட நிறுவனக் கட்டமைப்பினுள் செயற்படுத்தப்படுவதில்லை. மாறாக இலங்கை அரசாங்கத்தினால் விசேட செயற்படுத்தல் அலகாக நிறுவப்பட வேண்டிய உத்தரவாதம் மூலம் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று (Company Limited by Guarantee) ஊடாகவே செயற்படுத்தப்படும். MCA – Sri Lanka எனப் பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அந்தக் கம்பனி இலங்கை அதிகாரிகளை உள்ளடக்கிய பணிப்பாளர் சபையொன்றினால் நிர்வகிக்கப்படுமாயினும், குறித்த MCA – Sri Lanka ஊடாக மேற்கொள்ளப்படும் பணிகளை இலங்கையின் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையொன்றின் ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுத்தாமைக்கான முயற்சியொன்று மற்றும்/ அல்லது அவ்வாறான இலங்கை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையொன்றின் கண்காணிப்பிலிருந்து நடைமுறைரீதியாக விலக்கி வைப்பதற்கான முயற்சியொன்று PIA இன் 1.3(b)(iv) இல் வெளிப்படுவது தெளிவாகவே புலனாகிறது.

(ii) அவ்வாறாயினும், இக்கம்பனியின் ஊழியர்கள் சேவை வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை நியமித்துக்கொள்வது முதல் பணம் செலுத்துதல், இடைநிறுத்தல்/ நிறைவு செய்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு வரை கம்பனியின் செயற்பாட்டின் அனைத்து அலுவல்கள் மற்றும் நடவடிக்கைகளிலும் MCC நிறுவனம் தலையிடுவதற்கு முடியுமான வகையில் MCC கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையிலும் (Compact) நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கையிலும் பிரிவுகள் (விசேடமாக PIA இல் 1.2, 1.3, 2.1, 2.2, 2.4, 2.8, 2.9, 2.10, 3.1, 3.2, 3.3, 5.3) உள்ளடக்கப்பட்டுள்ளன. கம்பனியின் பணிப்பாளர் சபையில் வாக்குரிமையுடைய அங்கத்தவராக இலங்கையின் MCC பிரதிநிதி பெயரிடப்பட்டுள்ளமையும் (MCA – Sri Lanka கூட்டிணைப்பு வரைவின் 12(b)(ii) பிரிவு) குழுவின் கவனத்தை ஈர்க்கிறது. அதற்கமைய MCA – Sri Lanka கம்பனி மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து அதிகபட்ச அளவில் அகற்றப்படுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளதாயினும், MCC நிறுவனத்தின் அழுத்தம் காரணமாக சுயாதீனமானதாக ஆக்கப்படவில்லை என்பதே அவதானமாகும். எனவே MCA – Sri

Lanka கம்பனியை சுயாதீன அலகொன்றாகக் கருத முடியாது என்பதே குழுவின் கருத்தாகும்.

(iii) கொடை வழங்கும் நிறுவனத்தினால் இவ்வாறான தலையீட்டினை ஏதாவது பயனாளி நிறுவனத்தின் மீது மேற்கொள்ள முடியுமாக இருக்கும் எனக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட முடியுமாயினும், இலங்கையில் நல்லாட்சி, முறையான முகாமைத்துவம் மற்றும் சட்ட ஆட்சி உரியவாறு அமுலாகிறது என்பதை MCC நிறுவனம் ஏற்றுக்கொள்வதே இந்த கொடைக்கு அடிப்படையாக அமைந்துள்ளமை இதன்போது கவனஞ் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறான அங்கீகாரம் காணப்படும்போது, இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட பொதுவான இருதரப்பு வெளிநாட்டுதவி உடன்படிக்கைகள் மற்றும் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படும் முறைமைகளை விடவும் வித்தியாசமான முறையில் "சுயாதீன அலகொன்றை" உருவாக்கி அதனூடாக உத்தேச அபிவிருத்தி முதலீடுகள் செயற்படுத்தப்பட வேண்டும் என நிபந்தனை விதிப்பது ஒன்றுக்கொன்று முரணாக அமைகிறது.

(iv) மேலும் அவ்வாறான "சுயாதீன அலகொன்று" நிறுவப்படினும், அது நல்லாட்சி, சட்ட ஆட்சி மற்றும் முகாமைத்துவ வினைத்திறன் கொண்ட அரசாங்கத்திற்கு உரிய அலகாக (கம்பனியாக) MCC நிறுவனமே ஏற்றுக்கொள்வதாயின், அந்த அலகின் அலுவல்களில் தலையிட்டு வழிகாட்டல்களை வழங்குவதற்கு, விதந்துரைகளை வழங்குவதற்கு அல்லது அனுமதி வழங்குவதற்கு MCC நிறுவனம் இந்த கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை மூலம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமையும் பொருத்தமற்றதாகும். அத்துடன், அவ்வாறு தலையீடு செய்யும் அதிகாரங்கள் காணப்படினும், கூட்டு ஒப்பந்தத்திற்கு ஏற்புடையவாறு செய்யப்படும் எந்தவொரு அலுவலினதும் அல்லது அது செய்யப்படாமையின் விளைவாக ஏற்பட முடியுமான சேதம், இழப்பு, காயமடைதல் அல்லது மரணம் சம்பந்தமான பொறுப்பிலிருந்து MCC நிறுவனம் மற்றும் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தை விடுவிப்பதற்கு இந்த கூட்டு ஒப்பந்த உட்படிக்கையின் 6.8 பிரிவு மூலம் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அப்பிரிவுக்கு ஏற்ப, அவ்வாறான ஏதாவது பாதகமான நிலைமையொன்றினால் ஏற்பட முடியுமான சட்டரீதியான நடவடிக்கைகளின்போது ஐக்கிய அமெரிக்கா, MCC நிறுவனம் மற்றும் அதன் தற்போதைய அல்லது கடந்த கால அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் இலங்கையின் அனைத்து நீதிமன்றங்களின் அதிகார எல்லலையிலிருந்தும் விலக்களிக்கப்படுகின்றனர். அப்போது இயல்பாகவே எல்லாப் பொறுப்புக்களும் இலங்கை அரசாங்கத்தின் மீது சுமத்தப்படும். இந்த

ஏற்பாடுகளை இலங்கையினால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பது குழுவின் கருத்தாகும்.

(v) நிகழ்ச்சித்திட்டத்தை வழிநடாத்தும் MCA – Sri Lanka கம்பனியின் பணிப்பாளர் சபையில் வாக்குரிமையுடைய அங்கத்தவர்கள் இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிகள் என்பதால் அந்த பணிப்பாளர்கள் ஊடாக செய்யப்படும் ஏதாவது அலுவலின்போது இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அல்லது இலங்கையின் நலனுக்கு முரணாக செயற்பட முடியாது என கோட்பாட்டுரீதியான தர்க்கமொன்று முன்வைக்கப்படலாம். அவ்வாறாயினும், MCA – Sri Lanka கம்பனி அவ்வாறு இலங்கை அரசாங்கத்தின் நோக்கங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் செயற்படக் கூடாது எனத் தெரிவிக்கப்படும் எந்தவொரு பிரிவும் கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையில் அல்லது நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கையில் (PIA இல்) இல்லாவிடினும், அந்த கம்பனியின் எந்தவொரு அலுவலும் ஐக்கிய அமெரிக்காவின் சட்டங்கள், கொள்கைகள் அல்லது தேசிய பாதுகாப்பு நோக்கங்களுக்குப் புறம்பான வகையில் செய்யப்படக் கூடாது என கூட்டு ஒப்பந்தத்தின் 5.1(b)(iv) மற்றும் 5.1(b)(v) மற்றும் PIA இல் 1.3(b)(ii)(C) மற்றும் 1.3(b)(v) பிரிவுகளில் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்ட ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், மேற்குறிப்பிட்டவாறு MCA – Sri Lanka கம்பனியின் பணிப்பாளர்கள் தவிர, வேறு ஏதாவது வகையில் கம்பனியின் அல்லது கம்பனியினால் ஈடுபடுத்தப்படும் சேவை வழங்குனர்களின் அலுவல்களில் தலையீடு செய்ய <u>இலங்கை அரசாங்கத்திற்கு முடியாத வகையில்</u> (கூட்டு ஒப்பந்தம், நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கை மற்றும் அட்டவணை – 3C இல் உள்ள MCA – Sri Lanka கம்பனி அமைப்பு விதிகள் ஆகியன மூலம்) ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

(vi) அரசாங்கத்திற்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு அவ்வாறு MCA – Sri Lanka கம்பனி ஊடாக மேற்கொள்ளப்படும் அலுவல்களில் தலையீடு செய்ய முடியாத வகையில் ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டிருப்பினும், கூட்டு ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவளவுகளை உரிய முறையில் வழங்கும் பொறுப்பு கூட்டு ஒப்பந்தத்தின் 3.2(a) பிரிவு மூலம் இலங்கை அரசாங்கத்தின் மீது ஒப்படைக்கப்பட்டுள்ளது. தலையீடு செய்யும் அதிகாரங்கள் இல்லாத செயன்முறையொன்றின் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுவது முகாமைத்துவ முதன்மைக் கோட்பாடுகளுக்கும் முரணானதாகும்.

(vii) மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக கூட்டு ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டம் மற்றும் MCA – Sri Lanka கம்பனியின் அலுவல்கள் காரணமாக ஏதாவது நிதிப் பொறுப்புக்கள் உருவாக்கப்படின், அதற்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கான கடப்பாடுகூட இலங்கை அரசாங்கத்திற்கு காணப்படுவது தெளிவாகிறது. MCC கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் 5 ஆவது உறுப்புரை மற்றும் PIA இன் 5.7(a) பிரிவின் பிரகாரம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அல்லது PIA இன் 5.7(b) பிரிவுக்கு ஏற்ப ஒரு மாதம் கால அவகாசம் வழங்கிய பின்பு உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொள்வதற்கு MCC நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியுள்ளமையினால் இந்த நிலைமை மிகவும் பாரதூரமானதாக அமைகிறது. ஏதோ ஒரு வகையில் அவ்வாறான எதிரிடை நிகழும்போது அல்லது MCC உடன்படிக்கை நிறைவடையும்போது MCA – Sri Lanka கம்பனிக்கு அப்போது கடமையாகக் காணப்படும் கடன் அல்லது ஏனைய பொறுப்புக்களை 5.2, 5.3 மற்றும் PIA இன் 1.3(b)(viii) பிரிவுகளுக்கு ஏற்ப இலங்கை அரசாங்கம் நிச்சயமாகவே செலுத்த வேண்டியேற்படும். மேலும், அவ்வாறு எதிரிடை நிகழும்போது அது வரையும் வழங்கப்பட்ட கொடை நிதியில் ஒரு பகுதிக்கு இலங்கை அரசாங்கம் MCC நிறுவனத்திற்கு அல்லது ஐக்கிய அமெரிக்காவுக்கு கடனாளியாக மாறுவதற்கான இயல்பான வாய்ப்பு MCC கூட்டு ஒப்பந்தத்தின் 5.2 பிரிவிலும் PIA இன் 4.2(a) முதல் 4.2(e) வரையான பிரிவுகளின் ஏற்பாடுகளில் உள்ளடங்கியுள்ளதாக குழு அவதானிக்கிறது.

(viii) அத்துடன், உடன்படிக்கை நிறைவு செய்யப்படும் சந்தர்ப்பமொன்றில் தமக்குத் தேவையான அலுவல்களை இலங்கை விரும்பினும், விரும்பாவிடினும் எமது நாட்டினுள் தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கு MCC நிறுவனத்திற்கு முடியுமாக அமையும் வகையில் தேவையான ஏற்பாடுகளும் கூட்டு ஒப்பந்தத்தின் 5.1, 5.5 மற்றும் PIA இன் 4.2(h), 5.7, 5.8 ஆம் பிரிவுகளில் உள்ளமை குழுவின் அவதானத்திற்கு உட்படுகிறது. இலங்கை மீது நிதிப் பொறுப்புக்கள் சுமத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்படுமாயின், இலங்கை அரசாங்கம் மிகவும் சிரமத்திற்கு உட்படுவதுடன், அதனூடாக குறிப்பிடத்தக்க பேரம் பேசும் அதிகாரத்தைப் பயன்படுத்த MCC நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களைப் புறந்தள்ள முடியாது. இவ்வாறானதொரு நிலைமை காரணமாகவே MCC நிறுவனம் மடகஸ்காருக்கு வழங்கிய கொடையினை இடைநிறுத்திய போதிலும், அந்த நாட்டிற்கு அதன்

விளைவாக எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ள கடப்பாடுகளிலிருந்து நீங்கிக்கொள்ள முடியாதுள்ளதா என்பதை ஆராய்வது முக்கியமாக அமையலாம்.

5.1.2 பெறுகை முறைமை மற்றும் வழங்கல் தோற்றுவாய்கள்

(i) இந்த உடன்படிக்கைக்கு ஏற்புடைய கருத்திட்டங்களைச் செயற்படுத்த முன்மொழியப்பட்டுள்ளவை அதற்கு ஏற்புடைய இலங்கை அரசாங்கத்தின் நிறுவனங்கள் அல்ல. குறைந்தபட்சம் இலங்கைக் கம்பனிகளுக்கு வரையறுக்கப்பட்ட ஒப்பந்தங்கள் ஊடாகவும் அல்ல. ஏனைய இருதரப்புக் கடன் அல்லது உதவித் திட்டங்களில் காண முடியுமான அந்தந்த நாடுகளைச் சேர்ந்த வழங்கல் கம்பனிகளிலிருந்தே சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகள் இந்த MCC கொடையில் நிபந்தனையாக விதிக்கப்படாமை நம்பிக்கை ஏற்டுத்தக்கூடிய ஒன்று என்பது உண்மையே. எனினும், இலங்கையின் பெறுகைச் செயன்முறையை நிராகரிக்கும் வகையில் அமெரிக்க/ MCC பெறுகைச் செயன்முறைகள் ஏற்புடையனவாகும் முறையில் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட வேண்டும் என நிபந்தனைகளை விதிப்பதன் மூலமும் அச்செயன்முறை ஊடாகத் தெரிவுசெய்யப்படும் வழங்குனர்களுக்கு MCC நிறுவனத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என ஏற்பாடுகள் செய்யப்படுவதன் ஊடாகவும் அந்த நேர்மறையான வாய்ப்புக்கள் இல்லாமற் போயுள்ளன.

(ii) இந்த பெறுகைச் செயன்முறை ஊடாக கருத்திட்டங்களைச் செயற்படுத்தும்போது தேசியரீதியாகவும் அரச பாதுகாப்பு சம்பந்தமாகவும் கூர்உணர்வுடைய காரணங்களின் அடிப்படையில் மாத்திரமேனும் ஏற்புடைய வழங்குனர்கள் அல்லது கம்பனிகளின் தெரிவை இலங்கையின் அரச நிறுவனங்களுடன் வரையறுப்பதற்கான வாய்ப்புக்கள் இலங்கைக்கு இல்லை. அவ்வாறான நிலைமையில் காணிகளை அளவையிடுதல், வரைபடம் தயாரித்தல், தரவுக் களஞ்சியங்களை ஏற்படுத்தல், மத்தியரீதியான வாகனக் கட்டுப்பாட்டு முறைகளைத் தயாரித்தல் போன்ற நாட்டின் பாதுகாப்பு, அரசியல்-பொருளாதார மற்றும் சமூக இறையாண்மையில் தாக்கம் செலுத்துவதற்குப் பயன்படுத்த முடியுமான தகவல்கள் அல்லது கணனி உள்ளீடுகள் எவ்விதமான கட்டுப்பாடுமின்றி, வரையறையின்றி உள்நாட்டு, வெளிநாட்டு ஒப்பந்ததாரர்களின் கைகளுக்குச் சென்றடைவதைத் தடுக்க முடியாது. இந்த நிலைமையும் ஒருபோதும் பொருத்தமானதல்ல என்பதே குழுவின் கருத்தாகும்.

5.1.3 நிகழ்ச்சித்திட்ட சொத்துக்கள், கூர்உணர்வுடைய தகவல்கள் மற்றும் புலமைச் சொத்து உரிமை

(i) கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கையில் "நிகழ்ச்சித்திட்ட சொத்துக்கள்" (Program Assets) எனக் கருதப்படும் (இயந்திர – உபகரணங்கள் - கருவிகள் போன்ற பொருள்ரீதியான சொத்துக்களைப் போன்றே தகவல்கள் - தரவுகள் - மென்பொருள் போன்ற பொருள் வகையல்லாத சொத்துக்களும் உள்ளடங்க முடியுமான) எதனையும் ஐக்கிய அமெரிக்காவின் தேசிய கொள்கைகள் மற்றும் தேசிய பாதுகாப்புக்கு முரணாகப் பயன்படுத்த முடியாது என கூட்டு ஒப்பந்தத்தின் 5.1(b)(iv), 5.1(b)(v) இல் குறிப்பிடப்படினும், அவை எதனையும் இலங்கையின் தேசிய கொள்கைகள் மற்றும் தேசிய பாதுகாப்பு நோக்கங்களுக்கு முரணாகப் பயன்படுத்த முடியாது என்ற எந்தவொரு ஏற்பாடும் ஏற்புடைய உடன்படிக்கைகளில் உள்ளடங்கவில்லை.

(ii) கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் V ஆவது இணைப்பில் புலமைச் சொத்து சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள பொருள் கூறலுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய கூட்டு ஒப்பந்தத்தின் 3.9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இந்த நிலைமை மிகவும் பாரதூரமானதாக அமைகிறது. அந்தப் பிரிவுக்கு ஏற்ப இந்த கூட்டு ஒப்பந்தத்திற்கு ஏற்புடைய அனைத்து அலுவல்களின்போது பயன்படுத்தப்படும் தகவல்கள் மற்றும் அந்த கூட்டு ஒப்பந்தத்தை செயற்படுத்தும்போது தோற்றுவிக்கப்படும் அனைத்து தரவுகள் - குறிப்புக்கள் - புள்ளிவிபரங்கள் - தகவல்களின் முழுமையான புலமைச் சொத்து உரிமை MCC க்கு கிடைக்கிறது. விசேடமாக, தேசிய பாதுகாப்புக்கு, பொருளாதார இறையாண்மைக்கு கூர்உணர்வுடையனவாக அமைய முடியுமான காணி போன்ற துறைகள் தொடர்பாகவும், சமகால மற்றும் எதிர்கால பிரஜை சந்ததியினருக்காக அரசு உடைமையுரிமை கொண்டுள்ள தேசிய சொத்துக்கள் தொடர்பான துல்லியமான தகவல்கள் எமது நாட்டுப் பிரஜைகளுக்கேனும் வரையறையின்றி வெளிப்படுத்தப்படாத நிலைமையில், அவற்றை எவ்விதமான தடையுமின்றி வெளிநாட்டு நிறுவனமொன்றின் புலமைச் சொத்தாக மாற்றுவது எந்த வகையிலும் பொருத்தமானதல்ல. எனவே அவ்வாறான பிரிவுகளையுடைய உடன்படிக்கையொன்று அரச உயர் நிறுவனங்களில் அல்லது குறைந்தபட்சம் அமைச்சரவையிலேனும் நிராகரிக்கப்படாமை புரிந்துகொள்ள முடியாத அபாயமான நிலைமையாகும். இது தொடர்பாக நுண்ணாய்வுரீதியான விதந்துரைகள்

அமைச்சரவைக்கு கிடைத்திருந்தனவா, இன்றேல் ஏன், அவ்வாறான நிலைமையொன்று மீண்டும் ஏற்படாதிருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை ஆகிய சிக்கல்கள் தொடர்பாக அரசாங்கத்தின் கவனம் விரைவாக ஈர்க்கப்பட வேண்டும் எனக் குழு வலியுறுத்துகிறது.

(iii) மேலும், "நிகழ்ச்சித்திட்ட சொத்துக்களுக்கு" விசேட விதிவிலக்கு கிடைக்கும் வகையிலும், அவற்றுக்கு எவ்விதமான சட்டரீதியான அல்லது ஒழுங்குபடுத்தல்ரீதியான தடுத்து வைத்தல் தவிர்க்கப்படும் வகையிலும், ஏதாவது காரணத்தினால் MCC இன் முன் அனுமதியின்றி அவ்வாறு தடுத்து வைக்கப்படின் அவற்றை உடனடியாக விடுவிப்பதற்கு இலங்கை அரசாங்கத்தைக் கட்டுண்டதாக வைக்கும் வகையிலும், ஏதாவது இழப்பீடு வழங்கப்பட வேண்டுமாயின் அதன் ஒட்டுமொத்த பொறுப்பினையும் இலங்கை அரசாங்கம் ஏற்க வேண்டும் என்ற வகையிலும் PIA இன் 1.2(b)(i), 1.3(iii) ஆம் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என்பதாலேனும், MCC செயன்முறைக்கு ஏற்புடைய எந்தவொரு கருவி – பொருள் - உபகரணத்தையும் தடை செய்வதனை அல்லது தடுத்து வைப்பதனை விட்டும் இலங்கை தடுக்கப்பட்டுள்ளமை இதனூடாகத் தெளிவாகிறது. இலங்கையின் சுங்க ஒழுங்குவிதிகள் செயற்படுத்தப்படுவதுகூட இந்த ஏற்பாடுகள் மூலம் தடுக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக குழு அவதானிக்கிறது.

(iv) மேற்குறிப்பிட்டவாறு நிகழ்ச்சித்திட்ட சொத்துக்களின் புலமைச் சொத்து உரிமை உட்பட உரிமைகள் MCC க்கு உடைமையானதாக மாறுமாயின், அவற்றைப் பயன்படுத்தி சேவைகளைத் தோற்றுவிக்கும்போது MCC நிறுவனத்திற்கு இலங்கையின் ஏற்புடைய அரச நிறுவனங்கள் பொருளாதார உரிமைகள் (economic rights) கட்டணங்களைச் செலுத்த வேண்டியேற்படுவதற்கான வாய்ப்புக்களைப் புறந்தள்ள முடியாது.[12] இது மிகவும் பாராதூரமான நிலைமையாகும்.

(v) மேலும், கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் (Compact இன்) 5.1 மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கையின் (PIA இன்) 5.7 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கூட்டு ஒப்பந்தம் நிறைவு செய்யப்படும்போது, நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுவதன் மூலம் உருவாக்கப்பட்ட – பெற்றுக்கொள்ளப்பட்ட "நிகழ்ச்சித்திட்ட சொத்துக்கள்" MCC நிறுவனத்தினால் கோரப்படுமாயின் அந்த நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அல்லது அவ்வாறு செய்ய முடியாவிடின் அவற்றுக்கு ஏற்புடைய சந்தைப் பெறுமதியை அமெரிக்க டொலர்களில் MCC க்கு செலுத்துவதற்கு கூட்டு ஒப்பந்தத்தின் 5.3(a),

[12] 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் 6 ஆவது பிரிவில் அர்த்தமுள்ள பாதுகாப்பான படைப்புக்கள் (works which are protected) எனக் கருதப்படும் சொத்துக்களைப் பயன்படுத்துவோரிடமிருந்து அதற்காக பொருளாதார உரிமைகள் (economic rights) கட்டணங்களைப் புலமைச் சொத்து உரிமையாளர் அறவிட முடியும்.

5.3(b) மற்றும் PIA இன் 1.2(ii), 4.2(d), 4.2(e) ஆம் பிரிவுகள் மூலம் இலங்கை அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. உதாரணமாக "நிகழ்ச்சித்திட்ட சொத்துக்கள்" எனக் கருதப்பட முடியுமான அரச காணிகள் தொடர்பான தரவுகள், தரவுக் களஞ்சியங்கள், மென்பொருள்கள், வரைபடங்கள் போன்ற தகவல்கள், அவற்றின் இட அமைவுக்கு ஏற்ப வணிகரீதியாக மாத்திரமன்றி தேசிய பாதுகாப்பு தொடர்பான நோக்குநிலையிலும் மிகவும் கூர்உணர்வுடைய, பெறுமதியான வரைபடங்கள், திட்டங்கள், தரவுகள் ஆகியவற்றை இந்த ஏற்பாட்டின் கீழ் MCC நிறுவனத்திற்கு உடைமையுரிமையுள்ளதாக மாற்றிக்கொள்வதற்கான வாய்ப்புக்களை இதன் மூலம் புறந்தள்ள முடியாது.

(vi) மேலும் PIA இன் 1.2(b)(ii) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி நிகழ்ச்சித்திட்டம் முடிவடைந்து மேலும் ஐந்து வருடங்கள் கழியும் வரை சொத்துக்கள் சம்பந்தமாக நிகழ்ச்சித்திட்ட சொத்துக்களுடன் தொடர்புடைய வணிகரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் இறையாண்மை உரிமையும் இலங்கைக்கு இல்லாமற் செய்யப்பட்டுள்ளது.

(vii) நிகழ்ச்சித்திட்ட சொத்துக்கள் தொடர்பாக சுதந்திரமாக தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமையும் கூட்டு ஒப்பந்தத்தின், PIA இன் பிரிவுகள் மூலம் இலங்கைக்கு இல்லாமற் செய்யப்பட்டுள்ளது என்பதே மேலுள்ள பரிசீலணை மூலம் தெளிவாகிறது. ஏற்புடைய சொத்துக்களை உருவாக்குவதற்காக இலங்கைக்கு நிதியுதவி வழங்கி அவற்றின் உரிமையையும், செயற்படுத்துவதற்கான திறவுச் சொற்களையும் தமக்கு உரிமையாக்கிக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இதன் மூலம் MCC நிறுவனத்திற்கு கிடைக்குமாயின், இது இலங்கைக்கு வழங்கும் அபிவிருத்தி உதவியை விடவும், இலங்கையின் உள்ளக சேவை வழங்கல்களைத் தடையின்றி தமது நிறுவனங்களுக்கு உரிமையாக்கிக் கொள்ளும் வணிக நோக்கத்துடன் அமெரிக்காவினால் மேற்கொள்ளப்படும் முதலீடாகக் கருத முடியும் என்பதே இனூடாகப் புலனாகிறது.

5.1.4 பிணக்குத் தீர்வு முறைமை

(i) MCC கூட்டு ஒப்பந்தம் செயற்படுத்தப்படும்போது ஏற்பட முடியுமான கருத்து வேறுபாடான நிலைமைகளின்போது MCC நிறுவனம் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கிடையிலான பிணக்குகளைத் தீர்ப்பது தொடர்பான எவ்விதமான திட்டவட்டமான செயன்முறையொன்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்படவில்லை

என்பதுடன், PIA இன் 4, 5 ஆவது பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குழப்பமான ஏற்பாடுகள் ஊடாகவும் இலங்கை அரசாங்கத்திற்கு அனுகூலமான அல்லது நியாயமான நிலைமையொன்று எந்த வகையிலும் வெளிப்படவில்லை என்பதே குழுவின் கருத்தாகும். மேலும் இந்த நிலைமையின் கீழ் கூட்டு ஒப்பந்தத்திற்கு மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய உடன்படிக்கைகளுக்கு "சர்வதேச சட்டம்" ஏற்புடையதாக அமையும் என கூட்டு ஒப்பந்தத்தின் 6.4 ஆம் பிரிவில் உள்ள குறிப்பீட்டில் எவ்விதமான சட்டரீதியான பெறுமானமோ அல்லது முக்கியத்துவமோ இல்லை.

(ii) அத்துடன், மேற்குறிப்பிட்டவாறு பிணக்குகளைத் தீர்ப்பதற்கான முறைமையொன்று இல்லாத நிலைமையில் உடன்படிக்கையை முடித்தல், தற்காலிகமாக நிறுத்துதல் அல்லது இடைநடுவில் மேலும் நடாத்திச் செல்ல முடியாத நிலையொன்று ஏற்படின் உருவாகக்கூடிய மேலே விபரிக்கப்பட்ட நிதிரீதியான பொறுப்புக்கள் தொடர்பான, ஆதனங்கள் மற்றும் சொத்துக்களின் உரிமை தொடர்பான, MCC பிரதிநிதிகள் மற்றும் முதலீட்டாளர்கள் தொடர்ந்தும் நாட்டினுள் தங்கியிருப்பதைத் தடுக்க முடியாத வாய்ப்புக்கள் தொடர்பான அபாயகரமான பின்விளைவுகள் பற்றி இலங்கை அதிகாரிகள் மிகவும் நுட்பமாக ஆராய வேண்டும்.

(iii) MCC நிபந்தனைகளின் ஏற்பாடுகளை ஒன்றிணைத்துக் கருத்திற்கொள்ளும்போது எதிர்காலத்தில் ஏற்பட முடியுமான பிணக்குகள் அல்லது பிரச்சினையான நிலைமையொன்றின்போது நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பின்விளைவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களையும் புறந்தள்ள முடியாது என்பதை அதனூடாக அனுமானிக்க முடிகிறது. அவ்வாறான நிலைமையொன்றின்போது, இது வரை காலமும் செயற்பாட்டு நிலையில் காணப்படாத ACSA, SOFA, Peace Corps போன்ற உடன்படிக்கைகளின் ஏற்பாடுகள் ஊடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள உரிமைகளை பலம் பொருந்திய நாடான ஐக்கிய அமெரிக்கா செயற்படுத்துவதற்கான அபாயம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் அதிக கவனஞ் செலுத்தப்பட வேண்டும்.

5.1.5 சட்டரீதியான மற்றும் அரசியலமைப்பு ஏற்பாடுகள்

(i) உத்தேச கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் முதலாவது வரைவில் அந்த கூட்டு ஒப்பந்தம் இலங்கையின் சட்ட அமைப்பை விடவும் மேலானதாக இருக்க வேண்டும்

எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இறுதிக் கலந்துரையாடல் இணக்கப்பாட்டுக் கூட்டத்தில் அந்த நிபந்தனை தொடர்பாக இலங்கைப் பிரதிநிதிகளின் கவனஞ் செலுத்தப்பட்டபோது அதனை நீக்குவதற்கும், தேவையான ஏற்பாடுகளுடன் கூடிய கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை இலங்கைப் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்படுவதன் ஊடாக அதற்கு இலங்கையினுள் சம மட்டத்திலான செல்லுபடியாகும் தன்மையை வழங்குவதற்கும் MCC நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை புலனாகிறது.

(ii) அதற்கேற்ப, மேலே 5.1.1, 5.1.2, 5.1.3, 5.1.4 இல் விபரிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளும் உள்ளடங்கிய கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை வரைவொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் 7.1 ஆம் பிரிவு மூலம் வெளிப்படுத்தித் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அந்த உடன்படிக்கை இலங்கைப் பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

(iii) அந்த உடன்படிக்கைகளின் பிரிவுகளை [விசேடமாக கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் 2.2, 3.3, 3.5, 3.6(a), 3.8(a), 3.8(b), 5.1(b)(iv) ஆம் பிரிவுகளை] ஆராயும்போது இலங்கையினுடையதல்லாத சட்டவிதிமுறைகள் - ஒழுங்குவிதிகள் - முறைமைகள் சில (உதாரணமாக, Section 607 of the Millennium Challenge Act of 2003, MCC's Program Procurement Guidelines, Accounting Principles prevailing in the US, MCC's Guidelines for Financial Audits, United States Government Policy, போன்ற) இதனூடாக இலங்கையினுள் சட்டரீதியான அங்கீகாரமொன்றுக்கு உட்படுவது அவதானிக்கப்படுகிறது.

(iv) இது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையாகும் என்பதுடன், இலங்கையின் சட்ட அமைப்புக்கு அன்னியமான, தாக்கத்தின் பரப்பெல்லை பற்றிய ஆழ்ந்த அறிவு எம்மிடம் இல்லாத நிறுவன சட்ட சட்டகமொன்றை குறைந்தபட்சம் இந்த கூட்டு ஒப்பந்தத்தின் அலுவல்களுக்காக மாத்திரமேனும் நாட்டினுள் சட்டமாக்குவதற்கும், பொதுவாக நாட்டினுள் செயற்படும் அனைத்து நிறுவனங்களுக்கும் ஏற்புடைய சட்டரீதியான சட்டகத்திற்குப் புறம்பாக செயற்படுகின்ற இலங்கை அரசுக்கு உரித்தான சட்டரீதியான நிறுவனமொன்றை எமது நாட்டினுள் உருவாக்குவதற்கும் இந்த உடன்படிக்கை ஊடாக முயற்சிக்கப்பட்டுள்ளமை இதில் குழுவின் அவதானத்திற்கு உட்படுகிறது. அதன் மூலம் இந்த ஒட்டுமொத்த முன்மொழிவுகள் மற்றும் உத்தேச முறைமையின்

நோக்கங்களின் நேர்மைத்தன்மை இயல்பாகவே சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றது என்பது குழுவின் கருத்தாகும்.

(v) இதற்கு மேலதிகமாக, அந்த உடன்படிக்கைகளின் நிபந்தனைகளை இரு தரப்பினரதும் பிரதான பிரதிநிதிகளிடையே கைச்சாத்திடப்படும் உடன்பாட்டு கடிதங்கள் மூலம் திருத்தியமைக்க முடியும் என கூட்டு ஒப்பந்தத்தின் 6.2 ஆம் பிரிவு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கையின் (PIA) இன் 5.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி அவசியமற்றது என PIA இன் ஏற்பாடுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பாரதூரமான பரஸ்பர விரோதமான அம்சமாகும். பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளையுடைய சட்டமொன்றின் பிரிவுகளை மீண்டும் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மாற்றுவதற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளமை ஊடாக பொதுமக்களுக்கு உரித்தான மீறப்பட முடியாத சட்ட உருவாக்க அதிகாரங்களை நீக்குவதற்கான முயற்சியொன்று வெளிப்படுகின்றது என்பதும், அது இலங்கை அரசாங்கத்தினால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியுமான நிலைமையொன்று அல்ல என்பதும் குழுவின் கருத்தாகும்.

(vi) மேலே விபரிக்கப்பட்டுள் நிலைமைகள் இலங்கை அரசியலமைப்பின் 4 ஆவது உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 3 ஆவது உறுப்புரையின் அர்த்தபூர்வமாக நீக்கப்பட முடியாத மக்கள் இறையாண்மை எனும் அம்சம் மறைமுகமான வழிமுறையில் மீறப்படுகிறது என்பது குழுவின் கருத்தாகும். அவ்வாறு செய்வது பொருத்தமற்றது மாத்திரமன்றி, பொருத்தமானது என விதந்துரைகளை வழங்கிய, அனுமதித்த அனைத்து நிறுவனங்களும் அரசியலமைப்பினைப் பாதுகாப்பதற்கு வழங்கியுள்ள உறுதிப்பிரமாணத்தை தகர்த்தெறிந்துள்ளதாகவும் குழு அவதானிக்கிறது.

5.2 ஆவணங்கள் மூலம் வெளிப்படும் சட்டரீதியான முரண்பாடுகள்

(i) மேற்குறிப்பிட்ட நிலைமைகள் உட்பட, MCC உடன்படிக்கையில், நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கையில் (PIA), ஏனைய உத்தேச கட்டமைப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையின் அரசியலமைப்புக்கு அல்லது / மற்றும் சட்டரீதியான சட்டகத்திற்கு முரணான நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளைப் பின்வருமாறு சாராம்சப்படுத்த முடியும் :

(அ) கூட்டு ஒப்பந்தத்தின் 7.1 ஆம் பிரிவு –

- கூட்டு ஒப்பந்தத்தை அதன் அன்னியமான சட்ட ஏற்பாடுகளுடன் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்பதில் அரசியலமைப்பின் 4(ஆ) உப உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 3 ஆவது உறுப்புரையின் அர்த்தபூர்வமான, மக்களுக்குச் சொந்தமான பிறருக்குச் சொந்தமாக்க முடியாத யாப்பு உருவாக்கல் ஏக அதிகாரம் மீறப்படுகிறது.

- இந்தக் கொடை ஒரு முதலீடு என்பதால் அதற்கு பாதுகாப்பொன்று தேவைப்படின், அது பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அரசியலமைப்பின் 157 ஆவது உறுப்புரை இப்பிரிவு மூலம் தவற விடப்பட்டுள்ளது.

(ஆ) கூட்டு ஒப்பந்தத்தின் 3.2(a), 3.2(b), 3.8 மற்றும் PIA இன் 1.3(b)(i), 1.3(b)(ii), 1.3(b)(iv), 2.10(c) ஆகிய பிரிவுகள்-

இப்பிரிவுகள் ஊடாகத் தெரிவிக்கப்பட்டுள்ள முறைமைக்கு ஏற்ப MCC கொடை நிதி இலங்கையின் திறைசேறி ஊடாக நிறுவப்பட்டுள்ள நிறுவனச் சட்டகத்தினுள் முகாமைத்துவம் செய்யப்படுவதில்லை. அந்த நிதி அரச பொது நிதியில் வரவு வைக்கப்படுவதில்லை என்பதுடன் அவற்றின் செலவினங்களும் பொது நிதியிலிருந்து செய்யப்படும் செலவினங்களாக கருத்தப்பட மாட்டாது. மேலும், இந்த நிதி முகாமைத்துவம் தொடர்பான கணக்காய்வுகள் MCC வழிகாட்டல்களுக்கு இணங்கியவாறு இடம்பெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை மூலம் பாராளுமன்றத்தினால் செய்யப்பட வேண்டிய அரச நிதிக் கட்டுப்பாட்டில் கணக்காய்வாளர் நாயகத்தின் கடமைப்பொறுப்பினை இந்த ஏற்பாடுகள் விஞ்சிச் செல்கின்றன. இதனால் பாராளுமன்றம் மூலம் இடம்பெற்ற வேண்டிய பொதுமக்களுக்குச் சொந்தமான நிதிக் கட்டுப்பாடு தொடர்பான சட்டரீதியான முறைமை தவறவிடப்படுவதால், அது இலங்கை அரசியலமைப்பின் 17 ஆம் அத்தியாயத்தின் 148, 149, 150 ஆம் உறுப்புரை ஏற்பாடுகளை விஞ்சிச் செல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும்.

(இ) கூட்டு ஒப்பந்தத்தின் 3.6 மற்றும் PIA இன் 2.1 (d) ஆம் பிரிவுகள் -

MCC யின் தற்றுணிபுக்கு ஏற்ப அதன் வழிகாட்டல்களுக்கு அமைவாக சுயாதீன பெறுகை பிரதிநிதியொருவர் ஊடாக அனைத்துப் பெறுகைகளையும் மேற்கொள்வதற்காக உள்ளடக்கியுள்ள ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் பெறுகை முறைமையினுள் எதிர்பார்க்கப்படும் சுயாதீனத்தன்மை மற்றும் நோக்கங்களுக்கு முரணானவையாகும்.

(ஈ) கூட்டு ஒப்பந்தத்தின் 3.9 ஆம் பிரிவு –

கூட்டு ஒப்பந்தத்தில் எதிர்பார்க்கப்படுகின்றவாறு கருத்திட்டத்தின் பெறுபேறாகப் பெற்றுக்கொள்ளப்படும் தரவுகள் தகவல்கள் உட்பட வெளியீடுகளின் புலமைச் சொத்து உரிமைகள் MCC நிறுவனத்திற்கு முழுமையாக ஒப்படைக்கப்படின், 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் 6 ஆவது பிரிவில் அர்த்தமுள்ள பாதுகாப்பான படைப்புக்கள் தொடர்பான சட்டரீதியான உரிமைகள் இலங்கையின் தேசிய நோக்கங்களுக்கு முரணாக செயலுருப் பெறுவதற்கான வாய்ப்புக்களைப் புறந்தள்ள முடியாது. உதாரணமாக, அரச பாதுகாப்புக்கு முக்கியமானதாக அமைய முடியுமான காணி தொடர்பான கூர்உணர்வுடைய தரவுகள், போக்குவரத்து அமைப்பின் தன்னுரிமைக்கு மற்றும் அந்த அமைப்பினைப் பயன்படுத்துகின்ற வாகனங்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பில் தாக்கம் செலுத்த முடியுமான தகவல்களும் இதனூடாக பிறரைச் சென்றடைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

(உ) கூட்டு ஒப்பந்தத்தின் I ஆம் பின்னிணைப்பின் B-2 இன் காணிக் கருத்திட்டம்

அரச காணிகளில் உரிமைப்பத்திரங்களைக் கொண்டுள்ளவர்களுக்கு அறுதி உறுதிப்பத்திரங்களை வழங்கி அந்தக் காணிகளை சந்தையில் நுழையச் செய்ய இக்கருத்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு 1974 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச் சட்டம் திருத்தப்பட வேண்டும். எனினும், அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட காணி (விசேட ஏற்பாடுகள்) சட்ட வரைவு, அதனை நிறைவேற்றுவதற்கு 2/3 விசேட பெரும்பான்மை வாக்குகள் பாராளுமன்றத்தில் அவசியமாகும் என உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு காரணமாக 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதி அகற்றிக்கொள்ளப்பட்டது. அத்துடன். இவ்வாறு அரச காணிகளுக்கு அறுதி உரிமைகளை வழங்குவதற்காக 2003 ஒக்டோபர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட

காணி உரிமைகள் சட்ட வரைவும், அதனை நிறைவேற்ற வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை வாக்குகளின் பின்பு சர்வஜன வாக்கொடுப்பில் அதற்கு சார்பாக அனுமதி கிடைக்க வேண்டும் என கௌரவ உயர் நீதிமன்றம் 2003 டிசம்பர் 10 ஆந் திகதி தீர்ப்பளித்தமையினால் அகற்றிக்கொள்ளப்பட்டுள்ளது (இணைப்பு – 16).

அதற்கேற்ப,

- காணி கட்டளைச் சட்டத்தில் ஏற்புடைய திருத்தங்கள் இடம்பெறாமையினால், MCC முன்மொழிவுகளில் அரச காணிகளுக்கு அறுதி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கு முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்டம் நாட்டில் நிலவும் சட்டத்திற்கு முரணானதாகும்.
- அவ்வாறு விசேட பெரும்பான்மையின்றி திருத்தம் செய்ய முடியாத, ஏலவே நிலவும் சட்டத்திற்கு முரணான நிபந்தனைகள் மற்றும் செயற்பாடுகளைக் கொண்ட முன்மொழிவுகளை பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மூலம் சட்டமாக நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கப்படின், அவ்வாறான முயற்சி அரசியலமைப்புக்கு முரணானதாக அமையும்.

மேலும்,

- கூட்டு ஒப்பந்தத்தின் இணைப்பு – I இல் காணிக் கருத்திட்டங்கள் தலைப்பின் கீழ் இலக்கம் (v) உப பந்தியின் (g) யில் இந்தக் கருத்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டுமாயின் ஏலவே காணப்படும் 1998 ஆம் ஆண்டின் காணி உரிமைகளைப் பதிவுசெய்வதற்கான சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பது முன்நிபந்தனையாக வெளிப்படுத்திக் குறிப்பிடப்பட்டுள்ளமை ஊடாகவும் அந்தக் கருத்திட்டம் நாட்டில் அமுலிலுள்ள சட்டரீதியான சட்டகத்திற்கு இணக்கமானதாக இல்லை என்பதே தெளிவாகிறது.

5.3 சட்டரீதியான பரிசீலணைகளின் பொழிப்பு

(i) (அ) மேலே 5.1, 5.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கையில் நிலவும் சட்டரீதியான சட்டகத்திற்கு முரணான நிபந்தனைகள் MCC முன்மொழிவுகளில் உள்ளடங்கியுள்ளமையினால், அவற்றை அகற்றினாலேயொழிய இந்த MCC முன்மொழிவுகளுக்கு ஏற்புடைய உடன்படிக்கைகளில் இலங்கையினுள் கைச்சாத்திடுவதோ அல்லது அவற்றைச் செயற்படுத்துவதோ சட்டபூர்வமானதாக அமைய முடியாது.

(ஆ) அவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டிருக்கும்போது, மேற்குறிப்பிட்ட அனைத்து ஒவ்வாத்தன்மைகளும் உள்ளடங்கிய கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையை (Compact Agreement) இலங்கையில் பாராளுமன்றச் சட்டமாக சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கும், அதனூடாக அதில் உள்ளடங்கியுள்ள அன்னியமான சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு இலங்கை சட்டத்துடன் சம தரத்தினை வழங்கவும் வெளிப்படுத்தித் தெரிவித்து எதிர்பார்த்துள்ளமை தொடர்பாக குழு அதிசயிக்கிறது. ஏனெனில் அது ஒருபோதும் வெளிப்படையான அல்லது ஜனநாயகச் செயன்முறை அல்ல. அது பொதுமக்கள் அறியாமல் அவர்களது சட்ட உருவாக்க அதிகாரத்தில் மறைமுகமான வழியில் நுழைவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியே என்பது குழுவின் அபிப்பிராயமாகும்.

(இ) எனவே, அவ்வாறான ஏற்பாடுகள் உள்ளடங்கிய உடன்படிக்கை வரைவொன்றை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கும்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் கருத்து வினவப்பட்டதா, அவ்வாறு வினவப்பட்டிருப்பின் அது சம்பந்தமாக அமைச்சரவைக்கு கௌரவ சட்டமா அதிபரினால் கருத்தொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி அரசாங்கம் விசேடமாக ஆராய வேண்டும் எனக் குழு கருதுகிறது.

(ஈ) MCC இன் பிரதான நிறைவேற்று அலுவலரினால் வொஷிங்டனில் அமைந்துள்ள இலங்கை தூரகத்தின் Chargé d'Affaires ஊடாக கௌரவ சட்டமா அதிபர் அவர்களுக்கு 2018 செப்டம்பர் 27 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தின் (இணைப்பு – 17 மற்றும் அட்டவணை - 3: F4-62) உள்ளடக்கமும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. MCC கூட்டு ஒப்பந்தம் மற்றும் ஏற்புடைய நிகழ்ச்சித்திட்டங்களை செயலுருப்படுத்துவதற்கான ஒழுங்குமுறையினுள் கூட்டு ஒப்பந்தம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட இணக்கப்பாடுகளைச் செயற்படுத்தும்போது குறித்த கூட்டு ஒப்பந்தம் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான உடன்படிக்கைகள், இணக்கப்பாடுகள் இலங்கையில் ஏலவே நிலவும் மற்றும்/ அல்லது எதிர்காலத்தில் உருவாக்கப்படும் சட்டமொன்றுடன் முரண்படுகின்ற அல்லது ஒவ்வாத நிலையொன்று ஏற்படின், இலங்கையின் சட்டரீதியான ஏற்பாடுகளை விஞ்சி கூட்டு ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை வலுப்பெறச்

செய்வதற்குத் தேவையான அனைத்து சட்டரீதியான ஏற்பாடுகளும் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துகின்ற சட்டரீதியான கருத்தொன்றை கௌரவ சட்டமா அதிபர் அவர்கள் கட்டாயமாக வெளியிட்டு MCC க்கு சமர்ப்பிக்க வேண்டும் என அந்தக் கடிதம் மூலம் இலங்கை அரசாங்கத்தின் பிரதான சட்ட ஆலோசகரான சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) மேலே (ஈ) இல் எதிர்பார்க்கப்பட்டுள்ள முறையிலான கருத்தொன்றை கௌரவ சட்டமா அதிபர் ஏதோ ஒரு வகையில் வழங்கினால், அதன் பின்பு மேற்குறிப்பிட்டவாறான முரண்பாடு அல்லது ஒவ்வாத நிலையின்போது அரச கொள்கைக்கு ஏற்ப பிற்காலத்தில் கொண்டு வரவேண்டிய தேவை ஏற்படும் வாய்ப்புடைய சட்டமொன்றின் அமுலாக்கத்திற்காக நீதிமன்றமொன்றில் முன்னிலையாவதற்கு சட்டமா அதிபருக்கு நடைமுறைரீதியாக முடியாமற் போகும்.

(ஊ) அத்துடன், மேலே (உ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான நிலைமையொன்றுக்கு வழிவகுக்க முடியுமான (ஈ) இல் எதிர்பார்க்கப்படும் சட்டரீதியன ஏற்பாடொன்றை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு வலுப்பெறச் செய்யுமாயின், அது எமது பிரஜைளுக்கு உரித்தான உரிமை மாற்ற முடியாத மற்றும் மீற முடியாத சட்டங்கள் மற்றும் யாப்புக்களை உருவாக்குவதற்கான அதிகாரத்தினை நாமே கைவிடுவதாக அமைவதுடன், அது இறையாண்மையுள்ள ஒரு நாட்டினால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிபந்தனை அல்ல என்பதை வலியுறுத்திக் கூற வேண்டும்.

(ii) (அ) இலங்கையின் சட்ட சட்டகத்திற்கு முரணான ஏற்பாடுகளையுடைய பிரிவுகள் MCC கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையிலும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கையிலும் (PIA) உள்ளடங்கியுள்ளமை, (ஆ) வெளிநாட்டு வளங்கள் முகாமைத்துவம் தொடர்பாக இலங்கையில் காணப்படும் சட்டரீதியான மற்றும் பொதுவான முறைமை தவறவிடப்படும் வகையில் நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதற்கு, கருத்திட்டங்களை வழிநடாத்துவதற்கு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைக் கண்காணிப்பதற்கான முறைமைகள் தயாரிக்கப்பட்டுள்ளமை, (இ) அரச கட்டுப்பாட்டிற்கு அப்பால் காணப்படுகின்ற "சுயாதீனமானது" என அழைக்கப்படும் MCA – Sri Lanka எனும் கம்பனி ஊடாக கருத்திட்டங்களைச் செயற்படுத்த வேண்டியுள்ளமை, (ஈ) இந்த உடன்படிக்கைகள் மற்றும் முறைமையினைப் பாராளுமன்றச் சட்டமொன்றாக சட்டமாக்கப்பட வேண்டும் என்றவாறு தயாரிக்கப்பட்டுள்ள மாதிரித் திட்டம் ஆகியனவே மேலே விபரிக்கப்பட்ட சிக்கல்களின் தொகுதிக்கு அடிப்படையாக அமைகிறது என்பது குழுவின் அபிப்பிராயமாகும்.

(iii) அதனால், MCC கொடை முன்மொழிவு சம்பந்தமாகவும் ஏனைய நாடுகளிலிருந்து கிடைக்கும் வெளிநாட்டுக் கொடைகள் அல்லது கடனுதவித் திட்டங்கள் இலங்கையினுள் நிர்வகிக்கப்படுகின்ற, செயற்படுத்தப்படுகின்ற அரசின் பொதுவான சட்ட சட்டகம், மாதிரி மற்றும் முறைமையினைப் பயன்படுத்தியிருக்க முடியும் எனவும், அவ்வாறன்றி கடந்த 2019 ஒக்டோபர் 29 ஆந் திகதி அமைச்சரவை அனுமதியளித்த முறைமை பயன்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக எந்த வகையிலும் இணங்க முடியாது என குழு வலியுறுத்துகிறது.

6. **<u>MCC முன்மொழிவுகளில் உள்ளடங்கியுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான அவதானங்கள்</u>**

ஆரம்பம் முதல் குறிப்பிட்டுள்ளவாறு MCC கொடை முன்மொழிவுகளில் தெரிவிக்கப்பட்ட குறிக்கோளாக காணப்படுவது அதனைப் பெறும் நாட்டின் வறுமை ஒழிப்பினையும், வளர்ச்சி வேகத்தினையும் அதிகரிப்பதில் தடங்கலாகக் காணப்படுவதாகக் கருதப்படும் தடைகளை அகற்றுவதாகும். எனவே அதற்காக உருவாக்கப்பட்ட முதலீட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பாகவும் கவனஞ் செலுத்தப்பட வேண்டும்.

இலங்கை சம்பந்தமான இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள முன்மொழிவுகளில் (அ) காணி நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் (ஆ) போக்குவரத்து அபிவிருத்தி முன்மொழிவுகள் எனும் இரு தலையீடுகளை, அவற்றுக்கு ஏற்புடைய கொள்கைச் சீர்திருத்தங்களுடன், தமது கொடைகள் மூலம் செயற்படுத்துவதற்கு MCC தெரிவுசெய்துள்ளது.

இந்தக் கருத்திட்டங்களைத் தெரிவு செய்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் அவற்றில் இருக்க முடியுமான தாக்கங்கள் சம்பந்தமாக குழுவினால் கீழே சுருக்கமாகத் தரப்படும் அவதானங்களுக்கு வர முடிகிறது:

I. மேற்குறிப்பிட்டவாறு முதலீட்டிற்கான முன்னோடித் தடைகளைத் தெரிவு செய்யும்போது இலங்கையின் எந்த நிறுவனம், எந்தளவில் ஏற்புடைய ஆய்வுகளில் பங்கேற்றுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள உதவும் எந்தவொரு உத்தியோகபூர்வத் தகவலையும் பிரதம அமைச்சர் அலுவலகத்தில் காணப்பட்ட MCC ஒருங்கிணைப்பு அலகினால் அல்லது அரசின் வேறொரு நிறுவனத்தினால் குழுவுக்கு வழங்க முடியவில்லை. அதற்கேற்ப அந்த தடைகள் மதிப்பீடு மற்றும் முதலீட்டிற்கான கருத்திட்ட முன்னுரிமைகள் தெரிவு இலங்கையினால் அன்றி MCC அல்லது/ மற்றும் HUCID இனால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் புலனாகிறது.

II. மேலும் இலங்கையின் சமூக – பொருளாதார முன்னேற்றத்திற்கு ஏற்புடைய உயர்ந்தபட்ச முதலீட்டு முன்னுரிமைகளாகக் கருத முடியுமான ஏனைய பல துறைகளிலான முதலீட்டு வாய்ப்புக்கள் இத்தெரிவுகளில் காணப்படாமை பிரச்சினைக்குரியது என அப்போதைய அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய பத்திரம் மூலம் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த அறிக்கையிலும் அவதானிக்கப்பட்டுள்ளது (இணைப்பு – 13). அதற்கேற்ப, இத்தெரிவுகள் உண்மையாகவே இலங்கையின் முன்னரிமைகளா இல்லாவிடின் MCC இன் முன்னுரிமைகளா என்பது தொடர்பாக எழுந்துள்ள சந்தேகம் நியாயமானதாக இருக்கலாம் என்பது குழுவின் அபிப்பிராயமாகும்.

III. எவ்வாறாயினும், இறுதியில் இத்தெரிவுகள் இலங்கையினால் முன்மொழியப்பட்டவை என வெளிப்படும் வகையில் குறிப்பிடப்படுகின்றமையினால், அவற்றின் பொருத்தம் - பொருத்தமின்மைகள் தொடர்பான பொறுப்பு நேரடியாகவே இலங்கை மீது ஒப்படைக்கப்படுகிறது என்பது குழுவின் அவதானமாகும். மேலும், இந்தக் கருத்திட்டங்கள் நாட்டின் முக்கிய தேவைப்பாடுகளாயின், MCC கொடைகளுடன் அல்லது அவை இல்லாமல் அவற்றைச் செயற்படுத்துவது அவசியமாகும். அவ்வாறான நிலைமையில் எந்தவொரு மீள்செலுத்தலும் அவசியப்பட மாட்டாது என குறைந்தபட்சம் வெளிப்படுத்தித் தெரிவிக்கப்பட்டுள்ள MCC கொடைகளைப் பயன்படுத்துவது ஏனைய வட்டி மற்றும் பெறுகைக் கடப்பாட்டு நிபந்தனைகளுடைய கடன் வசதியைப் பயன்படுத்துவதை விடவும் நிதிரீதியாக நன்மையளிப்பதாக வெளிப்படையில் புலனாக முடியும் என்பதால், இந்தக் கருத்திட்ட முன்மொழிவு தொடர்பாக குழு சுருக்கமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறது.

## 6.1 காணி நிர்வாகச் சீர்திருத்த முன்மொழிவுகள்

I. இலங்கையின் எட்டு மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் காணி நிர்வாகம் தொடர்பான அலுவல்களை ஒழுங்குமுறைப்படுத்துவது இந்தக் கருத்திட்டத்தின் முக்கியமானதொரு நோக்கமாகும். இலங்கையின் காணி முகாமைத்துவத்தில் காணப்படும் பலவீனங்கள் நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதில் பலமான தடையாக அமைந்துள்ளது என்பது இலங்கை வணிக சபை உட்பட தனியார் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பாலோனோரின் கருத்தாகும்.

II. எவ்வாறாயினும், இந்த காணித் துறையில் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தலையீடே இந்த ஒட்டுமொத்த MCC செயன்முறை தொடர்பாகவும் சமூகத்திலிருந்து வெளிப்படும் வலுவான எதிர்ப்புக்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்பதை மறந்து விடக் கூடாது என்பது குழுவின் கருத்தாகும்.

III. அரச அல்லது தனியார் காணிகள் மூலோபாயரீதியாகவும், தேசியரீதியாகவும் மிகவும் முக்கியமான, தீர்க்கமான காரணியாகும். நாட்டின் காணிகள் தொடர்பான தேசிய உரிமை என்பது முன்னைய சிங்கள அரச காலம் முதல் காணப்பட்ட ஒன்றாகும். இது தொடர்பாக அரசுக்குக்கூட உடைமையுரிமை காணப்பட்டதே ஒழிய அறுதி உரிமை காணப்படவில்லை என "The Adaptable Peasant: Agrarian Society in Western Sri Lanka Under Dutch Rule, 1740-1800" எனும் தனது நூலில் (107 – 109 ஆம் பக்கங்கள்) கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி அவர்கள் குறிப்பிடுகிறார். எனவே, விசேடமாக அரச காணிகள் சந்தைப் பொறிமுறையொன்று மூலம் பரிமாற்றப்படுவது என்பது எமது வரலாற்றுரீதியான உரிமையை மீறுவதாகும். மேலும் அது எதிர்கால சந்ததியினருக்காகவும், நாட்டின் இறையாண்மைக்காகவும் தொடர்ந்தும் பொது உரிமையாகக் காணப்பட வேண்டிய வளமொன்றை ஆபத்தில் வீழ்த்துவதாகும்.

IV. இந்த நிலைமை எவ்வாறாயினும், காணப்படும் காணிகளை அவற்றின் நிர்வாக, சட்டரீதியான, முகாமைத்துவ இலகுபடுத்தலுக்காக அளவையிட்டு, திட்ட வரைபடங்களைத் தயாரித்து, கணனிமயப்படுத்தி தரவு அமைப்பொன்றை உருவாக்குவது தொடர்பாக சிக்கல் ஏதும் இருக்க முடியாது. எனினும் பின்வரும் துறைகள் தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலைமைகள் காணப்படுவதை குழு அவதானிக்கிறது.

(அ) <u>தேசிய பாதுகாப்புக்காக அல்லது ஏனைய மூலோபாயரீதியான முக்கியத்துவத்திற்காக அரச உடைமையில் மாத்திரம் காணப்பட வேண்டிய காணிகளின் தகவல்கள்</u>

அரச காணிகள் என்பது மூலோபாயரீதியாக முக்கியத்துவமிக்கதாக இருக்க முடியுமான துறையொன்றாகும் என்பதுடன், அவற்றுக்கு ஏற்புடைய சில தகவல்கள் தேசிய பாதுகாப்பு தொடர்பான கோணத்தில்கூட கூர்உணர்வுடையனவாக இருக்க முடியும் என்பதால், அரசு தவிர்ந்த வேறொரு நிறுவனத்திற்கு அவ்வாறான அனைத்து தகவல்களையும் வரையறையின்றி பொதுவாகப் பகிரங்கப்படுத்துவதற்கு மற்றும் சுதந்திரமாகப் பெற்றுக்கொள்ள முடியுமான வசதிகளை வழங்குவது பொருத்தமற்றது எனவும் அப்போதைய முன்னாள் நில அளவையாளர் நாயகம் குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். எனினும், அவ்வாறான கூர்உணர்வுடைய தகவல்கள் மற்றும் உரிமைகூட வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கிடைக்க வாய்ப்புள்ளவாறு சர்வதேச பெறுகைகள் மூலம் இந்த அளவைப் பணிகளை, தரவுக் களஞ்சிய உருவாக்கலை மேற்கொள்கின்ற, உத்தேச முறைமை ஊடாக அளவையிடப்படுகின்ற மற்றும் கணனித் தரவுகள் களஞ்சியப்படுத்தப்படுகின்ற காணிகள் அனைத்தினதும் புலமைச் சொத்து உரிமை MCC நிறுவனத்திற்கு உடைமையாகும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இலங்கை அரசாங்கத்தினால் இணங்க முடியாது.

(ஆ) <u>அனுமதிப்பத்திரங்களின் கீழ் விவசாயிகளினால் அனுபவிக்கப்படும் பயிர்க் காணிகளுக்கு அறுதி உறுதிப்பத்திரங்களை வழங்குதல்</u>

அரசியல்ரீதியாக கவர்ச்சியானதாயினும் இந்த நடவடிக்கை காணிகளை இழந்த விவசாயிகள் சந்ததியொன்றை எதிர்காலத்தில் உருவாக்குகின்ற ஆரம்ப நடவடிக்கையாக அமையலாம். 1998 ஆம் ஆண்டு உலக வங்கியினால் கொண்டு வரப்பட்ட பெருந்தோட்டமல்லாத கமத்தொழில் கொள்கை முதல் MCC வரை அவ்வப்போது காணி அறுதியுரிமை முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. குறைந்த தனிநபர் வருமானமுடைய, வருமானம் பிரிந்து செல்வதில் ஒழுங்கின்மைகள் கொண்ட நாடொன்றின், வறுமை மற்றும் கடன் சுமையினால் துவண்டு போயுள்ள சமூகமொன்றுக்கு காணி அறுதியுரிமையை வழங்குவதன் ஊடாக நாட்டிலுள்ள காணிகளை உள்நாட்டு மற்றும்/ அல்லது வெளிநாட்டுச் செல்வந்தர்கள் விலை கொடுத்து வாங்குவதற்கான அதிக சாத்தியப்பாடு காணப்படுகிறது. அதற்கேற்ப, ஏலவே முதலாளிமாருக்கு கடன்பட்டுள்ள இலங்கை விவசாயிகளின் பயிர்க் காணிகளுக்கு அறுதி உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டவுடனேயே அவை முதலாளிமாருக்கு உடைமையானதாக மாறும். அது காணிக் குவிப்புக்கும் (Land accumulation) காணிகளை இழந்த ஊழியப் படையொன்று உருவாவதற்கும் வழிவகுக்கும். அபிவிருத்தியடைந்த நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளுக்கு அவர்களது டொலர் சம்பாத்தியத்திற்கு ஏற்ப கருத்திற்கொள்ளும்போது இந்த நாட்டிலுள்ள காணிகள் ஒப்பீட்டளவில் மிகவும் கவர்ச்சியானதாக ஆகுமளவுக்கு குறைந்த விலைகளையுடையதாக இருக்கலாம் என்பதால், இவ்வாறு சந்தைக்குத் திறந்து விடப்படும் இலங்கையின் காணிகள் படிப்படியாக வெளிநாட்டு அபகரிப்புக்கு (land grabbing by foreigners) உட்படுவதற்கான வாயில்களும் திறந்து விடப்படலாம் (பேராசிரியர் டப்.டீ. லக்ஷ்மன் அவர்களினால் 2020 ஜனவரியில் BiZnomics சஞ்சிகைக்கு எழுதப்பட்ட கட்டுரையொன்று மூலம் அந்த வாய்ப்புக்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன - இணைப்பு – 18).[13] இலங்கையின் காலி கோட்டையில் இடம்பெற்றுள்ள காணி வெளிநாட்டுமயமாக்கல் மற்றும் மடகஸ்கார் உட்பட MCC கொடையைப் பெற்றுக்கொண்டுள்ள சில நாடுகளில் இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் காணி அபகரிப்பு இந்த நிலைமைக்கான உதாரணங்களாக அமையலாம். புதிய தாராளவாத அரசியல் - பொருளாதாரக் கோட்பாடுகளுக்கு ஏற்ப பொருளாதாரத்தின் அளவுரீதியான நன்மைகளுக்காகவும், குறைந்த விலையிலான அடிமை ஊழியப் படையொன்றை உருவாக்கிக்கொள்ளவும் இந்த நிலைமை உதவியாக அமையலாம். எனினும் அதனூடாக சமூக – பொருளாதாரரீதியாகவும், தேசிய காணி உரிமைக் கோணத்திலும் மிகவும் பாதகமான நிலைமையொன்று உருவாவதற்கான அதிகளவாக வாய்ப்புக்கள் உள்ளன.

இவ்வாறானதொரு அணுகலுக்குத் தேவையான சட்டரீதியான ஏற்பாடுகள் 1947 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச் சட்டத்தில் இல்லை என்பதாகவும், அதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கு அந்த சட்டத்தையும் 1998 ஆம் ஆண்டின் காணி உரிமைகளைப் பதிவுசெய்வதற்கான சட்டத்தையும் திருத்த வேண்டும் எனவும் கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் காணிக் கருத்திட்டம் சம்பந்தமான இணைப்பு – I இன் (iv) ஆம் உபபந்தியில் வெளிப்படுத்தித் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையினுள்

13 https://www.biznomicsmagazine.com/millennium-challenge-corporation-in-sri-lanka-paving-the-way-for-land-grab-by-multinational-companies/

அரச காணிகளை சந்தைக்கு அனுப்பும் பலமான தேவையொன்று MCC நிறுவனத்திற்கு உள்ளதா, அவ்வாறாயின், அது எந்த நோக்கத்திற்காக இருக்கலாம் என்பது பற்றி ஆழமான பரிசீலணை செய்யப்பட வேண்டும் என்பது குழுவின் கருத்தாகும்.

(இ) <u>இலங்கை அரசாங்கத்தினால் கடந்த 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட கருத்திட்டம்</u>

பொருளாதார அபிவிருத்திக் கோணத்தில் நன்மையளிப்பதாக மேலே குறிப்பிடப்பட்ட அளவைப் பணிகளைத் துரிதப்படுத்தல், அவற்றுக்கு உறுதிப்பத்திரங்களைத் தயாரித்தல், தெரிவு செய்யப்பட்ட காணிகளுக்கு கணனித் தகவல்கள் அமைப்பொன்றை உருவாக்குதல் போன்ற "பிம் சவிய" நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக அரசினால் ஏலவே முன்னெடுத்துச் செல்லப்படும் வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்துவது அவசியமாகும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தமையினால், 2014 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலும் அந்தக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ஏற்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக குழுவின் முன்னிலையில் கருத்துத் தெரிவித்த முன்னாள் நில அளவையாளர் நாயகம் தெரிவித்தார். அதற்கான அனைத்துப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டு அமைச்சரவை அனுமதிகூட பெறப்பட்டிருந்ததாகவும், ஏற்புடைய நிறுவனத்திற்கு கொடைக் கடிதத்தை வழங்குவது மாத்திரமே எஞ்சியிருந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், அந்தக் கருத்திட்டமும் உள்நாட்டுரீதியில் செயற்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டதன்றி, வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு ஒப்பந்தம் வழங்கி செயற்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டது என்பதும், மேற்குறிப்பிட்ட தரவுகள் வெளிநாட்டு மூன்றாம் தரப்பினரின் கைகளைச் சென்றடையும் அபாயம் அந்தக் கருத்திட்டத்திலும் இருப்பதற்கான வாய்ப்புக்களை அதற்கேற்ப புறந்தள்ள முடியாது என்பதும் குழுவின் அவதானமாகும்.

(ஈ) <u>திருகோணமலை – கொழும்பு பொருளாதார இடைவழித் (Corridor) திட்டம்</u>

இலங்கையின் ஒட்டுமொத்த காணிப் பரப்பளவில் 28% எனும் பாரிய நிலப் பகுதியொன்று இதன் கீழ் உள்ளடங்குகின்றமையினாலயே, MCC உடன்படிக்கையில் காணி தொடர்பாக செய்யப்பட்டுள்ள முன்மொழிவுகளை ஆராயும்போது திருகோணமலை – கொழும்பு பொருளாதா இடைவழித் திட்டம் விசேட கவனத்தை ஈர்க்கிறது.[14]

---

14 இது பற்றி கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் Execution Version (இணைப்பு – 6) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கையில் "கொழும்பு – திருகோணமலை பொருளாதார இடைவழியொன்று" தொடர்பாக குறிப்பிடப்படாவிடினும், 2018 ஜூன் 21 ஆந் திகதி கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பில் (இணைப்பு – 5C) மற்றும் வேறு சில அறிக்கைகளில் இந்தக் காணி நிர்வாகச் சீர்திருத்தக் கருத்திட்டப் பகுதி "கொழும்பு – திருகோணமலை பொருளாதார இடைவழி" எனும் குறிப்பீட்டுடனேயே விபரிக்கப்படுகிறது.

2017 செப்டம்பர் மாதம் 07 ஆந திகதி அமைச்சுக்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புக் குழுவில் மற்றும் அதன் பின்பு 2019 பெப்ரவரி 26 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் கூடிய தேசிய பௌதீகத் திட்டமிடல் சபையில் அங்கீகரிக்கப்பட்டு, 2019 ஜூன் 12 ஆந் திகதி 2127/15 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட பௌதீகத் திட்டம் முழுமையாக அத்திணைக்களத்தினால் உள்நாட்டில், சுயாதீனமாகத் தயாரிக்கப்பட்டது என்பதுடன், அத்திணைக்களம் MCC செயன்முறையுடன் எந்த வகையிலும் தொடர்புடவில்லை என்பதுமே அப்போதைய தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கருத்தாகும். எனினும், 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் வெளியிடப்பட்ட தடைகளை மதிப்பீடு செய்வது தொடர்பான ஹாவாட் பலக்லைக்கழக அறிக்கையில் (இணைப்பு – 4) உள்ள திருகோணமலை – கொழும்பு பொருளாதர இடைவழித் திட்டம் இந்த பௌதீகத் திட்ட முன்மொழிவுடன் ஒத்துச் செல்கிறது. 2019 ஆம் ஆண்டு தேசிய பௌதீகத் திட்டமிடல் சபையினால் அங்கீகரிக்கப்படும் வரை மற்றும் வர்த்தமானியில் வெளியிடப்படும் வரை உத்தியோகபூர்வ ஆவணமாகக் கருத முடியாத திட்டமொன்றின் பகுதியொன்று அதற்கு முன்பு வெளிநாட்டு நிறுவனமொன்று இலங்கை அரசாங்கம் சார்பில் தயாரிக்கும் அறிக்கையில் உள்ளடங்கியுள்ளமை வழக்கத்திற்கு மாறான நிலைமையாகும். அதற்கேற்ப, இது எந்த அறிக்கை எதிலிருந்து எடுபகுதியாகப் பெறப்பட்டது, எந்தளவுக்கு கேந்திர அரச நிறுவனக் கட்டமைப்பினுள் இத்திட்டம் நுண்ணாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது எனக் கேள்வியெழுப்ப வழிவகுக்கிறது. இந்த இடைவழி முன்மொழிவு மற்றும் ACSA, SOFA உடன்படிக்கைகளை ஒன்றிணைத்துக் கருத்திற்கொள்ளும்போது பரந்த இந்து – பசுபிக் போர் மூலோபாய சித்திரமொன்று உருவாகலாம் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பகுப்பாய்வு அறிக்கையில் (இணைப்பு – 14 மற்றும் அட்டவணை - 3: F1-53) விசேடமாகக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளமை மூலம் இந்தக் கருத்திட்டப் பகுதி ஊடாக தேசிய பாதுகாப்பு மற்றும் இறையாண்மை மீது ஏற்பட முடியுமான அபாயம் தெளிவுபடுத்தப்படுகிறது.

## 6.2 போக்குவரத்து அபிவிருத்தி முன்மொழிவுகள்

போக்குவரத்து அபிவிருத்தி தொடர்பான உத்தேசக் கருத்திட்டங்களை மேற்குறிப்பிட்ட காணிச் சீர்திருத்தக் கருத்திட்டங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்தளவில் விமர்சனத்திற்கு உட்பட்டுள்ளமை குழுவின் கவனத்தை ஈர்க்கிறது. எவ்வாறாயினும் போக்குவரத்து அமைப்பு முன்மொழிவுகளில் பின்வரும் குறைபாடுகள் உள்ளமை புலனாகிறது:

i. பொதுப் போக்குவரத்து ஊடகமான புகையிரத அமைப்பு தொடர்பாக கவனஞ் செலுத்தப்படாமை;

ii. வீதிகளில் வாகனக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை தொடர்பாக இரகசியமானது எனவும் மூலோபாயரீதியாகவும், பாதுகாப்பு சம்பந்தமாகவும் முக்கியமானது எனவும் தீர்மானிக்கப்படக்கூடிய தகவல்கள் மற்றும் அவற்றின் உரிமை மேலே 5.1(xii), 5.1(xix), 5.1(xx) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு MCC நிறுவனத்திற்குக் கிடைப்பதைத் தடுக்க முடியாமை;

iii. இலங்கை தனது பாராளுமன்றத்திலேயே சட்டமாக நிறைவேற்றிக் கொள்கின்ற இந்த இரு தரப்பு உடன்படிக்கையில் வெளிநாட்டுதவிக் கருத்திட்டமொன்று மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டிய மட்டத்தில் பெண்களுக்கெதிரான துன்புறுத்தல்கள் உயர்ந்தளவில் காணப்படும் பொதுப் போக்குவரத்து அமைப்புடைய நாடாக தானாகவே ஏற்றுக்கொள்ளுதல்;

iv. MCC நிகழ்ச்சித்திட்டத்தின் பேரூந்துச் சேவை நவீனமயப்படுத்தல் (BTSM) கருத்திட்ட அம்சத்தினை, தாம் ஏலவே செயற்படுத்துகின்ற "சஹஸர" கருத்திட்டத்தை மேல் மாகாணத்திற்கு விரிவுபடுத்தி தமது அமைச்சில் அதற்காக நிறுவப்பட்டுள்ள கருத்திட்ட முகாமைத்துவ அலகு (PMU) மூலம் தமது வழிநடாத்தலின் கீழ் மேற்கொள்வதற்கு மாநகர அபிவிருத்தி அமைச்சு எதிர்பார்த்துள்ளதாக (இணைப்பு - 10A மற்றும் இணைப்பு – 11H) கூறப்படினும், கூட்டு ஒப்பந்தத்தில் அவ்வாறான ஏற்பாடொன்று இல்லாமை மற்றும் MCA – Sri Lanka இன் கீழ் MCC நிபந்தனைகளுக்கு ஏற்ப சேவை வழங்கல் பெறுகையை செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளமை.

உத்தேச MCC கூட்டு ஒப்பந்தத்தில் இந்தக் கருத்திட்டம் தொடர்பாக தாமே அவதானித்த சிக்கல்கள் தொடர்பாக மாநகர அபிவிருத்தி அமைச்சின் "சஹஸர" கருத்திட்டப் பணிப்பாளர் மின்னஞ்சல் குறிப்பொன்று ஊடாக (இணைப்பு – 19) உத்தியோபூர்வமாக தமது அமைச்சு சார்பில் கலந்துரையாடல் இணக்கப்பாட்டுக் கூட்டத்தில் பங்குபற்றிய அதிகாரிக்கு அறிவித்துள்ள போதிலும் அந்தப் பலவீனங்கள் மற்றும் சிக்கல்கள் நீக்கப்படாமை துரிதிஷ்டவசமானதாகும்.

7. **<u>புவியரசியல் தாக்கங்களை மதிப்பீடு செய்தல்</u>**

பொருளாதார அபிவிருத்திக்கான தடைகளை அகற்றுவதற்கு அவசியமானது எனத் தீர்மானிக்கப்படும் முதலீட்டுக் கருத்திட்டங்கள் இருப்பின் அவற்றைச் செயற்படுத்துவதற்கு கடனுதவிகள் மீது தங்கியிருப்பதற்குப் பதிலாக கொடை நிதியைப் பயன்படுத்துவது நன்மையளிக்கும் என வெளிப்படையில் தோன்றினாலும், அது எளியதொரு அவதானமாகும். எனினும், MCC கொடையை அவ்வாறான எளிய நிதிரீதியான சட்டகத்தினுள் மாத்திரம் கருத்திற்கொள்வது போதுமானதல்ல என்பதும், அதனுள் உள்ளடங்கியுள்ள கருத்திட்டங்கள், சிக்கலான சட்டரீதியான கடப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப அந்த முன்மொழிவுகள் குறிப்பாக உணர்த்தக்கூடிய விரிவான பரப்பெல்லையினுள் சமூக – பொருளாதார, புவியரசியல் தாக்கங்கள் தொடர்பாக அரசின் கவனம் ஈர்க்கப்பட வேண்டும் எனவும் குழு கருதுகிறது.

அதற்கேற்ப, அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ள MCC கொடை முன்மொழிவுகள் செயற்படுத்தப்படின் ஏற்படக்கூடிய கீழே சுருக்கமாகக் குறிப்பிடப்படும் புவியரசியல் தாக்கங்கள் குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளன:

(i) உடன்படிக்கை வரைவின் 5.1(b)(iv), (v) ஆம் பிரிவுகளுக்கு ஏற்ப ஐக்கிய அமெரிக்க சட்டகத்திற்குப் பொருத்தமற்ற அல்லது அந்த நாட்டின் நலனுக்குப் பாதகமான ஏதாவது நிலைமையொன்று இலங்கையினுள் உருவாகும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் MCC நிறுவனத்தினால் உடன்படிக்கை இடைநிறுத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் காரணமாக உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிரீதியாக, சேவை வழங்குனர்களுக்குத் தமது நிதியிலிருந்து செலுத்த வேண்டியேற்படும் நெருக்கடியை எதிர்நோக்க இலங்கை தயாராக வேண்டும். அவ்வாறானதொரு நிலைமையில் ஐக்கிய அமெரிக்காவுடன் இராஜதந்திர கருத்து மோதலொன்று ஏற்படுமாயின், சமநிலையற்ற சர்வதேச அரசியல் அதிகாரச் செறிவினுள் மற்றும் பிணக்குகளைத் தீர்ப்பதற்குத் தெளிவான ஏற்பாடொன்று வழங்கப்படாத நிலைமையினுள் இலங்கை சிரமத்திற்கு உட்படக்கூடிய அபாயத்தினைப் புறந்தள்ள முடியாது.

(ii) MCC கொடைகளைப் பெற்றுக்கொண்ட ஏனைய நாடுகளின் அனுபவங்களைக் கருத்திற்கொள்ளும்போது மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அபாயம் மிகவும் சிறப்பாக அவதானிக்கப்படுகிறது. கொடை நின்று போயினும், பொறுப்புக்களுக்கான இழப்பீடுகளைச் செலுத்த வேண்டியேற்படினும், MCC செயற்பாட்டிற்காக நாட்டினுள் பிரவேசித்து நிறுவப்படும் பல்வேறுபட்ட நிறுவனங்கள் மற்றும் கம்பனிகள் தொடர்ச்சியாக நாட்டினுள் தங்கியிருப்பதைத் தடுப்பதற்கு கொடையைப் பெற்றுக்கொண்ட நாடுகளினால் முடியாமற்

போயுள்ளதாக மடகஸ்கார் மற்றும் ஹொன்டுராஸ் போன்ற நாடுகளின் அனுபவங்கள் மூலம் கூறப்படுகிறது. நாட்டின் காணிகள் பல்தேசியக் கம்பனிகளினால் விலை கொடுத்து வாங்கப்பட்டுள்ள நிலைமையில் மற்றும் கொடையைப் பெறும் ஏற்புடைய நாடுகள் MCC உடன்படிக்கை நிபந்தனைகள் மூலம் அரச சார்பற்ற அமைப்புக்கள் தமது பணிகளைச் சுதந்திரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு அனுமதியளிப்பதாக வெளிப்படுத்தித் தெரிவித்து கட்டுண்டு காணப்படும் சந்தர்ப்பத்தில் இந்தக் கொடைகள் வாயில் ஊடாக நாட்டினுள் பிரவேசிக்க முடியுமான வெளிப்புற வணிக மற்றும் அரசியல் தாக்கங்களும் பாரியனவாக அமையலாம்.

(iii) ஐக்கிய அமெரிக்காவின் அனைத்து அரச நிறுவனங்களும் இசைந்து செல்ல வேண்டும் எனக் கட்டளையிட்டு 2019 ஜுன் 01 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள "இந்து – பசுபிக் மூலோபாயத்தில்" (அட்டவணை – 7) இலங்கை தெற்காசியாவில் முக்கியமான இடமாக இனங்காணப்பட்டுள்ளது. மேலும் MCC நிறுவனம் உட்பட அமெரிக்காவின் அனைத்து அபிவிருத்தி நிதியிடல் நிறுவனங்களும் இப்பிராந்தியத்தில் முதலீட்டுத் தேவைப்பாடுகளின் பங்காளர்களாக வேண்டும் என அந்த மூலோபயம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது[15]. அதற்கேற்ப MCC கொடை முன்மொழிவுகளில் கைச்சாத்திடப்படின், இலங்கை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் புவியரசியல் வரைபடத்தினுள் தானாகவே நுழைந்து விடுகிறது. MCC இல் வணிக முதலீடுகள் மாத்திரமே என வெளிப்படுத்தித் தெரிவிக்கப்பட்டிருப்பது உண்மையாயினும், அவ்வாறு வரும் ஐக்கிய அமெரிக்காவின் முதலீடுகளைப் பாதுகாக்கும் நோக்கத்தை முன்னிறுத்தி ACSA மற்றும் SOFA உடன்படிக்கையின் ஏற்பாடுகளைச் செயலுருப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்களை அதற்கேற்ப புறந்ததள்ள முடியாது.

(iv) உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டச் சொத்துக்கள் தொடர்பான புலமைச் சொத்து உரிமை இலங்கைக்கு இல்லாமற் போவது, தேசிய இறையாண்மை மற்றும் பாதுகாப்பில் தாக்கம் செலுத்தக்கூடிய வாயிலொன்றை உருவாக்குகின்றது என்பதையும் மறந்து விட முடியாது. உதாரணமாக இலங்கையின் வீதியமைப்பின் ஒட்டுமொத்த தகவல்கள், நேரடியான வாகனப் போக்குவரத்துத் தரவுகள் மற்றும் வாகன சமிக்ஞைக் கட்டுப்பாடு உட்பட கூர்உணர்வுடைய வழிநடாத்தல் தகவல்கள் வெளிநாட்டுக் கம்பனிகளின்

---

15 "…In recognition of the region's need for greater investmnent, including infrastructure investment, the United States seeks to invigorate our development and finance institutions to enable us to become better, more responsive partners…" (page. 4, Indo-Pacific Staregy Report, June 1, 2019)

https://media.defense.gov/2019/Jul/01/2002152311/-1/-1/1/DEPARTMENT-OF-DEFENSE-INDO-PACIFIC-STRATEGY-REPORT-2019.PDF

கைகளுக்குச் சென்றடையும்போது நாட்டின் வீதியமைப்பினுள் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுகூட அரசுக்கு கடினமாக அமையலாம்.

(v) மேலும், புவியரசியல் சூழல் மற்றும் இலங்கையின் மூலோபாய அமைவு சர்வதேச அதிகாரப் போராட்டத்தில் ஏற்புடைய போட்டியாளர்களுக்கு முக்கியமானதாக அமைய முடியும் என்பதால், போர் முகாம்களை இலங்கையினுள் நிறுவுவதற்குப் பல்வேறுபட்ட அதிகார சக்திகள் வெளிப்படுத்த முடியுமான யுத்த மற்றும் பொருளாதாரரீதியான ஆர்வம் தொடர்பாக இலங்கை கருத்திற்கொள்ளாமலிருக்க முடியாது. இந்த யதார்த்தத்தின்படி (அ) இந்து - பசுபிக் மூலோபாயத்தில் வெளிப்படுத்தித் தெரிவிக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் சர்வதேச அரசியல் நோக்கங்கள், மற்றும் (ஆ) MNPEA/2018/152 ஆம் இலக்க, 2018.09.17 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரம் மூலம் (இணைப்பு – 3F) குறிப்பிடப்பட்டுள்ள கொழும்பு – திருகோணமலை இடைவழியில் அமைந்துள்ள அனுமதிப்பத்திரங்களின் அடிப்படையில் பயன்டுத்தப்படும் அரச காணிகளைத் தனிப்பட்ட அறுதியுரிமைக்கு மாற்றுவதற்கான முன்மொழிவு தனித்துக் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய மிக முக்கியமான விடயங்களாகும் எனக் குழு வலியுறுத்தி நிற்கிறது.

(vi) இவற்றை ஒவ்வொன்றாக வெவ்வேறாக கருத்திற்கொள்ளும்போது அபாயமொன்று வெளிப்படாவிடினும், அந்த அனைத்தையும் ஒன்றாக நோக்கும்போது, அவை மூலம் தேசிய பாதுகாப்புக்கு, நாட்டின் இறையாண்மைக்குகூட ஏற்பட முடியுமான அச்சுறுத்தல்களை அவதானிக்க முடியும் எனவும், அதனால் ஏலவே (2017 இல்) கைச்சாத்திடப்பட்டுள்ள, புதுப்பிக்கப்பட்ட ACSA உடன்படிக்கை மற்றும் (1995 ஆம் ஆண்டு முதலில் கைச்சாத்திடப்பட்ட) மீண்டும் திருத்தம் செய்து கைச்சாத்திடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள SOFA உடன்படிக்கையின் ஏற்பாடுகளைச் செயலுருப்படுத்தும்போது இந்த MCC கொடை நிபந்தனைகள் மற்றும் கருத்திட்ட முன்மொழிவுகள் சம்பந்தப்படுவதற்கு வாய்ப்புள்ள முறைமையை (குறைந்தபட்சம் கருதுகோளாகவேனும்) இலங்கை அரசின் பாதுகாப்பு பகுப்பாய்வு நிறுவனங்கள் ஆழமாக ஆராய வேண்டும் எனவும் குழு வலியுறுத்துகிறது.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் இறையாண்மை சம்பந்தமாக இந்த MCC உடன்படிக்கை செயற்படுத்தப்படும்போது ஏற்பட முடியுமான பாதகமான தாக்கங்கள் மற்றும் அபாயங்கள் தொடர்பாக இராஜாங்க அமைச்சரின் கோரிக்கைப்படி வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட மேற்குறிப்பிட்ட அறிக்கையில் (இணைப்பு – 14 மற்றும் அட்டவணை - 3: F1-53) உள்ளடங்கியுள்ள விடயங்கள் மூலம் MCC உடன்படிக்கையில் இருக்க முடியுமான பிரதிகூலமான விளைவுகள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் - நவம்பர் மாதங்களில் நாட்டின்

பொதுமக்களிடமிருந்து வெளிப்பட்ட விமர்சனங்கள் சரியானவை, நியாயமானவை என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. அத்துடன், அதன் மூலம் இந்தக் குழுவினால் இறுதியறிக்கையில் சமர்ப்பிக்கப்படும் நுண்ணாய்வுகளின் முடிவுகள் மற்றும் விதந்துரைகள், ஆரம்ப மற்றும் இடைக்கால அறிக்கைகள் ஊடாக அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அவதானங்கள் மற்றும் முடிவுகளின் துல்லியம் மற்றும் உண்மைத் தன்மை மேலும் உறுதியாகிறது. எவ்வாறாயினும் அந்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ அறிக்கை அல்லது அதில் உள்ளடங்கியுள்ள மிகவும் முக்கியமான எச்சரிக்கையூட்டல்கள் எதனைப் பற்றியும் அமைச்சரவையின் அல்லது வேறு அரச நிறுவனமொன்றின் கவனம் ஈர்க்கப்படாமை ஆச்சரியமளிக்கிறது.

8. **<u>கருத்துரைகள் மீளாய்வு</u>**

உத்தேச மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபன (MCC) கூட்டு ஒப்பந்தத்திற்கு ஏற்புடைய நுண்ணாய்வுகளை மேற்கொள்ளும்போது அதற்கு ஏற்புடைய ஆவணங்களைப் பரிசீலணைக்கு உட்படுத்துவதன் ஊடாகவும், அரச அதிகாரிகள், தொழில்சார் நிபுணர்கள், வணிக நிறுவனப் பிரதிநிதிகள், பரந்த சமூக செயற்பாட்டாளர்களுடன் கலந்துரையாடுவதன் ஊடாகவும் குறிப்பிட்ட விடயத்திற்கு ஏற்புடைய சிக்கல்கள் மற்றும் குழப்பமான அம்சங்களைக் குழுவினால் இனங்காண முடிந்தது. அவற்றில் குழுவின் கவனம் ஈர்க்கப்பட்ட குறிப்பான சில வினாக்கள், கோணங்கள் பற்றி தமது ஆய்வுகள் மூலம் செய்யப்பட்ட கருத்துத்தொகுப்புடன்கூடிய பதில்களைக் குழுவின் இறுதி விதந்துரைகளைச் சமர்ப்பிக்க முன்பு பின்வருமாறு சுருக்கமாக கோர்ப்பதற்கு குழு விரும்புகிறது:

8.1 <u>அரசாங்கம் சார்பாக வெளிநாட்டுதவி நிகழ்ச்சித்திட்டங்களை முகாமைத்துவம் செய்வதற்கு சுயாதீன அலகொன்றை நியமிப்பதில் தவறு ஏதும் உள்ளதா?</u>

இதற்கு முன்பு ஏனைய வெளிநாட்டு வளங்கள் பயன்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் இவ்வாறான "கருத்திட்ட முகாமைத்துவ அலகுகள்" மூலம் வழிநடாத்தப்பட்டுள்ளன. எனினும் MCC நிகழ்ச்சித்திட்டத்தில் அரசின் அதிகாரத்திலிருந்து நீங்கிய, சுயாதீன அலகொன்றே முன்மொழியப்பட்டுள்ளது. அப்போது MCC கொடை வளங்கள் தொடர்பான நிதி முகாமைத்துவ அதிகாரம் அரசிடமிருந்து விடுபடுகிறது. இது அரசியலமைப்புக்கு முரணானதாகும். இது தவிர, இங்கு இந்த அலகு இலங்கை அரசாங்கத்திலிருந்து மாத்திரமே சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டு ஒப்பந்தம் மற்றும் PIA இல் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனமாக MCA – Sri Lanka கம்பனி குறிப்பிடப்பட்டிருப்பினும், நடைமுறைக் கோணத்தில் நோக்கும்போது இலங்கை அரசின் நிறுவனக் கட்டமைப்புக்கு MCA – Sri Lanka கம்பனியின் அலுவல்கள் சம்பந்தமாகத் தலையீடு செய்ய முடியாத முறையிலேயே எல்லா ஏற்பாடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகிறது. எனினும், அதன் எல்லாப் பணிகளுக்கும் MCC இன் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, இந்த உத்தேச முறைமை மற்றும் நிறுவனக் கட்டமைப்பை ஏற்றுக்கொள்ள முடியாது.

8.2 <u>MCC பெறுகை வழிகாட்டல்களைப் பயன்படுத்துவதில் தவறு ஏதும் உள்ளதா?</u>

பல்வேறுபட்ட வெளிநாட்டுதவி மூலங்களிலிருந்து வளங்களைப் பெற்றுக்கொள்ளும்போது அந்தந்தக் கடன் அல்லது உதவி மூலத்திற்கு மாத்திரமேயுரிய விசேடமான பெறுகை வழிகாட்டல்களைத் தயாரித்து தமது பெறுகை ஆணைக்குழுக்களின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இலங்கைக்குப் பயன்படுத்த முடியும். அதில் எந்தப் பிழையும் இல்லை. எனினும், நாட்டின் தேவைக்கு ஏற்றவாறு அந்த வழிகாட்டல்களை அவ்வப்போது திருத்துவதற்கு இறையாண்மையுள்ள இலங்கைக் குடியரசுக்கு காணப்படும் உரிமைக்குத் தாமே பாராளுமன்றச் சட்டம் ஊடாக

விலங்கிட்டுக்கொள்ள முன்மொழிவதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. MCC உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள அந்த மாதிரி நாட்டின் இறையாண்மையுடன் மோதுவதுடன், அதனூடாக அரசியலமைப்பும் மீறப்படுகிறது.

8.3 <u>இந்தக் கருத்திட்டங்கள் நீண்ட காலமாக தகுதி வாய்ந்த ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகள், பங்குதாரர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஆழமான கலந்துரையாடல்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளமையினால், அவற்றினூடாக நாட்டு நலனில் பாதிப்பு ஏற்பட மாட்டாது அல்லவா?</u>

இந்தக் கருத்திட்டங்கள் இலங்கையினால் உருவாக்கப்பட்டதாக கூறப்படினும் கடிதங்களைப் பரீசீலணை செய்யும்போது கிடைக்கும் காரணிகள் மூலம் அதனை உறுதிப்படுத்துவது கடினமாகும். குறைந்தபட்சம் தடைகள் மதிப்பீடேனும் இலங்கை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படவில்லை என்பதே குழுவின் நுண்ணாய்வு முடிவாகும். இலங்கையின் கேந்திர அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பயன்கள் - செலவின மதீப்பீடுகள் மற்றும் பல்துறைத் தாக்கங்கள் பற்றிய ஆய்வுகள் அந்த நிறுவனங்களின் மூலம் செய்யப்படவில்லை. பங்குதாரர்களுடன் (Stake-holders) விரிவான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவில்லை. அதற்கேற்ப, இந்தக் கருத்திட்டங்கள் தெரிவு மற்றும் முன்னுரிமைகளை நிர்ணயிப்பது தகுதியான முறையில் இடம்பெற்றதாகத் திருப்தியடைய முடியாது.

8.4 <u>இலங்கை வெளிநாடுகளிலிருந்து நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளும்போது அந்த பங்களிக்கும் நாடுகளின் சட்டங்களின் கீழ் வலுப்பெறும் வகையில் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதாயின் MCC உடன்படிக்கைக்கு அமெரிக்காவின் சட்டத்திற்குப் பதிலாக இரு தரப்பினருக்கும் பொதுவான சர்வதேச சட்டத்தைப் பயன்படுத்துவது மிகவும் நியாயமானதல்லவா?</u>

ஏனைய வெளிநாட்டுதவித் திட்டங்களில் பிணக்குத் தீர்வு அல்லது ஏனைய தெளிவான சட்டரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். பல்வேறுபட்ட பங்களிப்பு நாடுகள் தமது நாட்டின் சட்டத்தை அவ்வாறு கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்த முன்மொழிவது உண்மையே. அவ்வாறான நிலைமையை விடவும் அந்த உடன்படிக்கைகளுக்கு இலங்கையின் சட்டம் ஏற்புடைத்தானதாக அமையுமாயின் அது மிகவும் பொருத்தமானது. எனினும் இதன்போது குறைந்தபட்சம் உடன்படிக்கைக்கு ஏற்புடைத்தான சட்டம் மற்றும் பிணக்குத் தீர்வு முறைமை தெளிவாகிறது. MCC உடன்படிக்கையில் சர்வதேச சட்டமொன்று குறிப்பிடப்பட்டிருப்பினும், அந்தக் குறிப்பீடு சட்டரீதியாகத் தெளிவற்றது; பிணக்குகள் எவ்வாறு தீர்க்கப்பட வேண்டும் என்பது

தீர்மானிக்கப்படவில்லை. எனவே, இந்தக் கொடை சம்பந்தமான கருத்து வேறுபாடொன்று உருவாகுமாயின் எவ்வகையான தாக்கங்களுக்கு இலங்கை முகங்கொடுக்க வேண்டியேற்படும் என்பதைப் புரிந்துகொள்ள முடியாது. இந்த நிலைமை பொருத்தமானதல்ல.

8.5 <u>MCC பிரதிநிதிகளுக்கு தண்டைகளிலிருந்து விலக்கீட்டுரிமை வழங்குவதில் இருக்க முடியுமான பாதிப்பு யாது?</u>

இலங்கை அரச நிறுவனங்களினூடாக அரசின் முழுமையான வழிநடாத்தலின் கீழ் இந்த MCC கருத்திட்டம் செயற்படுத்தப்படுமாயின், அதன் முன்னேற்ற மீளாய்வுக்குத் தேவையான குறைந்தபட்ச மற்றும் வரையறுத்த பணியாட்தொகுதிக்கு தண்டனைகளிலிருந்து விலக்கீட்டுரிமை வழங்குவதில் சிக்கல் இல்லை. அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்கும், USAID/ MCC பணியாட்தொகுதிகளுக்கு ஏலவே அந்த விலக்கீட்டுரிமை தூதுவர் சிறப்புரிமைகள் தொடர்பான 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. எனவே, MCC உடன்படிக்கை மூலம் எதிர்பார்க்கப்படும் மேலதிக விலக்கீட்டுரிமை யாது, எதற்காக என்பதே பிரச்சினையாகும்.

உத்தேச நிகழ்ச்சித்திட்டத்தில் வெறுமனே பங்களிப்பாளரினதும், முன்னேற்ற மீளாய்வாளரினதும் வகிபாகத்திற்கு அப்பால் மிகவும் செயல்திறமுடைய தலையீடொன்றை MCC நிறுவனம் எதிர்பார்க்கிறது என்பதே இதன் மூலம் புலனாகிறது. MCA – Sri Lanka கம்பனியின் அனைத்துப் பணிகளிலும் தலையீடு செய்வதற்கான அதிகாரங்களைத் தமக்கு உடைமையாக்கிக் கொள்ள MCC உடன்படிக்கையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை மூலம் இது மிகவும் தெளிவாகிறது. அதற்கேற்ப, இந்த நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தும் போர்வையில் வரையறையின்றி வருகை தர முடியுமான பணியாட்தொகுதி அனைவருக்கும் வரிச் சலுகைகள், பயணங்களை மேற்கொள்வதற்கான சுதந்திரம், நாட்டின் நீதிமன்ற அமைப்பில் விலக்கீட்டுரிமை ஆகியவற்றை வழங்குவது மிகவும் ஆபத்தானதாக அமையலாம். அவ்வாறான நிலைமையில் ஏற்பட முடியுமான சிக்கலான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ACSA மற்றும் SOFA ஆகிய உடன்படிக்கைகளின் ஏற்பாடுகள்கூட செயலுருப் பெறுவதற்கான வாய்ப்புக்களைப் புறந்தள்ள முடியாது. அதனால், இந்த நிலைமையை ஏனைய வெளிநாட்டு வளப் பங்களிப்பாளர்களுக்கு அல்லது USAID போன்ற அமெரிக்க தூதுவர் சிறப்புரிமைகளைப் பெறும் பணியாட்தொகுதிகளுக்கு வழங்கப்படும் விலக்கீட்டுரிமையுடன் ஒப்பிட முடியாது.

8.6 <u>புலமைச் சொத்து உரிமையை நிதிக் கொடை வழங்கும் நிறுவனத்திற்கு ஒப்படைப்பது தவறானதா?</u>

இவ்வாறு ஒப்படைப்பதன் எதிர்பார்ப்பு எந்த நோக்கத்தை முன்னிறுத்தி செய்யப்பட்டிருப்பினும், அது பொருளாதார வளர்ச்சி மற்றும் தேசிய பாதுகாப்புக் கோணத்தில் பொருத்தமானதாக அமையவில்லை. மேலும், இவ்வாறு ஆதனங்களின் புலமைச் சொத்து உரிமை MCC க்கு ஒப்படைக்கப்படின், அந்த ஆதனங்களைப் பயன்படுத்தும்போது அவற்றுக்கு ஏற்புடைய பொருளாதார உரிமைக் (economic rights) கட்டணங்களை MCC நிறுவனத்திற்கு இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டியேற்படும் சந்தர்ப்பங்களைப் புறந்தள்ள முடியாது. எனவே, நிகழ்ச்சித்திட்ட ஆதனங்களின் புலமைச் சொத்து உரிமையை இலங்கையினால் பிறருக்கு உடைமையாக்க முடியாது. அத்துடன், தமது உதவியின் கீழ் உருவாக்கப்படும் நிகழ்ச்சித்திட்ட ஆதனங்களின் புலமைச் சொத்து உரிமையை MCC நிறுவனம் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதனை, வீடொன்றைக் கட்டுவதற்கு உதவி வழங்குபவர் அந்த வீட்டின் சாவிகளைக் கோரி நிற்பது போன்ற நிலைமையுடன் ஒப்பிட முடியும். இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவில் அடிப்படையிலேயே அவ்வாறு பெற்றுக்கொள்ளும் சொத்துக்களின் உரிமையை இலங்கையின் நோக்கங்களுக்கு முரணாகப் பயன்படுத்துவதில்லை என நம்பிக்கை கொள்ள வேண்டுமாயின், தமக்குத் தேவையான மற்றும் இலங்கை தமது எல்லைகளுக்குட்பட்டு வழங்க முடியுமான ஆதனமொன்றை ஏற்புடைய பங்களிப்பாளருக்கு வழங்குவதற்குத் தயங்க மாட்டாது என அத்தர்க்கத்தின் அடிப்படையிலேய MCC நிறுவனத்தினால் நம்பிக்கை கொள்ள முடியுமாக இருக்க வேண்டும். உடன்படிக்கை நிபந்தனைகள் மூலம் அந்த சொத்துக்களைத் தமக்கு உடைமையாக்கிக் கொள்ள முயற்சிப்பதன் ஊடாக இலங்கை தொடர்பாக அவ்வாறான நம்பிக்கையொன்று MCC நிறுவனத்திற்கு இல்லை என்பதே அதன் மூலம் வெளிப்படுகிறது.

8.7 <u>ஏனைய வெளிநாட்டுதவித் திட்டங்கள் இலங்கைக்கு வழங்கும் கொடைகளை உடனடியாக நிறுத்த முடியுமாயின், MCC இனால் ஏன் அவ்வாறு செய்ய முடியாது?</u>

இது வரை இலங்கையினுள் செயற்படுத்தப்பட்ட எந்தவொரு அபிவிருத்தி உதவித் திட்டத்திற்காகவும் சிக்கலான, இலங்கை இன்னும் முழுமையாக அறியாமலிருக்க வாய்ப்புள்ள தாக்கங்களுடைய, அன்னியமான சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு இலங்கையை அடிபணியச் செய்கின்ற ஏற்பாடுகளையுடைய உடன்படிக்கைகளை இலங்கைப் பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றி வலுப்பெறச் செய்வதற்கான நிபந்தனையொன்று எமது நாட்டிற்கு முன்வைக்கப்படவில்லை. எனவே தான் அவ்வாறான நிலைமையில் உடன்படிக்கையொன்று இடைநிறுத்தப்படுவது என்பது வெறுமனே ஏற்புடைய அபிவிருத்திக் கருத்திட்டம் நின்று போவது மாத்திரமாயினும், MCC முன்மொழிவுகள் சம்பந்தமாக அவ்வாறு எளிதாக விபரிக்க முடியாது.

மேலும், முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப உடன்படிக்கை இடைநிறுத்தப்படினும், MCC பிரதிநிதிகளுக்கு மற்றும் ஏற்புடைய கருத்திட்டங்களைச் செயற்படுத்துகின்ற முதலீட்டாளர்களுக்குத் தேவைப்படின் தொடர்ந்தும் நாட்டினுள் தங்கியிருக்க முடியும். அதற்கேற்ப, மோதல்கள் ஏற்படுவதற்கும் அதன் மூலம் ACSA, SOFA Peace Corp போன்ற உடன்படிக்கைகளின் ஏற்பாடுகள் செயலுருப் பெறுவதற்குமான வாய்ப்புக்களைப் புறந்தள்ள முடியாது.

8.8 <u>கொழும்பு – திருகோணமலை பொருளாதார இடைவழியொன்று MCC முன்மொழிவுகளில் உள்ளதா? அவ்வாறு இருப்பின் அதிலுள்ள தவறு யாது?</u>

முதலில், MCC முன்மொழிவுகளில் கொழும்பு – திருகோணமலை பொருளாதார இடைவழியொன்று உள்ளது என்று கூற வேண்டும். அது பற்றி தடைகளை மதிப்பீடு செய்யும் அறிக்கையில் (இணைப்பு - 4: 66 ஆம் பக்கம்) உள்ளதுடன், 2018 செப்டம்பர் 25 ஆந் திகதி MCC இன் காணிக் கருத்திட்ட அபிவிருத்திக் குழுவினால் இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிகளுக்குச் செய்துள்ள முன்வைப்பிலும் (அட்டவணை – 8) இந்த இடைவழி முன்மொழிவு உள்ளடங்கியுள்ளது. மேலும், கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களினால் 2018 ஜூன் 21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ள PMO/NC/09/2018 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பிலும் கொழும்பு – திருகோணமலைப் பொருளாதார இடைவழி MCC நிகழ்ச்சித்திட்டத்தின் காணிக் கருத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இணைப்பு – 5C).[16]

இரண்டாவது, இந்த இடைவழி 2011 இல் தயாரிக்கப்பட்ட தேசிய பௌதீகத் திட்டத்தில் இல்லாமை மற்றும் 2017 புதிய திட்டத்தில் முன்வைக்கப்படுவதற்கு முன்னர் 2016 இன் இறுதிப் பகுதியில் நிறைவடைந்திருந்த HUCID தடைகள் மதிப்பீட்டில் குறிப்பிடப்படுவதன் மூலம், அந்த முன்மொழிவு இலங்கையின் தேவைக்காக இலங்கை அரச நிறுவனங்களினால் வரைவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் கருத்து சவாலுக்கு உட்படுத்தப்படுகிறது. மூன்றாவது,

[16] எவ்வ்வாறாயினும், இந்த ஆய்வுக்காக குழுவுக்கு வழங்கப்பட்ட கூட்டு ஒப்பந் உடன்படிக்கையில் Executive Version (இணைப்பு – 9) இல் "கொழும்பு - திருகோணமலை பொருளாதார இடைவழி" தொடர்பான குறிப்பீடு இல்லை. எனினும், அதற்கு ஏற்புடைய காணி நிர்வாகச் சீர்திருத்தக் கருத்திட்டம் அவ்வாறே உள்ளது. எந்தப் பெயரிலாயினும் ஒரே கருத்திட்டங்களின் தொகுதியே செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமை அதன் மூலம் மிகவும் தெளிவாகிறது. அதற்கேற்ப, கூட்டு ஒப்பந்தத்தின் Executive Version உடன்படிக்கை வரைவில் இடைவழிப் பெயரை நீக்குவதன் பின்புலம் கொழும்பு – திருகோணமலை பொருளாதார இடைவழி முன்மொழிவொன்று உடன்படிக்கையில் இல்லை எனக் கூறி பரவலாக சமூகத்தை தவறாக வழிநடாத்துவதற்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சியா என இயல்பாகவே வினவத் தோன்றுகிறது.

உடன்படிக்கையைத் தனியாக அன்றி ACSA, SOFA, Peace Corps உடன்படிக்கைகளுடன் இணைத்துக் கருத்திற்கொள்ளும்போது தான் இந்த இடைவழி முன்மொழிவில் காணப்படும் அபாயம் அவதானிக்கப்படுவதாக இது பற்றி பகுப்பாய்வு அறிக்கையொன்றை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு வழங்கி வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் செய்யப்பட்டுள்ள விளக்கவுரையிலும் (இணைப்பு – 14 மற்றும் அட்டவணை - 3: F1-53) தெளிவாக வெளிப்படுகிறது.

விடயங்கள் இவ்வாறு காணப்படுகின்றமையினால், இந்த இடைவழியுடைய கருத்திட்டப் பகுதி போதியளவில் பகுப்பாய்வு செய்யப்பட்டு அல்லது நாட்டு நலனில் அதன் மூலம் ஏற்பட முடியுமான தாக்கங்கள் சிறப்பாக ஆய்வு செய்யப்பட்டு உருவாக்கப்பட்டதல்ல என்பதே முடிவாகும். அதற்கேற்ப, இந்தக் கருத்திட்டப் பகுதி நிகழ்ச்சித்திட்டத்தினுள் இருப்பது பொருத்தமற்றதாகும்.

8.9 <u>MCC முன்மொழிவுகளின் காணி தொடர்பான கருத்திட்டங்கள் இலங்கை அரசாங்கம் "பிம் சவியவின்" கீழ் ஏலவே செயற்படுத்தப்படுகின்றமையினால், அவை பொருத்தமற்றவை எனக் கூற முடியாது அல்லவா? அதற்கு வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்குப் பதிலாக MCC உதவியைப் பெறுவது தவறானதா?</u>

*பிம் சவிய* கருத்திட்டம் சம்பந்தமாக சில சிக்கல்கள் இருப்பினும், அது இலங்கையின் கருத்திட்டம் என்பதும், MCC கொடையுடன் அல்லது அது இல்லாமல் செயற்படுத்தப்படுகின்றது என்பதும் உண்மையாகும். எனினும், MCC முன்மொழிவில் இருப்பது பிம் சவிய கருத்திட்டத்திலுள்ள அம்சங்கள் மாத்திரமல்ல. உதாரணமாக, அனுமதிப்பத்திரங்களின் அடிப்படையில் பயன்படுத்தப்படும் அரச காணிகளுக்கு அறுதி உறுதிப்பத்திரங்களை வழங்குவது *பிம் சவியவில்* உள்ளடங்கவில்லை என்பதுடன், அது MCC கருத்திட்டத்தில் உள்ள பாராதூரமான விளைவுகள் இருக்க முடியுமானதொரு கருத்திட்டப் பகுதியாகும். அதன் மூலம் உள்நாட்டுக் காணிகள் குவிப்புக்கு உட்படுதல் மற்றும் வணிகமயமாக்கப்படுதலுக்கு உட்பட்டு காணிகளை இழந்த மக்கள் உருவாவதற்கும், வெளிநாட்டு சக்திகளினால் எமது நாட்டின் காணிகள் அபகரிக்கப்படுவதற்கும் வழியேற்படுத்தப்படலாம். அத்துடன், அந்தக் கருத்திட்டப் பகுதி நாட்டில் நிலவும் சட்டரீதியான சட்டகத்திற்கு முரணாக உள்ளதுடன், அதனைச் செயற்படுத்துவதற்குத் தேவையான சட்டங்களை வகுப்பதற்கு இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளும் தோல்வியடைந்துள்ளன. அவ்வாறான நிலைமையுடைய கருத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கெனக் கூறி உதவி உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திடுவது பயனற்ற செயற்பாடாகும்.

மேலும், காணிகளை அளவையிடுதல் மற்றும் தகவல் தரவுக் களஞ்சியங்களைத் தயாரித்தல் தேசிய பாதுகாப்புக்குக்கூட கூர்உணர்வுடைய அலுவல்கள் என்பதால், அவற்றைச்

செயற்படுத்துவதற்கு வெளிநாட்டுக் கம்பனிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அவை உட்பட நிகழ்ச்சித்திட்ட ஆதனங்களின் புலமைச் சொத்துக்களை MCC நிறுவனத்திற்கு உடைமையாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கு மேலதிகமாக, அதன் காரணமாகவே வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்வதை விடவும் கொடை முறைமையைப் பயன்படுத்துவது பயன்மிக்கது என்பது உண்மையாயினும், அந்தக் கொடை எதற்காக பெறப்படுகிறது, அவ்வாறான கொடையின் அனுகூலமான மற்றும்/ அல்லது தீங்கான விளைவுகள் யாவை என்பது பற்றி முதலிலேய தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டியுள்ளது.

8.10 <u>காணிக் கருத்திட்டத்திற்கு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், போக்குவரத்துக் கருத்திட்டத்தற்கு அவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படாமைக்கான காரணம் அந்தக் கருத்திட்டம் அனுகூலமானது என்பதா?</u>

MCC முன்மொழிவுகளில் காணிக் கருத்திட்டத்தைப் போலன்றி போக்குவரத்துக் கருத்திட்டம், விசேடமாக பேரூந்துச் சேவைகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டப் பகுதி, குறைந்தபட்சம் ஏற்புடைய அமைச்சிலேனும் சிறப்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுகிறது. அத்துடன், பொதுப் போக்குவரத்து அபிவிருத்தியில் உள்ளடங்கும் அந்த பேரூந்துச் சேவைக் கருத்திட்டப் பகுதி பெருந்தெருக்கள் அபிவிருத்திப் பகுதியை விடவும் சமூகரீதியாக சிறந்த பிரதிபலன்களை ஏற்படுத்துவதற்கான உயர்வான ஆற்றல் உள்ளது. எனினும், நாட்டின் பேரூந்துச் சேவைகளில் மிகவும் பாரியளவில் பெண் துன்புறுத்தல் இடம்பெறுகிறது எனக் குறிப்பிடப்படுவது உண்மையானதல்ல. மேலும், அவ்வாறான துன்புறுத்தல் இடம்பெறினும், அதனை நீக்குவதற்கு வெளிநாட்டுதவிக் கருத்திட்டமொன்று தேவையாகும் எனத் தீர்மானிப்பது நகைப்புக்கிடமானதாகும். மேலும் பேரூந்துக் கருத்திட்டம் நன்மைகள் மிகுந்தனவாக காணப்படினும், நாட்டின் ஒட்டுமொத்தமான பல்துறை ஆய்வொன்று மூலம் இந்தக் கருத்திட்டத்திற்கான முன்னுரிமை தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. மேலும், கருத்திட்ட வெளியீடுகளின் புலமைச் சொத்து உரிமை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு உடைமையாவதற்குத் தேவையான நிபந்தனைகள்கூட விதிக்கப்பட்டுள்ளமை வீதிப் பாதுகாப்புக்கும், பிரமுகர்களின் பாதுகாப்புக்கும் அபாயமானதாக அமைய முடியும்.

8.11 <u>பாராளுமன்றச் சட்டமாக சாதாரண பெரும்பான்மையொன்று மூலம் நிறைவேற்றி MCC நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வது மிகவும் வெளிப்படையான, ஜனநாயகரீதியான, நிலையான முறைமையொன்று அல்லவா?</u>

முதலீடுகளுக்கு நிலைத்தன்மை தேவைப்படின் அதனை அரசியலமைப்பின் 157 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஊடாக பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை அனுமதி மூலம் வழங்க முடியும். அவ்வாறு செய்வதற்குப் பதிலாக எமது நாட்டுக்கு அன்னியமானது மற்றும் அரசியலமைப்புக்கும் முரணானது எனத் தெளிவாக விளங்கும் சட்ட ஏற்பாடுகள் கொண்ட உடன்படிக்கையொன்றைச் சட்டமாக சாதாரண பெரும்பான்மை மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற மேற்கொள்ளும் முயற்சி பொதுமக்களுக்கு உரித்தான சட்ட மற்றும் யாப்பு உருவாக்கத்திற்கான மீற முடியாத மற்றும் இறையாண்மை மிகுந்த உரிமைக்குத் தடை ஏற்படுத்துவதாகும். அதன் மீது மண்ணை வாரியிறைப்பதாகும்.

9. **<u>முடிவுகள் மற்றும் விதந்துரைகள்</u>**

9.1 மேற்குறிப்பிட்ட தகவல் திரட்டுதல்கள், அவதானங்கள் மற்றும் மதிப்பீடுகள் மூலம் குழுவினால் பின்வரும் அனுமானங்களுக்கும் முடிவுகளுக்கும் வர முடிகிறது:

I. மூலதன வளங்களுக்கான பற்றாக்குறையுடைய, கடன் சுமையினால் துவண்டு போன இலங்கையின் அடிப்படையான பொருளாதாரத் தடைகளை அகற்றுவதற்கான முதலீடுகளுக்குத் தேவையான நிதி வளங்களை நாட்டின் வெளிநாட்டுக் கடன் சுமையினை அதிகரித்துக்கொள்ளாது பெற்றுக்கொள்ளும் ஆற்றல் MCC கொடையில் இருக்கின்ற போதிலும், அதில் உள்ளடங்கும் நிபந்தனைகளின் கீழ் மற்றும் உத்தேச முறைமைகள் ஊடாக இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதன் மூலம் மற்றும் ஏற்புடைய கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் நாட்டின் எதிர்காலத்தில், தேசிய பொருளாதாரத்தில், இறையாண்மையில் ஏற்பட முடியுமான பல்வேறுபட்ட மற்றும் பல்துறைத் தாக்கங்கள் தொடர்பாக இலங்கை சார்பில் இலங்கை அரச தரப்பினர்களினால் முறையாகவும், போதியளவிலும் ஆய்வு செய்யப்படல்லை.

II. 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதலில் முன்வைக்கப்பட்டுள்ள இந்த MCC கொடை முன்மொழிவு 2005, 2006 ஆம் ஆண்டுகளில் மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், உடன்படிக்கைக்கு ஏற்புடைய நிபந்தனைகளில் காணப்படும் இவ்வாறான சிக்கலான நிபந்தனைகள் காரணமாகவே அது தொடர்பாக அப்போது காணப்பட்ட அரசாங்கம் எவ்விதமான மேலதிக நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை எனக் குழு அனுமானிக்கிறது.

III. MCC கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை (MCC Compact), நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கை (PIA), செயற்படுத்தும் அலகாக முன்மொழியப்பட்டுள்ள MCA – Sri Lanka கம்பனியின் அமைப்பு விதிகளின் வரைவினை (தனித்தனியாக அன்றி) ஒன்றிணைத்துப் பகுப்பாய்வு செய்யும்போது, இலங்கையின் அரசியலமைப்புக்கும் நாட்டில் நிலவும் சட்டத்திற்கும் முரணான மற்றும் நாட்டினுள் வெளிநாட்டு வளங்கள் முகாமைத்துவம் செய்யப்படும் அரச நிறுவனச் சட்டகம் தவறவிடப்படும் வகையில் உத்தேச MCC கூட்டு ஒப்பந்தத்தின் முறைமைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படுகிறது.

IV. அவ்வாறான நிபந்தனைகள் மற்றும் முறைமைகளில் இருக்க முடியுமான தாக்கங்கள் சம்பந்தமாக ஆழமான நுண்ணாய்வொன்றைச் செய்யாது மற்றும் / அல்லது அரசொன்றினால்

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பின்பற்ற வேண்டிய கவனமான, சிரத்தையான அம்சங்களைக் கருத்திற்கொள்ளாமலேயே 2019 ஒக்டோபர் மாதம் 29 ஆந் திகதி MCC உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் இருக்க முடியுமான பாதகமான நிலைமைகள் தொடர்பாக அப்போதைய அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு மற்றும் வெளிநாட்டமைச்சினால் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்குச் சமர்ப்பித்துள்ள அவதானங்கள் மற்றும் விதந்துரைகளைக் கருத்திற்கொள்ளாமலேயே இவ்வாறு செய்யப்பட்டுள்ளமை மூலம் இது தெளிவாகிறது. எனவே, ஐக்கிய அமெரிக்காவின் மூலோபாய நோக்கங்களின் (விசேடமாக, இந்து – பசுபிக் மூலோபாயம்) அடிப்படையில் இருக்க முடியுமான மற்றும் ACSA, SOFA, US Peace Corps Volunteer Agreement மற்றும் Quadrilateral Security Dialog (QSD) போன்ற அணுகல்களுக்கு குறைநிரப்பியாக அமைவதற்கான வாய்ப்புள்ளதாகத் தெரிகின்ற, ஏலவே வரைவு செய்யப்பட்டுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளின் கீழ் மற்றும் கருத்திட்ட முன்மொழிவுகளுடன் இந்த MCC கொடையைப் பெறுவதற்கான உடன்படிக்கையைச் செய்வது பொருத்தமற்றது.

V. விசேடமாக,

(அ) MCA – Sri Lanka கம்பனி இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலிருந்து தூரப்படுத்தி வைக்கப்படும் வகையிலும், MCC நிறுவனத்தின் அறிவுறுத்தல்கள் - வழிகாட்டல்கள் - அனுமதிகளின் கீழ் செயற்படுத்தப்படும் வகையிலும் ஏற்பாடுகளை மேற்கொண்டு அந்தக் கம்பனி ஊடாக இந்த முதலீட்டுக் கருத்திட்டங்களைச் செயற்படுத்த முன்வைக்கப்படும் முன்மொழிவை ஏற்றுக்கொள்ள முடியாது.

(ஆ) MCA – Sri Lanka க்குப் பதிலாக எமது நாட்டினுள் வெளிநாட்டு வளங்கள் முகாமைத்துவம் செய்யப்படும் பொதுவான அரச நிறுவனக் கட்டமைப்பை இந்தக் கொடைக்கும் பயன்படுத்துவதற்கு MCC நிறுவனம் இணங்காவிடின், அதனூடாக எமது நாட்டின் தேசிய நோக்கங்களுக்குப் பாதகமான நிகழ்வுகள் இடம்பெற முடியுமான அபாயமொன்று உருவாகிறது.

(இ) மேலும், இந்த முறைமைக்கு இலங்கை இணங்கினால், அதனை முன்மாதிரியாகக் கொண்டு எமது நாட்டிற்கு அபிவிருத்தி உதவிகளை வழங்கும் சீனா, ஜப்பான், இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற ஏனைய நெருக்கமான பங்களிப்பாளர்களும் இந்த மாதிரியை அவர்களின் கொடைகளுக்கு ஏற்புடையதாக்கிக்கொள்வதற்கான வாய்ப்புக்களைப் புறந்தள்ள முடியாது. எனவே இது வரையும் இலங்கையினால் பொதுவாகப் பின்பற்றப்பட்ட வெளிநாட்டு வளங்கள் முகாமைத்துவ முறைமைகளுக்குப் புறம்பாக செல்வதற்கு எந்தவிதமான வெளிநாட்டுதவித் திட்டங்களுக்கும் அனுமதியளிக்க முடியாது.

9.2 மேலே விபரிக்கப்பட்ட ஒட்டுமொத்த நுண்ணாய்வுகளினதும் பெறுபேறுகளுக்கும் ஏற்ப, பின்வரும் இறுதி விதந்துரைகள் குழுவினால் அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது:

(i) 2019 ஒக்டோபர் மாதம் 29 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் தற்போது உருவாக்கப்பட்டுள்ள சட்டகம், நிபந்தனைகள், செயற்படுத்தும் முறைமை, முதலீட்டுக் கருத்திட்டங்களை உள்ளடக்கிய MCC முன்மொழிவுகள் உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திடக் கூடாது.

(ii) MCC கூட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் ஏதோ ஒரு வகையில் கருத்திற்கொள்வதாயின், அதற்கு முன்னர் இலங்கை நாட்டின் இறையாண்மையினை ஆபத்தில் வீழ்த்துவதற்கு வாய்ப்புள்ள, எதிர்கால சமூக பொருளாதார அரசியல் சுயாதீனத்தில், நலனில் பாதிப்பாக அமைய முடியுமான அனைத்துப் பிரிவுகள், நிபந்தனைகள், கருத்திட்டங்கள், செயற்படுத்தும் முறைமைகளும் நீக்கப்படும் வகையில் கூட்டு ஒப்பந்தம் மற்றும் அதற்கு ஏற்புடைய அனைத்து உடன்படிக்கை வரைவுகள் மற்றும் கருத்திட்ட முன்மொழிவுகளிலும் திருத்தம் செய்ய வேண்டும்.

(iii) அவ்வாறான திருத்தமொன்றின்போது,

(அ) இந்த முன்மொழிவுகளுக்கு ஏற்புடைய கொடைகளைப் பயன்படுத்துவதற்கு இது வரையும் எமது நாட்டினுள் முறையாக அமுலாகிய வெளிநாட்டு வளங்கள் முகாமைத்துவ முறைமை பயன்படுத்தப்படும் வகையிலும், அதற்காக ஏற்புடைய கொடை நிதிகள் அரச திறைசேறி ஊடாக முகாமைத்துவம் செய்யப்படும் வகையிலும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதுடன், ஏற்புடைய கருத்திட்டங்கள் இலங்கையில் ஏலவே நிறுவப்பட்டுள்ள அரச நிறுவனக் கட்டமைப்பினுள் வழிநடாத்தப்படும் வகையில் முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புக் கட்டமைப்புக்களைத் தயாரிக்க வேண்டும்.

(ஆ) வேறு நாடொன்றில் வலுப் பெறும் சட்டங்கள் மற்றும்/ அல்லது ஒழுங்குவிதிகளை இலங்கையினுள் ஏதாவதொரு வகையில் வலுப்பெறச் செய்வதற்கு வழிவகுக்கின்ற பொறிமுறையொன்றை எந்தவொரு சர்வதேச இணக்கப்பாடு காரணமாகவும் நிறுவுதல் கூடாது.

(இ) இலங்கையின் இறையாண்மை, தேசிய பொருளாதாரத் தன்னிறைவுக்குப் பாதிப்பாக அமைய முடியுமான எந்தவொரு நிபந்தனையும், பிரிவும் அல்லது கருத்திட்டமும் முன்மொழிவுகளில் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

(ஈ) முதலீட்டுக்கான உத்தேசக் கருத்திட்டங்களைச் தெரிவு செய்துள்ள அடிப்படை மற்றும் அதற்கு இலங்கை அரச தரப்பினால் பின்பற்றப்பட்டுள்ள முறைமை ஆகியன தெளிவற்றது. இதன்போது தேசிய பொருளாதாரரீதியாக முன்னுரிமை ஆய்வொன்று இடம்பெற்றதாக அவதானிக்க முடியவில்லை. அத்துடன், இந்தக் கருத்திட்டங்களில் தேசிய மற்றும் சமூக – பொருளாதாரரீதியாக அபாயமான அம்சங்களும் உள்ளமை புலனாகிறது. எனவே, ஒட்டுமொத்த முன்மொழிவுகள், கருத்திட்டங்களையும் மீண்டும் தயாரிக்க வேண்டும்.

(உ) விசேடமாக, இதன்போது கருத்து வேறுபாட்டுக்கு உட்பட்டுள்ள மற்றும் காணிக் குவிப்பு, துண்டாக்கல் அல்லது வெளிநாட்டுமயமாக்கல் போன்ற அபாயமான விளைவுகளுக்கு வழிவகுக்க முடியுமான, காணி தொடர்பான நிகழ்ச்சித்திட்ட அம்சத்தை முழுமையாக நீக்க வேண்டும்.

(ஊ) மேலும், கருத்திட்ட ஆதனங்கள் தொடர்பான அனைத்து தரவுகள், தகவல்கள் அரசின் புலமைச் சொத்தாக மாத்திரமே இருக்க வேண்டும் என்பதுடன், அது தொடர்பான எந்தவொரு உரிமையினையும் பிறிதொரு தரப்பினருக்கு உரித்தாகாமல் இருக்க வகை செய்ய வேண்டும்.

(iv) (அ) <u>மேலே (ii) மற்றும் (iii) இல் விதந்துரைக்கப்பட்டுள்ளவாறு கருத்திட்ட முன்மொழிவுகளுக்கு மற்றும் செயற்படுத்தும் முறைமைகளுக்கு ஏற்புடைய உடன்படிக்கை நிபந்தனைகளைத் திருத்த வேண்டும் எனவும்,</u>

(ஆ) அவ்வாறு திருத்துவதற்கு MCC இணங்குமாயின், அந்த திருத்தம் முறையான தொழில்சார் பங்கேற்புடன் செய்யப்பட வேண்டும் எனவும், அவ்வாறு தயாரிக்கப்படும் புதிய கட்டமைப்பு மற்றும் உடன்படிக்கை வரைவு, கருத்திட்ட முன்மொழிவுகள், உரிய தரப்பினரின் விரிவான, ஆழமான ஆய்வுக்குட்பட்ட பின்பு, பொது மக்களுடனான கலந்துரையாடல் மற்றும் பாராளுமன்றத்தில் பொருத்தமான பெரும்பான்மை அனுமதியுடன் தவிர, எந்த வகையிலும் கைச்சாத்திடப்படவோ மற்றும்/ அல்லது செயற்படுத்தப்படவோ கூடாது எனவும்,

(இ) <u>அவ்வாறு செய்வதற்கு MCC நிறுவனம் இணங்காவிடின், உடன்படிக்கையை நிராகரிக்க வேண்டும் எனவும்,</u>

குழு விதந்துரைக்கிறது.

9.3 MCC முன்மொழிவுகள் மற்றும் அதில் உள்ளடங்கியுள்ள உடன்படிக்கை வரைவுகளின் தொகுதி சம்பந்தமான எந்தவொரு உத்தியோகபூர்வமான தகவலும் 2019 ஒக்டோபர் 29 ஆந் திகதி அதனைக் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அனுமதியைப் பெறும் வரை பொதுமக்களின் பரிசீலணைக்கு அல்லது ஆய்வுக்காக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதாகவும், கூட்டு ஒப்பந்த உடன்படிக்கையின் வரைவு தவிர ஏனைய எந்தவொரு உடன்படிக்கை வரைவோ அல்லது ஆவணமோ இது வரைக்கும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை எனவும் குழுவின் அவதானத்திற்கு உட்பட்டது. இவ்வாறு இந்த உடன்படிக்கை வரைவுகளைப் பொதுமக்களின் அவதானத்திலிருந்து தூரமாக்கி வைப்பது இலங்கை பின்பற்றும் ஜனநாயக மற்றும் வெளிப்படைத்தன்மையுள்ள இராஜதந்திரப் பெறுமானங்களுக்குப் பொருத்தமற்றது எனக் குழு கருதுகிறது. அந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளில் இருக்க முடியுமான பிரதிகூலங்களைப் பொதுமக்களிடமிருந்து மறைத்து வைக்கும் நோக்குடனேயே உடன்படிக்கை வரைவுக்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கும் வரையும் அந்த வரைவுகள் பகிரங்கப்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருப்பின் அது விரும்பத்தக்கதல்ல என்பதுடன், அதற்காகவே அவ்வாறு மறைத்து வைக்கப்பட்டதோ என்ற சந்தேகம் எழுவதும் நியாயமானதே என்பதும் குழுவின் கருத்தாகும்.

தற்போதைய புவியரசியல் - பொருளாதார சூழ்நிலையில் நேரடியான காலனித்துவம் மூலமன்றி பிரதானமாக இருதரப்பு மற்றும் பல்தரப்பு சர்வதேச உடன்படிக்கைகள் ஊடாகவே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சர்வதேச அதிகார சக்திகளின் பலிக்கடாவாக மாறுவதுடன், அந்த நாடுகளின் மக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினர் சர்வதேசரீதியாக கடனாளிகளாகவும் அடிமைகளாகவும் மாற்றப்படுகின்றனர். எனவே, தமக்காகவும், தமது எதிர்கால சந்ததிகளுக்காகவும் அரசுகளினால் கைச்சாத்திடப்படும் உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் தொடர்பாக முன்கூட்டியே அறிந்துகொள்ள அந்த நாடுகளின் மக்களுக்கு ஏக உரிமை காணப்படுகிறது என்பது குழுவின் கருத்தாகும்.

எனவே, அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மீறப்பட முடியாத மக்கள் இறையாண்மை மற்றும் பிறருக்குச் சொந்தமாக்க முடியாத தேசிய இறையாண்மை உரித்தான பொதுமக்களிடமிருந்து இவ்வாறான முன்மொழிவுகள் மற்றும் வரைவுகளை மறைத்து வைப்பது பொருத்தமற்றது எனவும் குழு வலியுறுத்துகிறது. <u>இவ்வாறு மறைத்து வைப்பதற்கு தற்போது வாய்ப்பளிக்கும் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பொருத்தமான முறையில் திருத்தம் செய்து குறித்த வாய்ப்புக்களை உரியவாறு நீக்க வேண்டும் எனக் குழு முன்மொழிகிறது</u>.

<u>மேலும், சர்வதேச உடன்படிக்கை முன்மொழிவுகளை வரைவு செய்யும்போது, ஆய்வு செய்யும்போது மற்றும் அனுமதிக்கும்போது தேசிய நோக்கங்கள் நிறைவேற்றப்படுவது மற்றும் நாட்டு நலன் முன்னிறுத்தப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதால் அந்தப் பணியில் கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டிய முறையான, தொழில்சார் மற்றும் முழுமையான</u>

வெளிப்படைத்தன்மையுடைய முறைமையொன்றைச் சட்டமாக்க வேண்டும் எனக் குழு விதந்துரைக்கிறது.

நாடொன்று சர்வதேச உடன்படிக்கையொன்றை மேற்கொள்வது என்பது நிறைவேற்றுத் தர விடயமொன்று மாத்திரமன்றி பொதுமக்களுக்கு உரித்தான மீறப்பட முடியாத சட்ட உருவாக்க இறையாண்மையிலும் தாக்கங்கள் காணப்பட முடியுமான மற்றும் நாட்டின் எதிர்கால சந்ததியினர்கூட பங்காளராவதற்கு வழிவகுக்கக்கூடிய மிகவும் முக்கியமான பணியாகும். எனவே, இலங்கைக் குடியரசு சர்வதேசரீதியாக கடமைப்பாட்டுக்கு உட்படுத்தப்படுகின்ற உடன்படிக்கையொன்றில் நிறைவேற்றுத் தரத்தினர் கைச்சாத்திடுவதற்கு முன்னர் சந்தர்ப்பத்திற்கேற்ப பாராளுமன்றத்தில் பெற்றுக்கொள்ளப்படும் பொருத்தமான பெரும்பான்மை இணக்காப்பாடுடைய சட்டமன்ற அனுமதியைப் பெறுவது முன்நிபந்தனையாக ஆக்கப்படும் வகையில் சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பு ஏற்பாடுகளை நிறைவேற்றுவது அத்தியாவசியமாகும் என்பது குழுவின் இறுதி விதந்துரையாகும்.

# <u>இணைப்புகள்</u>

1. **குழுவின் உத்தியோகபூர்வ அலுவல்களுக்கு ஏற்புடைய ஆவணங்கள்**

    1A. PMO/CM/64/2019 ஆம் இலக்க, 2019 டிசம்பர் 18 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரம் மற்றும் அதற்கு ஏற்புடைய அனுமதி

    1B. கடமைப்பொறுப்புக்கள் விபரம்

    1C. 2020 மார்ச் 29 ஆந் திகதிய கடிதம்

    1D. இறுதி அறிக்கை வரைவை வழங்குவதற்கான காலம் நீடிக்கப்பட்ட PMO/2/2/2/Rev.MCC ஆம் இலக்க, 2020 ஏப்ரல் 17 ஆந் திகதிய கடிதம்

2. **ஆரம்பம் முதல் முதநிலை முன்மொழிவு வரை MCC செயன்முறைக்கு ஏற்புடைய ஆவணங்கள்**

    2A. அமெரிக்கத் தூதுவரினால் அனுப்பப்பட்ட 2004 பெப்ரவரி 11 ஆந் திகதிய கடிதம்

    2B. அமெரிக்க தூதுரகத்தினால் அனுப்பப்பட்டுள்ள 373 ஆம் இலக்க தூதுவர் குறிப்பு

    2C. அமெரிக்க அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட 2005 டிசம்பர் 08 ஆந் திகதிய கடிதம்

    2D. அமெரிக்க அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட 2006 டிசம்பர் 07 ஆந் திகதிய கடிதம்

    2E. 2015 டிசம்பர் 16 ஆந் திகதிய MCC கட்டுப்பாட்டுச் சபைத் தீர்மானம்

    2F. PMO/06/03/CM/56/2016 ஆம் இலக்க, 2016 ஜூலை 05 ஆந் திகதிய அமைச்சரவை நிருபம்

    2G. MCC முதநிலை நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பணிப்பாளரினால் இலங்கைத் தூதரகத்திற்கு அனுப்பப்பட்ட 2016 ஒக்டோபர் 19 ஆந் திகதிய கடிதம்

3. **MCC கூட்டு ஒப்பந்த முன்மொழிவினை உருவாக்குவதற்கு ஏற்புடைய ஆவணங்கள்**

    3A. நிகழ்ச்சித்திட்டத்தை கூட்டு ஒப்பந்தமாகத் தரமுயர்த்துவது தொடர்பான 2016 டிசம்பர் 14 ஆந் திகதிய ஊடக அறிவித்தல்

    3B. பிரதம அமைச்சர் அலுவலகத்தில் ஒருங்கிணைப்பு அலுவலகமொன்றை நிறுவுவதற்கான 2017 மார்ச் 14 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம்

    3C. PMO/06/03/CM/19/2017 ஆம் இலக்க, 2017 பெப்ரவரி 28 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரம்

    3D. 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய MCC நிறுவனத்தின் காங்கிரஸ் சபைத் தீர்மானம்

3E. பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் MCC கூட்டு ஒப்பந்த வழிநடாத்தல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட 2017 மே மாதம் 09 ஆந் திகதிய எண்ணக்கருக் குறிப்புக்கள்

3F. MNPEA/2018/2018/152 ஆம் இலக்க, 2018 செப்டம்பர் 17 ஆந் திகதிய இணைந்த அமைச்சரவை நிருபம்

3G. MF/ERD/26/CM/2019/106 ஆம் இலக்க, 2019 மார்ச் 25 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பு

**4. MCC கூட்டு ஒப்பந்தத்திற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள தடைகளை மதிப்பீடு செய்யும் அறிக்கை**

**5. MCC உடன் ஏலவே கைச்சாத்திடப்பட்டுள்ள அடிப்படையான உடன்படிக்கைகள் தொடர்பான ஆவணங்கள்**

5A. 2017 ஜூலை 26 ஆந் திகதிய கொடைகள் மற்றும் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கை

5B. 2018 ஜூன் 18 ஆந் திகதிய திருத்தப்பட்ட மற்றும் மீண்டும் வெளியிடப்பட்ட கொடைகள் மற்றும் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கை

5C. PMO/NC/09/2018 ஆம் இலக்க, 2018 ஜூன் 21 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பு

5D. 2019 ஒக்டோபர் மாதம் 29 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானம்

**6. MCC கூட்டு ஒப்பந்த உடன்படிக்கை [Compact Agreement]**

**7. நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான உடன்படிக்கை [Program Implementation Agreement, or PIA]**

**8. MCA – Sri Lanka கம்பனிக்காக வரைவு செய்யப்பட்டுள்ள கம்பனி அமைப்பு விதிகள் [Articles of Association]**

**9. பொதுமக்களின் கருத்துக் கோரல் மூலம் திரட்டப்பட்ட தகவல்களின் சுருக்கம்**

9A. கூட்டு ஒப்பந்தத்தை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்த அரச நிறுவனங்கள்/அதிகாரிகள் மற்றும் MCC பிரதிநிதிகளிடம் பெற்றுக்கொண்ட தகவல்களின் சுருக்கம்

9B. பொதுமக்களின் கருத்துக் கோரல் மூலம் திரட்டப்பட்ட தகவல்களின் சுருக்கம்

**10. அரச நிறுவனங்களிடமிருந்து கிடைத்த உத்தியோகபூர்வத் தகவல்கள்**

10A. வெளிநாட்டுத் தொடர்புகள் அமைச்சின் அறிக்கை

10B. தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அறிக்கை

10C. வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கை

10D. காணி அமைச்சின் அறிக்கை

10E. காணி ஆணையாளர் திணைக்களத்தின் அறிக்கை

10F. இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் அறிக்கை

10G. போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சின் அறிக்கை

10H. நகர அபிவிருத்தி, நீர் வழங்கல், வீடமைப்பு வசதிகள் அமைச்சின் அறிக்கை

**11. கௌரவ சட்டமா அதிபரின் கருத்து மற்றும் அறிவுறுத்தல்களைக் கோரிய கடிதங்கள்**

**12. MCC உடன்படிக்கை தொடர்பாக தேசிய பொருளாதாரப் பேரவையின் அவதானங்கள்**

**13. அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் அவதானங்கள்**

**14. MCC உடன்படிக்கை உட்பட அமெரிக்க உடன்படிக்கைகளை நுண்ணாய்வு செய்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அறிக்கை**

**15. MCC நிகழ்ச்சித்திட்டங்களின் விளைவுகள் தொடர்பான ஒப்பீட்டுரீதியான மதிப்பீடுகள்**

15A. தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ள MCC நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பொழிப்புச் செய்யப்பட்ட தகவல்கள்

15B. MCC நிகழ்ச்சித்திட்டங்களின் விளைவுகள் தொடர்பான பொருளாதாரரீதியான ஆய்வொன்று

**16. 2003 காணி உரிமைகள் சட்ட வரைவு தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு**

**17. MCC இடமிருந்து கௌரவ சட்டமா அதிபருக்கு வொஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக 2018 செப்டம்பர் மாதம் 27 ஆந் திகதி அனுப்பப்பட்ட கடிதம்**

**18. MCC முன்மொழிவுகள் சம்பந்தமாக பேராசிரியர் டப்.டீ. லக்ஷ்மன் அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள பகுப்பாய்வுரீதியான கட்டுரை (BiZnomics; 2020 ஜனவரி)**

**19. "சஹஸர" கருத்திட்டப் பணிப்பாளரினால் மாநகர அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளரின் அவதானத்திற்காக அனுப்பப்பட்ட நுண்ணாய்வுரீதியான குறிப்பு**

## அட்டவணைகள்

1. **குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் மற்றும் குறிப்புக்கள்**

   1A. அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்பக் குறிப்பு (2020/01/13)

   1B. குழுவின் ஆரம்ப அறிக்கை (2020/02/14)

   1C. கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலக் குறிப்பு (2020/04/30)

2. **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கூட்டு ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கான குழுவினால் (CDT) 2017.11.10 ஆந் திகதி MCC நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள MCC கூட்டு ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான கருத்திட்ட முன்மொழிவு**

3. **வெளிநாட்டுத் தொடர்புகள் அமைச்சினால் MCC முன்மொழிவுகள் சம்பந்தமாகப் பேணிச் செல்லப்பட்டுள்ள கோப்புகள்**

4. **MCC நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான சர்வதேச அனுபவ அறிக்கைகள்**

5. **MCC நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குவது சம்பந்தமான மேலதிக ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள்**

6. **பொதுமக்களிடமிருந்து மற்றும் தொழில்சார் நிறுவனங்களிடமிருந்து குழுவுக்கு அஞ்சல் மற்றும் மின்னஞ்சல் மூலம் கிடைத்த கருத்துக்கள், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள்**

7. **அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 2019 ஜூன் 01 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள "இந்து – பசுபிக் மூலோபாயம்"**

8. **MCC இன் காணிக் கருத்திட்ட அபிவிருத்திக் குழுவினால் இலங்கை அரச அதிகாரிகளுக்கு 2018 செப்டம்பர் 25 ஆந் திகதி செய்துள்ள முன்வைப்பு.**